உதயன்

27



www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 318 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை (09/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00

# குடாநாட்டில் படைகளுக்கு காணிகள் தரவே முடியாது

## தமிழ்க் கட்சிகள் ஒருமித்த கருத்து; டக்ளஸும் அதற்கு இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 8

யாழ்.குடாநாட்டில் படையினரின் தேவைகளுக்காகக் காணிகள் எதனையும் வழங்குவதில்லை எனவும், காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை முற்றாக எதிர்ப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த குரலில் கருத்து வெளியிட்டுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு ஒருமித்த கருத்து வெளியிடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோரும் ஆதரவு தெரிவித்தனர்.

இதனையடுத்து இதுகுறித்து எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி விசேட கூட்டம் ஒன்றை நடத்தி ஆராய்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

படையினருக்கு யாழ்ப்பாணத்தில் காணிகள் வழங்கப்படக்கூடாது. அதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. எனவே இந்தக் காணிக சுவீகரிப்பு முற்றாக நிறுத்தப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குரலில்

பார்க்க பக்கம் 4

### கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் சாவு

கிளிநொச்சி, ஒக்.9

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். கிளிநொச்சி ஏ-9 வீதியில் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு அண்மையில் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டு வந்த 'டிப்பர்' வாகனமும் கிளிநொச்சியில் இருந்து திருமுறிகண்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டன. இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் பாலிநகர், வவுணிக்குளத்தைச்

பார்க்க பக்கம் 4

**8** கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடல்வழி முற்றுகைப் போராட்டத்தில் நேற்று நூற்றுக்கணக்கான மீனவர்கள் ஈடுபட்டனர்.

**9** அமெரிக்காவின் உதவியுடன் வடகொரியாவை முழுமையாகச் சென்று தாக்கும் வகையில் தென்கொரியா தனது ஏவுகணைத் திறனை மும்மடங்கு அதிகரிக்கவுள்ளது.

**10** சூடானின் இராணுவ விமானமொன்று தலைநகர் ஹார்டோமுக்கு அப்பால் கடந்த ஞாயிற்றுக்கிழமை விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்தனர்.

**17** நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் எதிர்க்கட்சிகள் பின்பற்றி வரும் நிலைப்பாடானது தீர்வுத் திட்ட முனைப்புக்களில் பின்னடைவை ஏற்படுத்தும் என்கிறார் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

# இந்தியாவும் சீனாவும் இலங்கை மீது படையெடுத்தா வரப் போகின்றன?

## பின்னர் எதற்குத் தேசிய பாதுகாப்பு என ஆளுநரிடம் சுரேஷ் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக்.9

தேசிய பாதுகாப்பு என்று அடிக்கடி கூறுகிறீர்கள். அப்படியானால் இந்தியா அல்லது சீனா இங்கு படையெடுக்கப் போகிறதா?

இப்படி வடமாகாண ஆளுநரிடம் கேள்வி எழுப்பி னார் நாடாளுமன்ற உறுப்பி னர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

காணிகளைச் சுவீகரிப்பது பற்றி இங்கு பேசும் போது அவற்றைத் தேசிய பாதுகாப்புக் கருதி அரசு சுவீகரிக்கும் என்று ஆளுநர் கூறினார்.

போர் முடிந்துவிட்டது. புலிகள் இல்லை என்று உங்கள் அரசுதான் சொல்லியுள்ளது. அப்படியானால் ஏன் இந்த தேசிய பாதுகாப்பு? இந்தியா அல்லது சீனா படையெடுக்கப் போகின்றதா? பின்னர் எதற்கு இந்தத் தேசியப் பாதுகாப்பு? மக்கள் இல்லாத மண்ணில் தேசியப் பாதுகாப்பு ஏன்?

இராணுவத்தினருக்கு கிராமத்துக்குக் கிராமம் காணி வழங்

பார்க்க பக்கம் 4

## திணறிய அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஒக்.9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சரமாரியான கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது அரச அதிகாரிகளும், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுத் திணறினர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

பார்க்க பக்கம் 4

### ஆலமரக்கிளை தலையில் வீழ்ந்து முதியவர் சாவு

வடமராட்சி, ஒக்.9

புலோலி, குரும்பசிட்டி வைரவர் கோயில் வளாகத்தில் உள்ள சனசமூகப் புனரமைப்புக்காக அங்கு நின்றிருந்த ஆலமரம் தறிக்கப்பட்டபோது அதன் கிளை தலை மேல் விழுந்ததில் ஒய்வூதியரான அதே இடத்தைச் சேர்ந்த இராசையா தபேந்திரன் (வயது-65) என்பவர் மரணமானார்.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்

பார்க்க பக்கம் 4

## மஞ்சுள மீதான தாக்குதலின் பின்னணியில் சர்வதேசச் சதி

### அமைச்சர் எஸ்.பி சொல்கிறார்

கொழும்பு, ஒக் 9

நீதிச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் தாக்கப்பட்டதன் பின்னணியில், செயற்பட்ட தேசிய மற்றும் சர்வதேசச் சூழ்ச்சியாளர்கள் இருப்பதாக உயர்க்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதிச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதல் குறித்துக் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் திஸாநாயக்க இதனைக் கூறியுள்ளார். நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் நீதித்துறையில் தலையிட வேண்டாம் எனக் கூறி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையால் ஜனாதிபதி, அரசு என நாம் அனைவரும் அதிருப்தியடைந்தோம். நீதித் துறையில் தலையிடத் தயா

பார்க்க பக்கம் 4

# நாடு முழுவதும் நீதித்துறை நேற்று அடியோடு முடக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.9

நீதிச்சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து நீதித்துறையினர் நேற்று

பார்க்க பக்கம் 4




### கடலில் மூழ்கி மீனவர் இறப்பு

வடமராட்சி, ஒக்.9

கடற்றொழிலாளி ஒருவர் நீந்திச் செல்லும்போது கடலில் மூழ்கிப் பரிதாபகரமாக மரணமடைந்த சம்பவம் பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்பகுதியில் நேற்று நண்பகல் நடைபெற்றுள்ளது.

விசுவமடு, கல்லாறைச் சேர்ந்த வீரகுமார் ரஞ்சித்

பார்க்க பக்கம் 4

## முள்ளிவாய்க்காலில் முறுகல்

### இராணுவம் பொதுமக்கள் இடையே

யாழ்ப்பாணம்,ஒக்.9

முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்றுக்காலை படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் முறுகல்நிலை தோன்றியதாகவும் இதன்போது பொது மக்கள் பலர் சிறுகாயங்களுக்கு உள்ளானதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட ஒருவர் தகவல் தருகையில்,

முள்ளிவாய்க்கால் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக பொதுமக்கள் தமது உடைமைகளை மீட்க படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். இதனால் ஏராளமான பொதுமக்கள் இறுதிப்போரின் போது தாம் கைவிட்டு வந்த பொருள்களை மீட்டெடுக்கும் பணி

பார்க்க பக்கம் 4

## இலங்கைப் படைக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதை தடுக்க முடியாது

### இந்திய உயர்நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, ஒக்.9

இந்தியாவில் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கத் தடை விதிக்க முடியாது என்று உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழர்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,ஒக். 9

முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து பொலிஸ் அதிரடிப் படையினர் ஒரு தொகுதி ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற அதிரடிப் படையினர் குறித்த ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

விமானத்தைத் தாக்கும் ஆயுதம் ஒன்றும் மற்றும் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 1563, விமான எதிர்ப்புக் குண்டுகள் 160 மற்றும் பல்வேறு துப்பாக்கிகளுக்கும் பயன்படுத்தப்படும் குண்டுகள் 1300 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

## டெங்கு நோய் கட்டுப்பாட்டு கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக். 9

நல்லூர் பிரதேசமட்ட டெங்குநோய் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக்கூட்டத்தில்திணைக்களத்தின் அதிகாரிகளைக் கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (த-7)

# அரச தாதியர்கள் நாளை நாடு முழுவதும் பகிஷ்கரிப்பு

### பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

யாழ்ப்பாணம்,ஒக்.9

மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரித்தல், வகுப்பு சார்ந்த உயர்வுகளை வழங்கல், இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் நாளை புதன்கிழமை மதியம் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சில தொழிற்சங்கங்கள் வழங்கும் பொய்யான வாக்குறுதிகளால் தாதிச் சேவைக்கு எந்த உரிமையும் கிடைக்காது என்பது தெளிவாகிறது. அவ்வாறான பொய்க்கும், புரட்டுக்கும் ஏமாறாமல் ஒன்றாகத் திரண்டு வலுவுடன் போராடுவதைத்தான் நாம் இனி மேற்கொள்ள வேண்டும்.

* வைத்திய சேவைக்கு மாதாந்த தொலைபேசிக் கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா வழங்கப்படும் போது விசேட வகுப்பைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. ஏனைய வகுப்புத் தாதியருக்கு எவ்விதக் கொடுப்பனவும் இல்லை.

* 4 வருட தொழில் ரீதியான பட்டப்படிப்பாக ஆரம்பிக்கப்பட்ட தாதிப்பட்டப்படிப்பு கற்கை நெறிக்காலம், அரச வைத்திய அதிகாரிகள் சங்க அழுத்தம் காரணமாக 3 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. பட்டப்படிப்பை முடித்து 2 வருடங்கள் கடந்த போதும் பட்டதாரித் தாதியர்கள் இதுவரை சேவையில் இணைக்கப்படவில்லை.

* வைத்தியர் ஒருவர் தலைவர் பதவி வகிக்கும் ஒரே தாதியர் சங்கமே எமது சங்கம், பட்டதாரி தாதியர்களுக்குக்கூட இந்தச் சங்கத்தில் பதவியளிக்கப்படுவது இல்லை.

* அரச சேவைகள் ஆணையகத்தால் அனுமதியளிக்கப்பட்ட குழு வகுப்புக்களை உறுதியாகப் பெயரிட்டு வெளியிடப்படவேண்டிய சுற்றுநிருபம் தாதிச் சேவைக்கு இன்னமும் வெளியிடப்படவில்லை.

* 6 மாத கால தாதியர் மனநலப் பயிற்சி நெறியை செல்லுபடியற்றதாக்கி 2 மாத குறுகிய தாதி மனநலப் பயிற்சியொன்றைத் தாதியருக்கு வழங்கும் சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

* தாதிப் பின்படிப்புக் கல்லூரியினை தேசிய தாதிக் கல்வி நிறுவனமாக உயர்த்தி பட்டப்படிப்பினை வழங்கும் வாக்குறுதி அளிக்கப்பட்டு 3 வருடங்களாகியும் இதுவரை பட்டங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

* வருடாந்த இடமாற்றச் சபை 2011 இல் நடத்தப்படவில்லை. இடமாற்றங்களும் வழங்கப்படவில்லை. இந்த வருடத்துக்கான இடமாற்ற விண்ணப்பங்களும் கோரப்படவில்லை.

* மக்கள் சுகாதார தாதி உத்தியோகத்தர் பதவி இரண்டாவது முறையாகவும் அமைச்சர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு 2 வருடங்களாகின்ற போதும் இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

* நோய்க் கட்டுப்பாட்டு தாதி உத்தியோகத்தர், சுகாதாரக் கல்வி தாதி உத்தியோகத்தர் சேவைகள் இல்லாமல் போகும் சவாலை எதிர் நோக்கியுள்ளன.

* வைத்திய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் தாதிச்சேவையின் எந்த வகுப்பினருக்கும் இதுவரைவழங்கப்படவில்லை.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே நாளை புதன்கிழமை இந்தப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாகச் சங்கம் மேலும் தெரிவித்தது. (த-4)

## இந்தியாவுக்கு செல்லும் குழுவில் 5 கட்சிகளும் பங்கேற்காதது ஏன்?

### வினோ எம்.பி. கேள்வி



மன்னார், ஒக்.9

இந்திய அரசின் அழைப்பின் நிமித்தம் டில்லி செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் அல்லது கட்சித் தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ளாமையானது மிகுந்த ஏமாற்றத்தையும், சந்தேகத்தையும் நமக்குத் தோற்றுவித்துள்ளது.

கூட்டமைப்புக்குள் குழப்ப நிலை அல்லது முரண்பாடுகள் தோன்றுவதற்கு கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களே பொறுப்புக் கூற வேண்டும். கூட்டமைப்பின் தலைவர்கள் ஒன்றாக, ஓர் அணியாக ஏன் இந்தியா செல்லக் கூடாது?.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தொடர்பாகக் கருத்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாளைய தினம் இந்திய அரச பிரதிநிதிகளுடன் சந்திப்பை மேற்கொள்ளவுள்ள கூட்டமைப்பு தூதுக் குழுவில் 2 அல்லது 3 கட்சிகளின் பிரதிநிதிகளே செல்லவுள்ளதாக அறிகின்றேன். 5 கட்சிகள் கொண்ட கூட்டமைப்பில் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

ஆகவே இது முழுமையான ஒரு கூட்டமைப்பின் பயணமாக அமையப்போவதில்லை. அப்படி எம்மால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. கூட்டமைப்பை இந்தியா வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டவுடன் என்னென்ன விடயங்களைப் பேசப் போகிறோம் என கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு அல்லது கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்ந்திருக்க வேண்டும்.

தூதுக்குழுவில் யார் யார் பங்குபற்றுவது என்பதை யார் தீர்மானிக்கிறார்கள் எனத் தெரியவில்லை. ஐந்து கட்சிகளின் தலைவர்களும் கூட்டாக கூட்டமைப்பாக இந்தியாவுக்குச் செல்ல வேண்டும்.

கூட்டமைப்பைக் குலைப்பதற்கோ, சிதைப்பதற்கோ வெளிநாட்டுச் சக்திகளுக்கு, உள்நாட்டு அல்லது உட்கட்சி சக்திகளுக்கு இடமளிக்க முடியாது. - என்றார். (த- )

## யாழ்.மாவட்டத்தில் நேற்றுமுதல் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம்

தென்மராட்சி, ஒக்.9

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு பொலிஸார், சுகாதாரப் பகுதியினர் மற்றும் வலய அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பார்வையிட வருகை தரவுள்ளனர்.

தங்கள் பாடசாலைச் சுற்றுச்சூழலை டெங்கு பரவாதவாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-9)

## அரசு தரப்புடனான பேச்சு சாதகமாக முடிவுற்றது

### பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளன பிரதிநிதிகளுக்கும், நிதி அமைச்சின் செயலாளர் குழுவுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடல் சாதகமாக முடிவுற்றுள்ளது. எனவே பல்கலைக்கழக பணிப்புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக நாளை நடைபெறவுள்ள சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளன பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த இரு தினங்களாக எமக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன. நேற்று எமக்கும், நிதி அமைச்சின் செயலாளர் ஜெயசுந்தர தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகள் எமது கோரிக்கைக்குச் சாதகமான முறையில் அமைந்திருந்தன. இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்கள் அறிக்கை வடிவில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது குறித்து இறுதி அறிக்கை இன்று மதியமளவில் எமது சம்மேளனத்துக்கு அரசால் கையளிக்கப்படவுள்ளது.

இதன் பின்னர் குறித்த அறிக்கை தொடர்பில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டு, பணிப்புறக்கணிப்பை கைவிடுவதா இல்லையா என்பது பற்றி இறுதி முடிவெடுக்கப்படும் - என்றார். (ங-4)

# தனிஈழம் அமைப்பது குறித்து ஐ.நா. வாக்கெடுப்பு அவசியம்

### கர்நாடக பொங்கு தமிழில் தீர்மானம்

பெங்களூர், ஒக்.9

தமிழீழ மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான தனி ஈழம் அமைவது குறித்து இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடம் ஐ.நா. சபை இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

இவ்வாறு கோரி கடந்த 30 ஆம் திகதி இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குப் பெங்களூர் நகர மண்டபத்தில் நடைபெற்றது கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.எடியூராப்பா விளக்கேற்றி வைத்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் தொடங்கிய நிகழ்வில் நிகழ்வுச்சுடரை கர்நாடக முன்னாள் முதல்வர் பி.எஸ்.எடியூரப்பா, திரைப்பட இயக்குநர் பாரதிராஜா ஆகியோர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து முன்னாள் முதல்வர் எடியூரப்பா சிறப்புரை ஆற்றினார்.

இந்தியாவில் கர்நாடகா மாநிலத்துக்கும் தமிழ்நாட்டு மாநிலத்துக்கும் காவிரி ஆற்றுப் பிரச்சினை எல்லையில் ஒருபக்கம் நடந்தேறிக் கொண்டிருக்கையில் பெங்க [illegible] இந்த பொங்கு தமிழ் நிகழ்வு



அமைந்துள்ளது. இதில் தமிழ் உணர்வாளர்கள் மலேசிய தமிழ்நெறிக்கழக தலைவர் திருமாவளவன், மே17 இயக்க தலைவர் திருமுருகன், காந்திய மக்கள் இயக்க தலைவர் தமிழருவி மணியன், இயக்குநர் இமயம் பாரதிராஜர, கேரளா தமிழ் சங்க தலைவர் முத்துராமன், உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்து பொங்கு தமிழ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள்.

பொங்கு தமிழ் தீர்மானங்கள் வருமாறு;

தீர்மானம் 1- தமிழீழ மக்களின் நீண்டகால கோரிக்கையான தனி ஈழம் அமைவது குறித்து இலங்கை தமிழர்கள் உள்ளிட்ட உலகெங்கும் வாழும் தமிழின மக்கள் அனைவரிடமும் ஐ.நா.சபை இரகசியமான வாக்கெடுப்பு நடத்தவேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்களிடையே வாக்கெடுப்பு நடத்து முன்னர் தமிழர் வாழும் பகுதிகளிலுள்ள இலங்கைப் படையினர் முற்றிலும் வெளியேறவேண்டும் என்று பொங்குதமிழ் பேரவை கேட்டுக்கொள்கின்றது.

தீர்மானம் 2- தமிழீழத்தில் நடைபெற்ற படுகொலைகள் அனைத்தும் மனித குலத்துக்கு எதிரான போர் குற்றமாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இந்த மாபெரும் இனப்படுகொலையை மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதியை போர்க்குற்றவாளியாக அறிவிக்கவேண்டும் என இந்த அவை கேட்டுக்கொள்கின்றது.

இலங்கை ஜனாதிபதியை எந்த காரணத்துக்காகவும் இந்தியாவுக்குள் அனுமதிக்கக்கூடாது என்று இந்த பொங்கு தமிழ் மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

தீர்மானம் 3- அழிந்து வரும் தமிழ்மொழிக்கல்வியை நிலைநாட்ட, தமிழ் மொழியை முதல் அல்லது மூன்றாம் மொழியாக தமது குழந்தைகளுக்கு கற்பிக்க தமிழ் பெற்றோர் முன்வர வேண்டும் என பொங்கு தமிழ் மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

தீர்மானம் 4- உலகப் பொது மறையாம் திருக்குறளை இந்திய தேசிய நூல்களில் ஒன்றாக மத்திய அரசு அறிவிக்கவேண்டும் என்றும் செம்மொழியாம் தமிழ்மொழியை இந்திய தேசிய ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்கவேண்டும் எனப் பொங்கு தமிழ் பேரவை கேட்டுக்கொள்கின்றது.

தீர்மானம் 5- கர்நாடக மாநிலத்தில் ஏறத்தாழ ஒரு கோடி தமிழர்கள் வாழ்ந்து வருகிறோம். பெருவாரியான தமிழர்கள் இம்மண்ணிலே பிறந்து மண்ணில் மைந்தர்களாக வாழ்ந்துவருகின்றோம். கர்நாடகத்தமிழர்கள் சாதி,மதம்,அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒரு குடையின் கீழ் ஒன்றுபடுவதன் வழியாக நமது உரிமைகளை பாதுகாக்க இயலும். எனவே கர்நாடகத்தமிழர்கள் தமிழர்களாக ஒன்று படவேண்டும் என இந்த பொங்கு தமிழ் மநாடு கேட்டுக்கொள்கின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலிகளை அமைக்க இயலாத முல்லை மாவட்ட விவசாயிகள்

முல்லைத்தீவு, ஒக்.9

முல்லைத்தீவு விவசாயிகள் தமது பயிர் நிலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு வேலிகளை அமைக்க முடியாத அவல நிலையிலுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடிகட்டைகள் மற்றும் கம்பிக்கட்டைகளை வெட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் இந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் கால்நடைகள் விவசாய நிலங்களினுள் பிரவேசித்து பயிர்களை அழித்து வருகின்றன.

கடந்த காலபோகம் மற்றும் சிறுபோகத்தின்போது விவசாயிகளின் பெருமளவு பயிர்கள் கால்நடைகளால் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கட்டைகளை வெட்டுவதற்கான அனுமதியைப் பெறுவதில் குழப்பகரமான நிலை நீடிப்பதால் விவசாயிகள் செய்வதறியாது குழம்பி நிற்பதைக் காண முடிகின்றது.

இங்குள்ளவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் மரங்கள் மற்றும் தடிகளைத் தினமும் பெருமளவில் ஏற்றிச் செல்வதைக் காண முடிகின்றது. ஆனால் ஒரு மண்வெட்டிப் பிடியைக் கூட வெட்ட முடியாத நிலையில் தாங்கள் இருப்பதாக இங்குள்ள விவசாயிகள் குமுறுவதைக் காண முடிகின்றது.

மேலும் வேலிகள் இல்லாத பயிர் நிலங்களுக்குள் செல்லும் கால்நடைகளுக்குத் தண்டம் விதிப்பதை விடுத்து வேலிகளை அமைப்பதற்கு உதவுமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# வவுனியாவில் திடீர் சுழிக்காற்று பறந்தன வீடுகளின் கூரைகள்

## ஒலுமடு பொது மண்டபத்தில் போசாக்கு உணவு நாசம்

வவுனியா மாவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் திடீரென வீசிய பலத்த காற்றினால் சில வீடுகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. பயன்தரு மரங்கள் பலவும் சரிந்து வீழ்ந்துள்ளன. எனினும் இதன்போது உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று தெரியவருகிறது.



நேற்றுப் பிற்பகல் 2 மணியில் இருந்து 4 மணிவரை சுழல் காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெய்தது. இதில் நெடுங்கேணி, ஒலுமடு, கீரிசுட்டான், துவரங்குளம் போன்ற இடங்களில் திடீரென வீசிய சுழிக்காற்றுக் காரணமாக 10 வீடுகள் வரை சிறு சேதத்துக்குள்ளாகின. இதில் ஒலுமடு பொது நோக்கு மண்டபத்தில் களஞ்சியப் பகுதியும் பலத்த சேதமடைந்தது. குறித்த கட்டடத்தின் கூரைப் பகுதி காற்றில் பறந்ததால் அதனூடாக உட்புகுந்த மழைநீர், அங்கு வைக்கப்பட்டிருந்த குழந்தைகளுக்கான போசாக்கு மா வகைகள் என்பவற்றை நனைத்து நாசமாக்கியது.

இது தவிர ஒலுமடு பிரதேசத்தின் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் சிலவற்றின் ஓடுகள் சில காற்றினால் தூக்கி வீசப்பட்டு உடைந்தன. இதனால் குறித்த வீடுகளில் இருந்த குடும்பங்கள் மழைநீரில் நனையவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வீட்டுப் பாவனைப் பொருள்களும் இதன்போது நனைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுழிக்காற்றுக்கு அஞ்சிய மக்கள் சிலர் பாதுகாப்பான இடங்களைத் தேடி விரைந்ததையும் அவதானிக்க முடிந்தது. அத்துடன் பயன்தரு மரங்களான வாழை, பலா,மா போன்றனவும் விவசாயப் பயிர்களும் இந்த சுழிக்காற்றால் நாசமாகின என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ங-435)

# கயட்டை காட்டுப் பகுதியில் மக்கள் நடமாடமுடியாத நிலை

முள்ளியவளை, ஒக்.9

முல்லைத்தீவு- நெடுங்கேணி வீதியில் உள்ள கயட்டை காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இடுகாட்டினூடாகச் செல்லும் வீதியில் மக்கள் நடமாட முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட முள்ளியவளையின் முல்லைத்தீவு நெடுங்கேணி வீதியில் தண்ணீரூற்று நெடுங்கேணிச் சந்தியிலிருந்து சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இடுகாட்டினூடாகச் செல்லும் வீதியிலேயே இவ்வாறான அவல நிலை தோன்றியுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதிகளில் அமைந்துள்ள மாட்டிறைச்சிக் கடைகளுக்குத் தேவையான இறைச்சியை வழங்குவதற்கென மாடுகள் இங்கு வைத்துத்தான் அறுக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் கழிவுகள் பைகளில் கட்டப்பட்டு இந்த வீதியோரத்தில் போடப்படுகின்றன. இவற்றிலிருந்து எழும் துர்நாற்றம் சகிக்க முடியாத அளவில் காணப்படுகின்றது.

இந்த நாற்றமெடுக்கும் பகுதியில் இராணுவக் காவலரண் ஒன்றும் அமைந்துள்ளது. பிரதேச சபையினரும், சுகாதாரப் பகுதியினரும் இந்த விடயம் தொடர்பாக அக்கறை செலுத்தாமல் உள்ளமை இப்பகுதி மக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (க-433)



ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலையிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சசிகுமார் அலெக்சன், சுரேஸ்குமார் மதுஷா, பாஸ்கரன் கயூரி, யுவராசா மிதுஷன் ஆகியோர் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (க-18)

# விசுவமடு ம.வியில் ஆசிரியர் தினம்

விசுவமடு மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சர்வதேச ஆசிரியர் தினமான கடந்த 6 ஆம் திகதி விசுவமடு மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் ஆசிரியர்கள் அழைத்து வரப்பட்டு மாணவத் தலைவன் கௌசிகன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இங்கு ஆசிரியர்கள் மாலை அணிவிக்கப்பட்டு மதிப்பளித்து மதிய உணவுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மாணவ, மாணவியரின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

ஒட்டுசுட்டானில்

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கு.கிருபாகரன் தலைமையில் இடம் பெற்றது.

முன்னதாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரர் ஆலயத்தில் அவர்களின் நல்லாசி வேண்டி பூசைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# கிளிநொச்சியில் கசிப்பு மூதாட்டிக்குத் தண்டம்

கிளிநொச்சி, ஒக்.9

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் கசிப்பு மற்றும் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு 40 ஆயிரம் ரூபா தண்டமும் கட்டாயச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஜெயந்தி நகர்ப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பை மறைத்து வைத்திருந்த மூதாட்டி ஒருவரைக் கடந்த 26 ஆம் திகதி மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

இவரைக் கடந்த 5 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் மூன்று போத்தல் கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் தான் சுற்றவாளி என மன்றுக்குத் தெரியப்படுத்தியமையை யடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

**இந்தப் பெண் குற்றவாளியெனக் கூறியதையடுத்து 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.**

கடந்த 5 ஆம் திகதி மீண்டும் வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டபோது இந்தப் பெண் குற்றவாளியெனக் கூறியதையடுத்து 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சிப் பளைப் பகுதியில் அரச சாராயத்தை அனுமதிப்பத்திரமின்றி விற்பனை செய்த ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் குறித்த நபர் ஏற்கனவே இரண்டு தடவைகள் சட்டவிரோதமான முறையில் அரச சாராயம் விற்பனை செய்தபோது கைது செய்யப்பட்டுத் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டமையால் ஒரு மாத கால கட்டாய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. (க-6)

# 46 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக நடமாடும் சேவை

நெடுங்கேணி, ஒக்.9

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 46 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக நடமாடும் சேவையொன்று இடம்பெற்றுள்ளது.

யூ.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த மூன்றாம் திகதி இந்த நடமாடும் சேவை இடம்பெற்றுள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலேயே இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், பொலிஸ் பதிவுக்கான பிரதி என்பவற்றையும், தேசிய அடையாள அட்டை, கடவுட்சீட்டு என்பவற்றையும் பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டியதை அவதானிக்க முடிந்தது.

இவற்றைப் போரின் போது தவறவிட்ட மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு யூ.என்.டி.பி. நிறுவனம் இந்த நடமாடும் சேவையை ஒழுங்கு செய்திருந்தது.

இதில் 500இக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு நன்மையடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-435)

# தொடர்பு கொள்ளவும்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இதுவரை நியமனம் கிடைக்காத விசேட தேவைக்குரிய பட்டதாரிகளை நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாவட்டச் சமூக சேவைகள் திணைக்களத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-6)

# மாகாண மட்டப் போட்டி

இடர் முகாமைத்துவ மாகாண மட்டப் போட்டி நாளை புதன்கிழமை வவுனியா வடக்கு ஆசிரிய வளநிலையத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் இப்போட்டி தரம் 6,7 என்பன ஒரு பிரிவாகவும் தரம் 8,9 என்பன ஒரு பிரிவாகவும், தரம் 10,11 என்பன ஒரு பிரிவாகவும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோட்ட மட்டத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்கள் இம்மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றலாம் எனவும் மாணவர்கள் அனைவரையும் உரிய நேரத்துக்குச் சமுகம் தருமாறும் வவுனியா வடக்கு இடர் முகாமைத்துவ இணைப்பாளர் [illegible] தெரிவித்துள்ளார். (க-422)

# ஆனந்தபுரம் கிராம மக்கள் கள்ளுத்தவறணையால் அவதி

## அருகிலுள்ள காணிகளில் 'அசிங்கம்'

அண்மையில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட ஆனந்தபுரம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியொன்றில் இயங்கி வரும் கள்ளுத் தவறணையால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பெண்கள் இதனருகில் அமைந்துள்ள வீதியைப் பயன்படுத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இங்கு கள்ளை அருந்துபவர்கள் அருகிலுள்ள காணிகளை அசிங்கப்படுத்தி வருவதால் இவற்றுக்கருகில் நெருங்க முடியாத அளவுக்குச் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கள் விற்பனை நிலையத்தை அமைப்பதற்கு ஒதுக்குப்புறமானதொரு இடத்தில் காணி வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை இது அகற்றப்படாத நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது.

இது தொடர்பாக இப்பகுதி பனை, தென்னைவள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினருக்கு அறிவித்துள்ள போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால் இப்பகுதி மக்கள் கவலையும், விசனமும் அடைந்துள்ளனர். (க-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திமாதாவின் திருத்தல திருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.9

பண்டத்தரிப்பு பத்திமாதா அன்னை திருத்தல வழிபாடுகள் நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.இதில் தினமும் திருச் செபமாலையுடன் திருவிழா ஆரம்பமாகி நடைபெறும்.

13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நோயாளருக்கான குணமாக்கல் வழிபாட்டை அருட்தந்தை லோறன்ஸ் அடிகளார் தலைமை தாங்கி நிகழ்த்துவார்.

## இந்தியாவும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கப்படுமாக இருந்தால் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மீண்டும் பிரச்சினை தோன்றும். மக்கள் தமது வீடுகளுக்குச் செல்லாது நடுத்தெருவில் நிற்கமுடியாது. - என்றார். (த-5)

## கிளிநொச்சி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சொந்த இடமாகவும் உருத்திரபுரம் கிளிநொச்சியை கொண் பச்சைமுத்து சுகந்தன் (வயது-29) என்பவரே உயிரிழந்துள்ளார்.உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-6-288)

## ஆலமரக்கிளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தின்போது காயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் ஒரு சில மணிநேரத்தில் அங்கு உயிரிழந்தார்.

இவரது இறப்பு குறித்துப் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்ஸன் தயான் விசாரணைகளை மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிஸார் சாட்சிகளை முற்படுத்தினார். விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (த-8)

## நாடு முழுவதும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாடெங்கிலும் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் யாவும் நேற்று ஸ்தம்பிதமடைந்தன. இன்று செவ்வாய்க்கிழமையும் பணிப்பகிஷ்கரிப்பைத் தொடர்வதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கு, மத்திய, தெற்கு, மேல் ஆகிய மாகாணங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நீதித்துறையினர் நேற்று கண்டனப் பேரணியை நடத்தினர்.

நாட்டிலுள்ள சகல நீதிவான்கள், மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள், சட்டத்தரணிகள் என நீதித்துறையைச் சார்ந்த அனைத்துத் தரப்பினரும் நேற்று சேவையிலிருந்து விலகியதால் வழக்கு விசாரணைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

சந்தேகநபரை உடன் கைதுசெய், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை அவசியம் ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு நீதித்துறையினர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நீதித்துறையினரின் ஆர்ப்பாட்டங்களில் எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். அதேவேளை, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீதான தாக்குதலைக் கண்டித்து ஜே.வி.பியும் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

இதேவேளை-

வடமாகாணத்திலும் இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்றது. யாழ்.மேல்நீதிமன்றம், யாழ்.நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி நீதிமன்றம், பருத்தித்துறை நீதிமன்றம், மல்லாகம் நீதிமன்றம், ஊர்காவற்றுறை நீதிமன்றம், கிளிநொச்சி நீதிமன்றம், முல்லைத்தீவு நீதிமன்றம், மன்னார் மேல்நீதிமன்றம், மன்னார் நீதிவான் நீதிமன்றம், வவுனியா மேல் நீதிமன்றம், வவுனியா நீதிவான் நீதிமன்றம் ஆகியனவும் நேற்று இந்தப் பகிஷ்கரிப்பால் செயலிழந்தன. (த-4-9-400-435-30)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களை இலட்சக்கணக்கில் கொன்று குவித்த இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் எந்த இடத்திலும் பயிற்சி கொடுக்கக் கூடாது என்று தமிழகக் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இதே கோரிக்கையை வலியுறுத்தி உயர்நீதிமன்றத்தில் ராஜாராமன் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அதில், இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் எங்குமே பயிற்சி அளிக்கக்கூடாது என்றும் இந்தியாவில் பயிற்சி அளிக்கத் தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்தமனு மீது நேற்று விசாரணை நடைபெற்றது. மனுவை விசாரித்த நீதிபதிகள், மனுதாரர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை கேள்விக்குள்ளாக்குகிறார் என்று கடிந்து கொண்டனர். மேலும் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதற்குத் தடை விதிக்க முடியாது என்றும் கூறி மனுவை நிராகரிப்புச் செய்து உத்தரவிட்டனர். (த)

## மஞ்சுள...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ரில்லை என ஜனாதிபதி தெரிவித்தார். தான் ஒரு சட்டத்தரணி என்ற வகையில் நீதிமன்றத்தின் சுதந்திரத்தை யும் உயர்வையும் கௌரவத்தையும் பாதுகாப்பதாக ஜனாதி பதி கூறினார். நீதித்துறையுடன் எந்த பிரச்சினையையும் ஏற்படுத்திக்கொள்ளத் தயாரில்லை என அவர் குறிப்பிட்டார். இதனால் அரசுக்குப் பெரும் பிரச்சினை ஏற்படும் என எதிர்பார்த்தவர்களுக்கு எதனையும் செய்து கொள்ள முடியாது, அவர்கள் மௌனமாகினர்.

இந்த நிலையில், ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நடத்தி அதனை அரசின் பக்கம் திசை திருப்ப பார்த்துள்ளனர். மஞ்சுள திலக்கரட்ன மீது தாக்குதல் நடத்திய செயற்பட்டுள்ள சூழ்ச்சியை பாரதூரமான செயற்பாடாக அரசு காண்கிறது.

எவ்வாறாயினும் இந்தத் தாக்குதலை அரசு வன்மையாகக் கண்டிக்கின்றது. இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தி சூழ்ச்சியாளர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (த)

## கடலில் மூழ்கி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குமார் (வயது-22) என்பரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கரையில் இருந்து சுமார் 2 மைல் தூரத்தில் நின்ற இழுவைப் படகை நோக்கி நீந்திச் சென்றவேளை அவர் கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நண்பகல் 12.30 மணியளில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து கடலில் மூழ்கிய மீனவரை மீட்கமுடியாத நிலையில் கடற்படையினரின் உதவி நாடப்பட்டது.

வடமாகாண கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் டி.எஸ்.குலவர்த்தனவின் பணிப்பின் பேரில் இரு டோறாப் படகுகளில் வந்த படையினர் தேடுதல் நடத்தி, மூழ்கி உயிரிழந்த ரஞ்சித்குமாரின் சடலத்தை நேற்றுப் பிற்பகல் 4.50 மணிக்கு மீட்டனர்.

மீட்கப்பட்ட சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்யன் தயான் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு சடலத்தை உறவினர்களிம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-8)

## முள்ளிவாய்க்காலில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யில் ஈடுபட்டிருந்தனர். நேற்றுக்காலை 8 மணியளவில் இவ்வாறு தமது பொருள்களை எடுத்துக்கொண்டிருந்த எங்களுக்கும் (பொது மக்களுக்கும்) அங்கு வந்த படையினருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது.

இந்த முறுகல் நிலை முற்றவே, தாம் கொண்டுவந்த தடிகள், பொல்லுகள் என்பவற்றால் எம்மைப் படையினர் விரட்டிவிரட்டி தாக்கினர். இதனால் நாங்கள் சிதறி ஓடினோம். எனினும் அவ்வாறு ஓடியவர்களில் இருவரைப் பிடித்த இராணுவம் அவர்களை கட்டி வைத்து கண்மூடித்தனமாகத் தாக்கியது.

''ஐயோ! எங்களை கட்டி வைத்து அடிக்கிறாங்கள். யாராவது வந்து காப்பாற்றுங்கள்'' என்று அந்த இருவரும் பெரும் குரலில் ஓலமிட்டனர். இதனைத் தொடர்ந்து கையில் அகப்பட்ட தடிகளுடன் விரைந்து சென்ற பொதுமக்கள் படையினர் மீது தாக்குதல் நடத்த முற்பட்டனர். இதன்போது இரு தரப்புக்கும் இடையே பெரும் கைகலப்புத் தோன்றியது. இறுதியில் பொதுமக்களின் அடி தாங்க முடியாமல் படையினர் ஓடிவிட்டனர். பின்னர் நாங்கள் படையினரால் கட்டி வைக்கப்பட்டிருந்த இருவரையும் மீட்டு வந்தோம். இந்தச் சம்பவத்துக்கு பின்னர் குறித்த பகுதிக்கு பொதுமக்கள் சென்று தம் உடைமைகளை எடுத்துவர படையினர் அனுமதி மறுத்துள்ளனர் - என்றார்.

எனினும் இந்தச் சம்பவம் குறித்து சுயாதீன தரப்புகளிடமிருந்து உறுதியான தகவல்களை நேற்றிரவு வரை பெற்றுக்கொள்ளமுடியவில்லை. (ங)

## திணறிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு யாழ்.மாவட்டத்தைப் பிரநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

ஒவ்வொரு திணைக்களங்களின் அரச அதிகாரிகளும், தமது திணைக்களங்களின் கீழான வேலைத் திட்டங்கள் தொடர்பில் விவரித்தனர்.

அவர்கள் விவரித்து முடிந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக ஒருவர் மாறி ஒருவர் அரச அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினர். அதற்கு அந்த அரச அதிகாரிகள் பதிலளிக்க முடியாது திணறினர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்குரிய புள்ளி விவரங்கள் இல்லாது அதிகாரிகள் தடுமாறினர்.

இதனிடையே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாயால் வருவதைச் சொல்லித் தப்பிக்க முயன்றார். இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடாப்பிடியாக நின்று கேள்வி கேட்டதால் அமைச்சர் எரிச்சலைடைந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்துத் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டார்.

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஒவ்வொரு விடயத்திலும் தேவையில்லாமல் மூக்கை நுழைத்து வாங்கிக் கட்டினார். (த-5)

## குடாநாட்டில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு கருத்து வெளியிட்ட அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார்,

'படையினருக்குக் காணிகள் வழங்கக் கூடாது என்பது எங்களுக்கும் விருப்பம்தான். அதற்காக மீண்டும் ஆயுதப் போராட்டத்தைச் சந்திக்க இந்த மக்கள் தயாரில்லை. இந்தக் காணி சுவீகரிப்பை நாங்களும் விரும்பவில்லை. அது அரச காணிகளாக இருக்கட்டும். தனியார் காணிகளாக இருக்கட்டும். ஒரு இணக்கத்தின் அடிப்படையில் அதைத் தடுப்போம்''- என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து படையினருக்குக் காணிகள் வழங்கப்படக் கூடாது என்ற தீர்மானத்தை இந்தக் கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டும். அதனை நான் முன்மொழிகின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கூறினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ''இது தொடர்பில் சாதக பாதகங்களை ஆராய்ந்த பின்னரே தீர்மானமாக எடுக்க முடியும்.'' என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து இதுகுறித்து எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி விசேட கூட்டம் ஒன்றில் ஆராய்வது என முடிவு செய்யப்பட்டது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் 11 மாதங்களின் பின்னர் நேற்று யாழ்.மாவட்ட செயலர் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அ.விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

குறிப்பாக வலி.வடக்கில் மக்கள் 20 வருடங்களுக்கு மேல் தமது சொந்த இடங்களில் மீள்குடியமராமல் உள்ளனர். 24 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிக்கப்படாததன் காரணமாக 28 ஆயிரம் பேர் நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

மேலும் மாதகல், பொன்னாலை பிரதேசங்களிலும் கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் பொதுமக்களின் வீடுகளை ஆக்கிரமித்து வைத்துள்ளனர்.

மீள்குடியமர்வு முடிந்துவிட்டது என்று பொய் சொல்ல வேண்டாம். உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள். மொத்தம் 3 லட்சம் பேர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது இருக்கின்றனர்.

அந்த மக்கள் ஏன் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர முடியாது இருக்கின்றனர் என்பதை ஆராய வேண்டும். இராணுவத்தினர் அந்த இடங்களில் இருந்து வெளியேற வேண்டும்.

இராணுவத்தினருக்கு மக்களது காணிகளையும், வீடுகளையும் ஆக்கிரமித்து வைத்திருக்கும் உரிமையைக் கொடுத்தது யார்?. வலி.வடக்கில் இரண்டாம் கட்டமாக விடுவிக்கப்படும் என்று சொல்லப்பட்ட பகுதிகளான பளை, வீமன்காமத்தில் இராணுவத்தினர் யாருக்கும் தெரியாமல் காணிகளை ஆக்கிரமிக்கின்றனர். நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் துப்பாக்கி முனையில் அடாத்தாகத் தம்வசப்படுத்தியுள்ளனர்.

மக்கள் எந்த நிலத்தில் இருந்து வெளியேற்றப் பட்டார்களோ, அந்த நிலத்தில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். இதற்கு வட மாகாண ஆளுநர் என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரினார்கள்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய வடமாகாண ஆளுநர்,

''உயர் பாதுகாப்பு வலயம் ஏன் உருவானது என்ற வரலாற்றை மீட்டுப் பார்க்க வேண்டும். ஆரம்பத்தில் பலாலி விமானப் படைத் தளத்தை அண்மித்ததாக 500 மீற்றர் தூரம் மாத்திரமே பாதுகாப்புத் தேவைகளுக்காகக் கைப்பற்றப்பட்டிருந்தது. எஞ்சிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்திருந்தனர். ஆனால் தமிழ் பயங்கரவாதிகளான புலிகள் விமானங்கள் மீது தாக்குதல் நடத்தியதாலேயே உயர் பாதுகாப்பு வலயம் உருவானது.

தேசிய பாதுகாப்புக்கே முதலிடம் கொடுக்கப்படும். இராணுவத்தினருக்குத் தேவையான காணிகள், தேசிய பாதுகாப்புக் கருதி சுவீகரிக்கப்படும். அரச காணிகள் அதற்காக எடுக்கப்படும். அதன்பின்னரே மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் ஆராயப்படும்.

நல்லூர் பிரதேச சபைக் காணியை இராணுவம் அடாத்தாகப் பறித்தது தொடர்பில் எதுவும் தெரியாது. அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன்.'' - என்றார்.

இதனை அடுத்துக் காணி சுவீகரிப்புத் தொடர்பில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இடையே இதுதொடர்பில் வாய்த்தர்க்கம் முற்றி உச்சக்கட்டத்தை அடைந்தது. ஒரு கட்டத்தில் '' இனி உங்கள் நேரம் முடிந்துவிட்டது. இதுகுறித்துப் பேசமுடியாது''- என்று அமைச்சர் டக்ளஸ் மாவை சேனாதிராசாவிடம் கூறினார். இதற்குப் பதிலளித்த மாவை, ''நான் பேசுவேன். இது மக்களின் பிரச்சினை, அதைப் பேசுவதற்கு எமக்கு உரிமை உண்டு.'' என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபையின் செயலாளர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பொறிக்குள் வீழ்த்த இடமளியாதீர்!

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் வடக்கு மட்டுமன்றித் தெற்கும் மனதாரச் செயற்படுவது அவசியம். அது தேசிய நலன் நாடியதாக இருக்கும் பட்சத்தில் உகந்த தீர்வைக் காண்பது கடினமானதல்ல.

இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு பெரும் இனத்தவர்களின் தலைவர்களும் தேசிய நலன்களுக்கு முக்கியத்துவமும் முதன்மைத்துவமும் வழங்குவதற்குத் தயாராக இல்லாமையாலேயே, பிரச்சினை பல தசாப்தங்களாக நீண்டு செல்கிறது. இந்த பின்னணியை இரண்டு பக்கங்களையும் சேர்ந்த அரசியல் தலைவர்கள் எப்போது உய்த்துணரப் போகிறார்கள்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இவ்வாரத்தில் இந்திய அரச தலைவர்களின் அழைப்பின் பேரில் இந்தியத் தலைநகர் சென்று பேச்சு நடத்தவிருக்கும் வேளையில் மேற்கண்ட கருத்து அரச ஆதரவுத் தரப்புகளில் இருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

நாட்டின் மிகப் பிரதான பிரச்சினை எனக் கொள்ளத் தக்க இன நல்லிணக்கத்துக்கான கருத்துப் பரிமாற்றங்கள், உள்நாட்டு மட்டத்திலும் அனைத்துலக மட்டத்திலும் பல தடவைகள் நடைபெற்றுள்ளன. அவற்றை முன்னிலைப்படுத்தி இன்னும் சற்று ஆழ்ந்து விரிவாக ஆராய்ந்தால் உகந்த தீர்வைக் கண்டறிவது ஒன்றும் கடினமானதல்ல.

அர்த்தபுஷ்டியுள்ள இன நல்லிணக்கத்தை உருவாக்குவதில் இரண்டு தரப்புகளும் ஒவ்வொன்றும் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று பிடிவாதம் செய்யாமல் இருப்பின், இழுபறிப்படும் தற்போதைய தடங்கல்களை நீக்கலாம் என்ற கருத்து மேலோங்கி நிற்பதையும் அவதானிக்க முடிகிறது.

கடந்த மாதம் நடுப்பகுதியில் இந்தியா சென்ற எமது நாட்டின் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் மன்மோகனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அவ்வேளை, ஐக்கிய இலங்கைக்குள் கௌரவமாகவும் தமக்குரிய உரிமைகளுடனும் தமிழ் மக்கள் வாழ வழிசெய்யும் அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு, விருப்பம் என்று பிரதமர் மன்மோகன்சிங் சுட்டிக் காட்டி இருந்தார்.

இது தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு நேர்மையுடன் பேச்சுக்களைத் தாமதம் இன்றி நடத்த வேண்டும் என்றும் அவர் ஊன்றி வலியுறுத்தி இருந்தார். பேச்சுவார்த்தைகள் உரிய இலக்கை எட்டக்கூடிய வகையில் அமைய வேண்டும் என்பதனையும் எடுத்துரைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை, நாளை - இம்மாதம் பத்தாம் திகதி - புதுடில்லி வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. என்ன விடயம் குறித்துப் பேசுவதற்குப் அழைக்கப்பட்டது என்று கூறுவதற்கு கூட்டமைப்புத் தரப்பினர் பின்னடித்தாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை வகுத்துக் கொள்வதற்காகவே என்பது வெளிச்சம்.

தமிழ்ப் பிரதேசங்களில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போருக்குப் பின்னரான நிலைமைகள் குறித்தும், இப் பிரதேசங்களில் அதீத இராணுவப் பிரசன்னம், மக்களின் காணிகளை அரசு கையகப்படுத்திவருவது குறித்தும் இந்திய அரசுக்குத் தெரிவிப்பதுமே தமது விஜயத்தின் பிரதான நோக்கம் என்றும் கூட்டமைப்பினர் தெரிவித்து வருகிறார்கள்.

ஆனால் அரசாங்கமோ, தான் அழுங்குப் பிடியாகக் கௌவியுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில், கூட்டமைப்பினரைப் பங்குபற்றுமாறு, இந்திய அரசு புதுடில்லியில் வலியுறுத்தும் என்றும், அதனை அடிப்படையாக வைத்தே கூட்டமைப்பினருடன் தான் பேச்சு நடத்த உள்ளதாகவும் பிரலாபித்து வருகிறது. அதனை மையப் புள்ளியாக வைத்தே கூட்டமைப்பினரை இந்திய அரசு புதுடில்லிக்கு அழைத்துள்ளதாகவும் இப்போது தகவல்கள் வெளிவருகின்றன.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொண்டு, தமிழர் தரப்புக்குள்ள பிரச்சினைகளை முன்வைக்க வேண்டும். அதற்கு முன்னர் பிரச்சினைக்கான தீர்வுகளை எவ்வாறு இனங்காட்டித் தர முடியும் என்று இலங்கை அரசு வினவுகிறது.

அத்தோடு நிற்காமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது முன்நிபந்தனைகளை வைப்பதனை ஏற்றுக்கொள்ள இயலாது. பேச்சுவார்த்தை மேசையில் வைத்தே, எந்த விடயத்தையும் நறுக்காகப் பேசி இறுதி முடிவுக்கு வர இயலும் என்று சொல்கிறது. இனப் பிரச்சினைக்கு இறுதியும் முடிவுமாகத் தீர்வு ஒன்றைக் காணவேண்டிய அவசியமும் அவசரமும் தோன்றி உள்ளன என்றும் பிரலாபிக்கிறது.

பேச்சுவார்த்தை தேசிய நலன் மீது அக்கறை நாடி மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, அது உரிய மார்க்கத்தில் சென்று பயனைத் தரும் என்று அரச சார்பு வட்டாரங்கள் சுட்டிக்காட்டத் தொடங்கி விட்டன. அரசாங்கத் தரப்பின் நிலைப்பாடுகள் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எனினும் இந்தியாவின் உந்துதலுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்து, அதனை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் காந்தம் போன்று இழுத்துக் கொள்வதே அரசின் நோக்கம் என்பது எட்டாம் வகுப்பு மாணவனுக்கும் தெரிந்த ஒன்று.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தமும் இந்தியாவின் அனுசரணையுடனேயே, கால் நூற்றாண்டுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருந்த வடக்கு- கிழக்கு இணைப்பை அரசு வெற்றிகரமாக நீதிமன்றத்தினூடு வெட்டித் துண்டாக்கிவிட்டது. அதேபாணியில், காணி, பொலிஸ் அதிகாரங்களையும் நயவஞ்சகமான நிர்வாக நடவடிக்கைகளால் பறித்தெடுக்கத் துடியாய் துடிக்கிறது!

மேலும் தமிழர்களின் பூர்வீகக் காணிகள் இராணுவத் தேவைக்கு என்றும், அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்றும் அரசால் அதிகாரத்திமிருடன் கபளீகரம் செய்யப்படுகின்றன. இவை குறித்து அரசுக்குப் புதிய மாற்று நிலைப்பாடு எதுவும் உண்டா என்பது குறித்த உத்தரவாதம் இல்லாமல் தமிழர் தரப்பு அவசரப்பட்டுப் பொறிக்குள் விழக்கூடாது.

பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பலம் பொருந்திய தரப்பு அடுத்த தரப்பை தனது பொறிக்குள் வீழ்த்த முயல்வது ஆக்கபூர்வமான ஒன்றாக அமையாது; தேவையான பெறுபேறு எதனையும் தரமாட்டாது. இதனை இந்தியத் தரப்புக்கு எடுத்துச் சொல்வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தலையாய பொறுப்பு.

இளகிய இரும்பைக் கண்டால் தொழிலாளி மூசி மூசி அடிப்பது போன்று இலங்கை அரசு நடந்துகொள்ளும் என்பதனை இந்தியத் தரப்பிடம் கூச்சமின்றி எடுத்துக் கூறுவது கூட்டமைப்பினரின் மற்றொரு பிரதான கடமையாகும்.

'பான்ட்' வாத்திய பயிற்சிப் பட்டறை

## ஒழுங்கமைப்பில் திருப்தியில்லை மதில் பாய்ந்து தப்பிய மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.9

தேசிய மாணவர் படையணியும் 20 ஆவது படைப்பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட பான்ட் வாத்திய அறிமுகப் பயிற்சிப் பட்டறையில் மாணவர்களின் உணவுகள் வழங்கும் ஒழுங்கமைப்பு திருப்தியற்று இருந்தமையால் சில மாணவர்கள் மதிலேறி விழுந்து தப்பியோடியுள்ளனர்.

4 மணிவரை மதிய உணவுக்கான ஏற்பாடுகள் சரிவர நடக்காமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் கிளிநொச்சி, யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பான்ட் வாத்திய அறிமுகப் பயிற்சி துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் 26 பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியிருந் தனர். இரு நாள்களுக்குமான அணிவகுப்பு மரியாதையை ஹாட்லிக் கல்லூரி, வயாவிளான் மகாவித்தியாலய மாணவர்கள் நடத்தியிருந்தனர்.

4 மணிவரை மதிய உணவுக் கான ஏற்பாடுகள் சரிவர நடக்காமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதில் காலை தொடக்கம் மாலை 4 மணிவரை உணவின்றி பயிற்சியை மேற்கொண்ட மாணவர்கள் அதிருப்தி அடைந்து துரையப்பா விளையாட்டு அரங்கு மதிலேறி தப்பிச் சென்றுள்ளனர்.

(ம-422)

## 'ஆசிரியர் பிரதீபா பிரபா' விருது இன்று

கொழும்பு,ஒக்.9

சிறந்த ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பிரதீபா பிரபா விருது வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மீபேயில் அமைந்துள்ள கல்வி வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மஹிந்த சிந்தனைக்கு அமைவாக சிறந்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் பொருட்டு இந்த உயர் விருதைக் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

மஹிந்த சிந்தனை தேசிய புனர்வாழ்வு செயற்றிட்டத்துக்கு ஏற்ப எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை இலங்கையில் உருவாக்கும் ஆசிரியர்கள், அதிபர்களால் ஆற்றப்படும் சேவையைக் கௌரவித்து இந்த உயர் விருது கடந்த வருடம் முதல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-402)

## வேலணை ப.நோ.கூ. சங்கத்தின் நிர்வாகத்தில் விரைவில் மாற்றம்

வலி வடக்கு, ஒக்.9

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக முகாமைத்துவத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நட்டத்தை அனுபவிக்கும் ஒரு சில சங்கங்களில் வேலணை பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஒன்றாகும்.

இதனால் தொடர்ந்தும் இந்தச் சங்கம் நட்டத்தில் இயங்குவதால் மக்களுடைய சேவைகள் பலவும் பாதிப்படைந்துள்ளது. பொது மக்களும் கஷ்டங்களுக்கு ஆளாகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களும் பொது மக்களும் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமைத்துவ நிர்வாகத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்து சங்கத்தை நல்ல நிலையில் இயங்க வழி ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில் முகாமைத்துவ நிர்வாகத்தில் மற்றத்தைக் கொண்டுவந்து கூட்டுறவுச் சங்கத்தை நல்ல நிலையில் இயங்க வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-86)

உலக அஞ்சல் தின போட்டி;

## காரைநகர் அஞ்சலகம் தேசிய ரீதியில் 3 ஆம் இடம்

யாழ்ப்பாணம், ஒக்.9

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட அஞ்சல் அலுவலகங்களுக்கு இடையேயான போட்டியில் காரைநகர் அஞ்சல் அலுவலகம் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அத்துடன் வடமாகாணத்தில் சிறந்த முதல்தர அஞ்சல் அலுவலகமாகவும் சிறந்த உபதபால் அலுவலகமாகவும் விசுவமடு தபால் அலுவலகம் தெரிவாகியுள்ளது என வடமாகாண பிரதி தபால் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக அஞ்சல் தினமானது ஒக்ரோபர் 9 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு தேசிய ரீதியில் பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த நிலையில் வடமாகாணத்தில் சிறந்த முதல் தர அஞ்சல் சேவை உத்தியோகத்தராக முதலாம் இடத்தில் வவுனியா மாவட்ட அஞ்சலகத்தைச் சேர்ந்த கே.தவலிங்கரட்ணம், இரண்டாவதாக காரைநகர் அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் என்.ஜீவநாதன், சிறந்த உப தபால் அதிபராக கிளிநொச்சி மாவட்டம் ஸ்கந்தபுரம் அலுவலக உத்தியோகத்தர் கே.சிறீதரன், சிறந்த தபால் உத்தியோகத்தராக மாங்குளம் அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் எம்.சதானந்தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த சாரதியாக யாழ். மாவட்ட பிரதி அஞ்சல் மா அதிபர் அலுவலக உத்தியோகத்தர் ஜே.ரவிச்சந்திரன், சிறந்த அஞ்சலாளராக பூநகரி அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் பி.மகேந்திரராஜா, சிறந்த அலுவலக் பணியாளராக வவுனியா மாவட்ட அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் நிஹால் விக்கிரமசிறி, சிறந்த கோலவுடையாளராக மன்னார் மாவட்டம் முருங்கன் அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் எட்வட் ரஞ்சன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

உலக அஞ்சல் தின நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ளன. அந்த நிகழ்வில் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-13)

## விவசாயிகளுக்கான ஓய்வூதியம் ஒன்பது மாதங்களாக இழுத்தடிப்பு

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.9

ஆயிரம் ரூபா அடிப்படை வேதனம் கொண்ட விவசாயிகள் ஓய்வூதியம் கடந்த 9 மாதங்களாக விவசாயிகளுக்கு வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுகிறது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாடு தழுவிய ரீதியில் உள்ள 98 ஆயிரம் விவசாயிகள் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்த விடயத்தைக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

2013 இல் என்றாலும் விவசாயிகளுக்கு நலன் தரக் கூடியதாக வரவு, செலவு திட்டத்தில் இடம் ஒதுக்கப்பட்டு அடிப்படை ஓய்வூதியம் 3000 ரூபாவுக்கு உள்வாங்கப்படுமா? எனும் தலைப்பில் எழுதிய அவசர கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் விவசாயிகளின் அடிப்படை ஓய்வூதியம் 1000 ரூபாவாக தீர்மானிக்கப்பட்டு இன்றுவரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயிரம் ரூபா அடிப்படை ஓய்வூதியத்தை 3000 ரூபாவாக உயர்த்தித் தருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐந்து தடவையும், விவசாய அமைச்சருக்கு 10 தடவையும் கடிதங்களை எழுதி களைப்படைந்து விட்டோம்.

ஆனால் 2013 இற்கான வரவு, செலவு திட்ட ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. 2013 இல் என்றாலும் 98 ஆயிரம் விவசாயிகளின் வறுமையை குறைக்க அடிப்படை ஓய்வூதியமாக 3000 ரூபாவை நிர்ணயித்து வழங்குவதுடன் விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றுங்கள்.

விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் என அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த காலங்களில் உரத்த குரல்களில் தெரிவித்த போதும் இதுவரை எதுவும் இடம்பெறவில்லை.

எமக்கு ஜனாதிபதி உதவி செய்ய வேண்டுமாயின் 2013 வரவு செலவுத் திட்டத்தில்அடிப்படை ஓய்வூதியமாக 3000 ரூபா வழங்கி உதவுங்கள்.- என்று அந்தக் கடிதத்தில் தெரிவிகப்பட்டுள்ளது.

(ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதுக்குடியிருப்புக் கோட்டப் பாடசாலைகளில்

# தளபாட வசதிகள் இன்மையால் கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு

வவுனியா,ஒக்.9

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கோட்டத்தைச் சேர்ந்த பல பாடசாலைகளில் போதிய தளபாட வசதிகள் இல்லாமையால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

**மனிக்பாம் நலன்புரி நிலையங்களில் இயங்கி வந்த இரு பாடசாலைகளும் தற்போது மூடப்பட்டுள்ளன.**

புதுக்குடியிருப்புப் பகுதிக்கான மீளக்குடியமர்வுக்குப் பின்பு பல பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயம், ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலை, முள்ளிவாய்க்கால் அ.த.க. வித்தியாலயம், வட்டுவாகல் அ.த.க. பாடசாலை, அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயம், மாத்தளன் அ.த.க. பாடசாலை மற்றும் புதுக்குடியிருப்பு றோ.க.த.க. வித்தியாலயம் என்பனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பெருமளவான மாணவ மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான தளபாடங்கள் இல்லாத நிலையில் நிலத்திலும் தறப்பாளிலும் இருந்து கல்வி கற்கும் நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

கட்டடங்கள் அற்ற நிலையிலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பலத்த சிரமத்தின் மத்தியிலும் அதிபர், ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் மாணவர்களுக்கான தளபாடப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

இதேவேளை, மனிக்பாம் நலன்புரி நிலையங்களில் இயங்கி வந்த இரு பாடசாலைகளும் தற்போது மூடப்பட்டுள்ளன. அங்கு பெருமளவான தளபாடங்கள் காணப்பட்டன. அவற்றைப் பெற்று தளபாடப் பற்றாக்குறையுள்ள பாடசாலைகளுக்கு வழங்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

# வவுனியா இ.போ.ச. டிப்போ முகாமையாளரின் இடமாற்றம் ரத்து

### பணியாளர்களின் எதிர்ப்பை அடுத்து

வவுனியா,ஒக்.9

வவுனியா டிப்போ முகாமையாளரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கடிதம் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளரால் வடபிராந்திய பொது முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

வவுனியா டிப்போ வளாகத்தில் பள்ளிவாசலொன்று அமைப்பது தொடர்பான சர்ச்சைகளின் பின்னணியில் டிப்போ முகாமையாளர் வடபிராந்திய பொது முகாமையாளரால் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

அத்துடன் அவர் பயன்படுத்தி வந்த அலுவலக அறையை முஸ்லிம்களின் தொழுகைக்கு வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு வவுனியா டிப்போ பணியாளர்கள் 100 பேர் கையொப்பமிட்டு கடிதமொன்றை ஜனாதிபதிக்கும், போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளருக்கும் அனுப்பி வைத்திருந்தனர்.

இதனையடுத்து கடந்த 5 ஆம் திகதி வழங்கப்பட்ட சாலை முகாமையாளரின் இடமாற்ற உத்தரவை ரத்துச் செய்யுமாறு பொது முகாமையாளரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-400)

## வாசிப்பு மாத நிகழ்வு

கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் ஒக்ரோபர் மாத வாசிப்பு மாத நிகழ்வு இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வை வவுனியா வடக்கு கல்வி வலய நூலக இணைப்பாளரும் தொழில்நுட்ப ஆலோசகருமான சிவராஜா நாடா வெட்டித் திறந்து வைத்துள்ளார். இதில் பொது அறிவுப் போட்டி, வாசிப்புப் பட்டறை, கதை கூறல் போன்ற போட்டிகளும் இடம்பெறுகின்றன. (க-422)



புதுக்குடியிருப்பு - கற்சிலைமடு வீதி மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையில் குன்றும் குழியுமாக மழை நீர் தேங்கிய நிலையில் காணப்படுகின்றது. (க-400)

## இளையோருக்கு புகைப்பொருள் விற்றவர்களுக்குத் தண்டம்

கிளிநொச்சி, ஒக்.9

கிளிநொச்சியின் பல்வேறு இடங்களிலும் வயது குறைந்தவர்களுக்கு புகையிலைப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில், நாச்சிக்குடா, ஜெயபுரம், கோணாவில், புதுமுறிப்பு ஆகிய இடங்களில் கடந்த 27 ஆம் திகதி திடீரென மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட், பீடி போன்ற புகையிலைப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் சுமார் 23 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர்களுக்குத் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் மொத்தமாக 57 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கை செய்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (க-6)

# இரும்பு சேகரிக்கும் அப்பாவிகள் மீது இராணுவம் தொடர்ந்து தாக்குதல்

### நிறுத்தக் கோரி ஜனாதிபதிக்கு செல்வம் எம்.பி. கடிதம்

மன்னார், ஒக்.9

வன்னிப் பகுதியில் பழைய இரும்புகளைச் சேகரிக்கும் மக்கள் மீது இராணுவத்தினர் தொடர்ந்தும் தாக்குதல் நடத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்:-

**குறிப்பாக மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதி களிலேயே மக்கள் அதிகளவில் இரும் பைச் சேகரித்து வருகின்றனர்.**

போர் நடவடிக்கையில் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். இதனால் இவர்களில் பலர் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பழைய இரும்புகளைச் சேகரித்து வருகின்றனர்.

குறிப்பாக மாத்தளன், பொக்கணை, வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளிலேயே மக்கள் அதிகளவில் இரும்பைச் சேகரித்து வருகின்றனர்.

ஆனால் இராணுவத்தினர் இவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இந்த மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்வாதாரமும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வேறு 'சிலர்' எந்தவிதத் தடையுமின்றி இரும்பைச் சேகரித்து வருகின்றனர்.

எனவே இரும்பு சேகரிப்பதில் ஈடுபட்டு வரும் அப்பாவிப் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் தாக்குதல்களை தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும், இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (க-12)

# மதுவில் மோகம் கொண்டவர் இழந்தார் தங்க மோதிரங்களை

### மயங்கியவர் தெளிந்து எழுந்தார் மறுநாள் மன்னாரில் நிகழ்ந்த ஏமாற்றுச் சம்பவம்

மன்னார், ஒக்.9

மதுவில் மோகம் கொண்ட ஒருவர் தமது பெறுமதி வாய்ந்த தங்க மோதிரங்களைப் பறிகொடுத்த பரிதாபகரமான சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மதுபானத்தைக் கொள்வனவு செய்வதற்கென வயோதிபர் ஒருவர் மன்னார் தினச்சந்தை வியாபார நிலையத்துக்கு அருகிலுள்ள மதுபான வகைகளை விற்பனை செய்யும் நிலையமொன்றுக்குச் சென்றுள்ளார். இவர் விற்பனை நிலையத்தினுள் சென்றபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் இவரைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றுள்ளார். குறித்த ஆசாமி வயோதிபரிடம் வலியச் சென்று கதைத்த பின் இருவரும் ஒரு போத்தல் மதுபானத்தைக் கொள்வனவு செய்து அதனைப் பகிர்ந்து கொள்ளுவோமெனக் கூறியுள்ளார். இவரும் சரியெனத் தலையாட்டிவிட்டு வெளியில் பூட்டாமல் நின்ற தனது சைக்கிளைக் கவனிக்கச் சென்றுள்ளார்.

பின்னர் திரும்பி வந்து தனது பங்குக்குரிய மதுபானத்தை வாங்கிப் பார்த்தபோது அதன் நிறம் மாறிக் காணப்பட்டது. இது தொடர்பாக இவர் வினவியபோது காரணங்கள் கூறப்பட இவரும் அதை ஏற்றுக் கொண்டு மதுவை உறிஞ்சினார்.

உடனடியாகவே மயக்கமடைந்த இவர் சந்தைக் கட்டடத் தொகுதிக்குள் சுயநினைவின்றி வீழ்ந்து கிடந்தார். இவரைக் கண்டவர்கள் இவரது சட்டைப் பையினுள் கிடந்த தொலைபேசி மூலமாகக் குடும்பத்தினருக்குத் தெரிவிக்க அவர்கள் அங்குவந்து இவரை வீட்டுக்குக் கொண்டு சென்றனர்.

இவர் பறிகொடுத்த இரண்டு மோதிரங்களும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை மயங்கமடைந்த இந்த வயோதிபர் மறுநாள் மாலையே சுயநினைவு பெற்றதாகவும் தெரிய வருகின்றது. (க-12)

# வவுனியாவில் பகல் கொள்ளைகள்: மோ.சைக்கிள், ஓட்டோ ஆசாமிகளால்

### அண்மைக்காலத்தில் திடீர் அதிகரிப்பு

வவுனியா, ஒக்.9

வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் அண்மைக் காலமாக பகல் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பகல் வேளைகளில் ஆள்கள் நடமாட்டங்கள் குறைவான வேளைகளில் இலக்கத் தகடுகள் அற்ற ஓட்டோக்களில் வரும் ஆசாமிகள் தமது கை வரிசையைக் காட்டி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் பண்டாரிக்குளம் - வேப்பங்குளம் வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிப பெண்ணைப் பின் தொடர்ந்து ஓட்டோவில் சென்ற இருவர் ஆள்நடமாற்ற சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவர் அணிந்திருந்த 3 பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதேபோன்று கடந்த [illegible] சிறுவர் [illegible] வீதியில் [illegible] தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரிந்து விட்டு மகாரம்பைக் குளம் சென்றுகொண்டிருந்த யுவதிகளைப் பின் தொடர்ந்து இலக்கத்தகடு அற்ற ஓட்டோவில் சென்ற ஆசாமி ஒருவன் யுவதி ஒருவரின் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளான்.

மேலும் குருமன்காட்டுப் பகுதியில் காமினி வித்தியாலயத்துக்கு அண்மையிலுள்ள தெரு ஒன்றில் தனிமையில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தாலிக் கொடி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்தெடுக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு நாளுக்கு நாள் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக வவுனியாப் பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாஷையூர் மீனவர் இறங்குதுறையைப் புனரமைக்கும் முன் ஆயத்தப்பணிகளின் முதற் கட்டமாக கரையோரத்தில் குவிக்கப்பட்டிருக்கும் பெரும் கற்களை நகர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்துப் பகுதியில் பெருமளவு கருங்கற்கள் தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டு குவித்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றை ஒழுங்குபடுத்தும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (ம-135)

# யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் மூன்று கொள்ளைச் சம்பவங்கள்

## நீர்வேலி, கோப்பாய், கந்தரோடையில்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் மூன்று கொள்ளைச் சம்பவங்களும், ஆறு திருட்டுச் சம்பவங்களுமாக 9 குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நீர்வேலியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் அணிந்திருந்த 69 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாதவர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

கோப்பாய் இராச வீதியால் சென்று கொண்டிருந்த பெண் அணிந்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சங்கிலி கடந்த 2 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்றவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. கந்தரோடை விகாரை வீதியில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரிலுள்ள மதுபான விற்பனை நிலையம் கடந்த 28 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு 52 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மதுபான வகைகள் திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பாக கடந்த 28 ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை அல்லைப்பிட்டி மண்கும்பானில் கடந்த திங்கட்கிழமை இரவு வீடு உடைத்து 18 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதுஎன்று பாதிக்கப்பட்டவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அச்சுவேலியில் கடந்த 14 ஆம் திகதிக்கும் 27 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வீட்டில் யாருமில்லாதவேளை உள்நுழைந்த திருடர்கள் ஒரு லட்சத்து 32 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளனர். பருத்தித்துறையிலும் இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றின் போது 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டுப் போயுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.- என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4)

# குற்றச் செயல் புரிந்த 186 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஒக்.9

நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் மற்றும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் 186 பேர் யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் என்று யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் கடந்த வாரம் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சூழல் மாசடையும் வகையில் சுற்றாடலை வைத்திருந்த குற்றச்சாட்டில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொது இடத்தில் மது போதையில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது இடத்தில் மது போதையில் கூடிநின்று பிறருக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகரில் சட்டவிரோதமாக மாடுகளைச் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொருவரது குற்றச்சாட்டுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டும், பிணையில் விடுவிக்கப்பட்டும் அபராதம் விதிக்கப்பட்டும் உள்ளனர் என்றும் எரிக்பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4)

# சிறுவர்கள் பாதிக்கப்படாத வகையில் காக்க வேண்டியோர் பெற்றோர்களே

## கிராமிய சிறுவர் நிகழ்வில் யாழ். அரச அதிபர்

பாடசாலையிலிருந்து இடைவிலகல், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற காரணங்களால் சிறுவர்கள் பாதிக்கப்படாத வகையில் சிறுவர்களுக்கான பாதுகாப்பை பெற்றோர்கள் வழங்க வேண்டும்.

அத்துடன் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் ஆரோக்கியமான சமுதாயத்தை எதிர்காலத்தில் கட்டியெழுப்ப முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் வடமாகாண கிராமிய சிறுவர்கள் பங்குபற்றிய சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் அவர் மேலும் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

இரண்டாம் மகாயுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் உயிரிழந்தமை, அணுகுண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் அங்கவீனம் அடைந்தமை போன்றவற்றை நினைவு கூர்ந்து சிறுவர் சாசன உரிமைச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பானவர்களாகவும், ஒளிமயமான வாழ்க்கையை பெறக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். சிறுவர் உலகம் என்பது இன்று கேள்விக்குறியான விடயமாக இருக்கிறது. பல ஆபத்துக்களையும் சிறுவர்கள் எதிர்கொள்கின்றனர்.

இன்றைய இளைஞர்கள் சிறுவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாவட்டம், பிரதேசம், கிராமம் என்று பல்வேறு செயற்றிட்டங்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் குழுக்கள் மூலமாக சிறுவர்களுக்கான உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களிடமே தங்கியுள்ளது. ஆரம்ப காலங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறாமல் இல்லை. ஆனால் அவை வெளிப்படுத்தப்படாமல் இருந்தன. இன்று ஊடகங்கள் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களை உடனுக்குடன் அறிகின்றோம். இவை சுட்டிக்காட்டப்படுமிடத்தில் அதனைகட்டுப்படுத்த விழிப்புணர்வுவை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.- என்றார்.

வள்ளிபுனம் ஒளிநிலா சிறுவர் கழகத்தைச் சேர்ந்த கௌசல்யாதேவி அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த சிறுவர்கழகங்களின் அங்கத்தவர்கள்மற்றும்பாடசாலைமாணவர்கள் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக கே.என்.எச். நிறுவன நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் அன்ரனி விமலன், யாழ்.மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இணைப்பாளர் செல்வி ச.கோதை ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ம-14)

# மானிப்பாய், கோப்பாய் பகுதி வங்கிகளில் 3 லட்சத்து 97 ஆயிரம் ரூபா பணம் மோசடி

யாழ்ப்பாணம், ஒக்.9

மானிப்பாய் மற்றும் கோப்பாய் பகுதிகளிலுள்ள வங்கிகளில் போலி நகைகள் அடைவு வைக்கப்பட்டு மூன்று லட்சத்து 97 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை கடந்த வாரம் தெரியவந்துள்ளது.

இவை தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

மானிப்பாயில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் மூன்று தடவைகள் போலி நகைகள் அடைவு வைக்கப்பட்டு 3 லட்சத்து 97 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

கோப்பாயிலுள்ள அரச வங்கி ஒன்றிலும் போலி நகை அடைவு வைக்கப்பட்டு ஒரு லட்சத்து 83 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

அடைவு வைத்தவர்கள் போலியான முகவரிகளைக் கொடுத்துப் பதிவு செய்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

அடைவு வைக்கப்பட்ட நகைகளை வங்கி அதிகாரிகள் கடந்த வாரம் பரிசோதனை செய்த போதே அவை போலியானவை என்பது தெரியவந்தது. பின்னர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டது.

தவிர கொடிகாமத்தில் மூன்று

> கோப்பாயிலுள்ள அரச வங்கி ஒன்றிலும் போலி நகை அடைவு வைக்கப்பட்டு ஒரு லட்சத்து 83 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

தடவைகள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி இடம்பெற்றுள்ளமை தொடர்பிலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தென் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பெரேரா தெரிவித்தார்.

இவ்வாறான குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அவர்களது சொந்த முகவரியிலிருந்து மாறி வேறு இடங்களில் தங்கியுள்ளனர். எனினும் அது தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர் என்றும் எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (ம-4)

# வலி. தென்மேற்கு பிரதேச சபை காணியிலுள்ளோர் கட்டுடைக்கு

வலி.தென்மேற்கு,ஒக்.9

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியில் பல வருடங்களாக வசித்து வரும் ஐந்து குடும்பங்களும் தலைமை அலுவலகத்தின் அபிவிருத்தி கருதி சபைக்குச் சொந்தமான கட்டுடையிலுள்ள காணியில் குடியமர்த்தப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ள பிரதேச சபை இவர்களின் நலன் கருதி குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க முன்வந்துள்ளது. அத்துடன் வீடுகள் அமைப்பதற்குச் செலவு தொகையாக தலா 7 ஆயிரம் ரூபாவையும் சபை நிதியிலிருந்து வழங்கவுள்ளது.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மானிப்பாய் நகரசபைக் கட்டடத்தில் பல வருடங்களாக இயங்கி வருகிறது.

இட வசதியின்றிச் சிறிய கட்டடத்தில் இயங்கிவரும் தலைமை அலுவலகத்தை வேறு இடத்தில் அமைப்பதற்காக அருகிலுள்ள சிவன் கோயிலுக்குச் சொந்தமான காணி பொது மக்களின் நிதியுதவியுடன் சபையால் வாங்கப்பட்டது.

இந்தக் காணியில் 400 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடன் நவீனமான முறையில் கட்டப்பட்ட மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா இந்த மாதம் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் கட்டடம் அமைப்பதற்காகக் காணி வாங்கும் போது அந்தக் காணியில் பல வருடங்களாக வாழ்ந்துவரும் ஐந்து குடும்பங்களையும் தலைமை அலுவலகத்தின் இடவசதி கருதி வேறு இடத்தில் குடியமர்த்த வேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக பிரதேச சபையால் கட்டுடையில் 6 பரப்புக் காணி வாங்கப்பட்டுள்ளது.

தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐந்து குடும்பத்தவரும் பயன்படுத்தக் கூடிய வகையில் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அப்பகுதியில் ஐந்து மலசலகூடங்களும் அமைக்கப்படவுள்ளன.

ஐந்து குடும்பத்தவரையும் இந்த இடத்தில் குடியமர்த்துவதற்கு சகல ஒழுங்குகளையும் உபதலைவர் எஸ்.சிவகுமார் மேற்கொண்டுள்ளார். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய் ரொக்கெட் அனுப்பும் இந்தியா

செவ்வாய்க்கும், சந்திரனுக்கும் விரைவில் இந்தியா ரொக்கெட்க்ளை அனுப்பவுள்ளது. இதுகுறித்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான இஸ்ரோ தமது ஐந்தாண்டு திட்டத்தை அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் 58 விண்வெளித் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இந்தத் திட்டங்களுக்கென சுமார் 39 ஆயிரத்து 750 கோடி ரூபா பயன்படுத்தப்படும்-என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இதற்கான ஒப்புதலையும் மத்திய அமைச்சரவை வழங் கியுள்ளது.

இதற்கமைய இஸ்ரோ 33 செயற்கைக் கோள்களையும், 25 ரொக்கெட்டுக்களையும் விண்ணுக்குச் செலுத்தவுள்ளது. (வ)

## திருச்சி விமான நிலையத்துக்கு சர்வதேச அந்தஸ்து

திருச்சி விமான நிலையத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வாடிக்கையாளர் சேவைகளுடன், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை உள் ளிட்ட நாடுகளுக்கு வாரத்துக்கு 70 விமான சேவைகளை அளித்து வருகிறது திருச்சி விமான நிலையம். மேலும் பொருள் ஏற்றுமதி போக்குவரத்து வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த வேண்டும் என்பது பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகளின் நீண்ட கால கோரிக்கையாகும். இந்தநிலையில், பிரதமர் மன்மோகன்சிங் திருச்சி, கோவை உள்ளிட்ட 5 விமான நிலையங்கள் சர்வதேச நிலையங்களாக தரம் உயர்த்தப்படும் என்று சில மாதங்களுக்கு முன் அறிவித்தார். அதன்படி கடந்த சனிக்கிழமை டில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது. (வ)

### இன்னும் ஓயவில்லை போராட்டம்...

# கூடங்குளத்தில் கடல் முற்றுகை

### வெளி மாவட்டங்களில் இருந்து படகுகளில் திரண்டு வந்து நிற்கின்றனர் மீனவர்கள்



கூடங்குளம், ஒக்.9

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடல்வழி முற்றுகைப் போராட்டத்தில் நேற்று நூற்றுக்கணக்கான மீனவர்கள் ஈடுபட்டனர்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இருந்து படகுகளில் புறப்பட்ட மீனவர்கள் தற்போது கூடங்குளம் அணு உலை அருகே 500 மீற்றர் தொலை வில் கடலில் நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக கடந்த ஓராண்டுகாலமாக தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் கூடங்குளம் அணு உலையில் யுரேனியம் நிரப்பும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்தப் போராட்டத்தின் ஒருபகுதியாக நேற்று கடல் வழியே முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கடந்த மாதம் 10 ஆம் திகதி கடல் வழியே முற்றுகைப் போராட்டம் நடத்த முயன்ற போது பெரியளவிலான வன்முறையில் முடிந்தது. இதே போல் கடந்த 22 ஆம் திகதியும் கடல்வழி முற்றுகைப் போராட்டம் நடத்த முயற்சித்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மீனவர்கள் படகுகள் மூலம் கூடங்குளம் நோக்கிச் சென்றனர். கூடங்குளம் அணு உலை அருகே கடலில் 500 மீற்றர் தொலைவில் கடலில் படகுகளில் நின்றபடி போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கூடங்குளத்தில் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன.

அணுமின் நிலைய முற்றுகைப் போராட்டத்தாலும், பொலிஸார் குவிக்கப் பட்டதாலும் கூடங்குளம் பகுதியில் மீண்டும் பதற்றம் நிலவியது.

இந்த நிலையில் கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டக் குழுவின் ஒருங் கிணைப்பாளர் உதயகுமார் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

எங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும். கூடங்குளம் அணு உலையை இழுத்து மூட வேண்டும் என்பது தான் எங்களது கோரிக்கை. போராட்டக் குழுவினர் மீது போடப்பட்டிருக்கும் பொய் வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். எதிர்வரும் 29 ஆம் திகதி சென்னையில் சட்டபேரவையை முற்றுகையிடும் போராட்டம் நிச்சயம் நடக்கும். இதற்கு சில கட்சிகள் எங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை எங்களது போராட்டம் தொடரும் - என்றார்.(வ)

## கைதிகள் மன அழுத்தம் நீங்க புழல் சிறையில் இசைக்கச்சேரி

புழல், ஒக்.9

புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் மன அழுத்தத்தை நீக்கும் நோக்கில் இசைக் கச்சேரி நடத்தப்பட்டது. கைதிகளின் மன அழுத்தம் குறையவும் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்க ளுக்கு ஆறுதல் கிடைக்கவும் புழல் சிறை வளாகத்தில், பிரபல கர்நாடக இசை பாடகி சுதா ரகுநாதனின் கச்சேரி கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டது.

சிறைத் துறைத் தலைவர் திரிபாதி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது விடுதலையாகும் கைதிகள், விசாரணைக் கைதிகளுக்கு தனியார் தொண்டு நிறுவனத்தில் வேலை வாய்ப்புக்கான சான்றிதழ்களை திரிபாதி வழங்கினார். (வ)

## மோதியது டிரக் விமானத்தில்

### நூலிழையில் உயிர்தப்பினர் 421 ஹஜ் பயணிகள்

விமானம் மீது டிரக் மோதியதால் ஹஜ் பயணிகள் 421 பேர் நூலிழையில் தப்பினர்.

தமிழ்நாட்டிலிருந்து புனித ஹஜ் பயணம் செல்வதற்காக சென்னை விமான நிலையத்திலிருந்து ஏர் இந்தியா சார்பில் விசேட விமானம் நேற்றுக் காலை புறப்படத் தயாராக இருந்தது.

இந்த விமானத்தில் 421 பயணிகள் ஹஜ் செல்வதற்காக இருந்தனர். இந்த நிலையில் விமானத்தை ஓடு பாதைக்குக் கொண்டு செல் லும் வாகனம் மூலம் தள்ளிக் கொண்டு வந்த போது அங்கு டிரக்கிரின் இரும்புக் கம்பி நீட்டிக் கொண்டிருந்தது. அதில் விமானத்தின் இறக்கை மோதியதில் இறக்கை சேதம் அடைந்தது.

இதனால் விமானம் குலுங்கியதையடுத்து உள்ளே



இருந்த பயணிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

இருப்பினும் பயணிகள் காயமின்றி உயிர் தப்பினர். உடனே ஊழியர்கள், அதிகாரிகள் விரைந்து சென்று பயணிகளை பத்திரமாக கீழே இறக்கினார்கள்.

அவர்கள் விமான நிலைய ஓய்வு அறையில் தங்க வைக்கப்பட்டனர். இதையடுத்து விமானம் புறப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. (வ)

## நக்சலைட் எனும் சந்தேகத்தில் சென்னையில் 13 பேர் கைது

நக்சலைட்டுக்கள் எனும் சந்தேகத்தில் சென்னையில், 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை, குன்றத்தூர் அருகே உள்ள திருநாகேஸ்வரம் பகுதியில், கடந்த சனிக்கிழமை இரவு இரகசியமாக பாடசாலை ஒன்றில் சந்தித்து சதித்திட்டம் தீட்டியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் மூவர், ஏற்கனவே நக்சலைட்டுகள் எனும் குற்றச்சாட்டில் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் வெளியில் உள்ளவர்கள் என்று தெரி விக்கப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் பொலிஸாருடன் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர்களுக்குத் தொடர்பு உள்ளதாக வழக்கு பதியப்பட்டிருந்தது.

எனினும் பிணையில் வெளி வந்தது முதல், மக்கள் ஜனநாயக குடியுரிமைக் கட்சி எனும் அமைப்பை இவர்கள் நடத்தி வந்துள்ளனர்.

கைது தொடர்பில், இந்தக்கட்சி தலைவர் துரைசிங்கம் வேலு பொலிஸாரிடம் தெரிவிக்கையில்,

நாம் கூட்டம் நடத்திய பாடசாலையில் தான் எனது குழந்தையும் கல்வி கற்கின்றது. பாடசாலை அதிபரை எனக்கு ஏற்கனவே தெரியும். அவரது அனுமதியோடுதான் இந்தக் கூட்டத்தை நடத்தினோம். நாம் மக்கள் விரோத, அரசுக்கு எதிரான செயல்கள் எதிலும் ஈடுபடவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் எங்கள் கட்சி சார்பில் சுயேச்சையாகப் போட்டியிட முடிவு செய்தோம். நாம் நக்சலைட்டுக்கள் அல்ல-என்றார்.

எனினும் இவர்கள் 13 பேரும் சிறீபெரும்புத்தூர் நீதிமன்றில் முன்னிலைப் படுத் தப்பட்டு, 15 நாள்கள் நீதிமன்றக் காவலில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (வ)

## இந்திய விமானப் படை போர்ப் பயிற்சியில் முதன்முறையாக இரு பெண்கள் தெரிவு

டில்லி, ஒக்.9

விமானப்படை போர்களமுனை பயிற்சிக்கு முதன்முறையாக இரண்டு பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அல்கா சுக்லா மற்றும் எ.பி.சுமதி எனும் குறித்த இரு பெண் விமானிகளும், யேலகங்கா விமான நிலையத்தில், தாக்குதல் பிரிவுப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு சிறப்பு ஹெலித் தாக்குதல் பயிற்சிகளிலும் தொடர்ந்து பங்கெடுக்கவுள்ளனர்.

போர்தேவைகளைதவிர்த்து வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் சீதா மற்றும் சீதக் போன்ற ஒற்றை இயந்திரம் கொண்ட ஹெலிகொப்டர்களே இதுவரையில் பெண் விமானிகளால் இயக்கி வந்திருந்தன.



எனினும் மேற்கு வங்கத்தில், சீதாக் ஹெலி கொப்டர் பிரிவில் தொடர்ந்து மூன்று வருடங்களாக பயிற்சி மேற்கொண்டு வந்த அல்காவுக்கு தற்போது போர் தேவைக்காக பயன்படுத்தப்படும், இரட்டை இயந்திரங்கள் கொண்ட ஹெலிகொப்டர்களை இயக்குவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளல், ரொக்கெட் தாக்குதல், போர் தேவைகள், மீட்பு நடவடிக்கைகள், சிறப்பு ஹெலிகொப்டர்கள் இயக்கம் என்பவற்றில் குறித்த இரு பெண் விமானிகளும் ஈடுபடவுள்ளனர். (வ)

## கர்பி மக்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்படும் காண்டாமிருகங்கள்

### உளவு நிறுவனங்கள் எச்சரிக்கை

அஸாம் மாநிலத்தில் செயற்படும் பிரிவினைவாத அமைப்பான, கார்பி மக்கள் விடுதலை புலிகள் அமைப்பினரே காண்டாமிருகங்களை வேட்டையாடு கின்றனர் என்று உளவுநிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

இதுகுறித்து உளவு நிறுவனங்கள் தெரிவித்ததாவது:-

அஸாம் மாநிலத்தின் கோலாகாட் மற்றும் நாகோன் மாவட்டங்களில் அமைந்துள்ள கசிரங்கா தேசிய பூங்கா, உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்று என யுனெஸ்கோ அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களில் மூன்றில், இரண்டு பங்கு இந்தத் தேசிய பூங்காவில் உள்ளன.

ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின் கொம்புகள் சர்வதேச சந்தையில் ரூ. 40 லட்சம் முதல் ரூ. 90 லட்சம் வரை விற்பனை ஆகும். எனவே இந்த வகை காண்டாமிருகங்களை வேட்டையாடுவது அதிகரித்து வருகிறது.

அத்துடன் அஸாம் மாநிலத்தில் அவ்வப்போது உருவாகும் வெள்ளம் காண்டாமிருகங்களை வேட்டையாடுவோருக்கு வசதியாக அமைகிறது. கடந்த மாதத்தின் முற்பகுதியில் கசிரங்கா தேசிய பூங்காவை வெள்ளம் சூழ்ந்ததால் அதைச் சாதகமாகப் பயன்படுத்தி 4 நாள்களில் 5 காண்டாமிருங்கள் வேட்டையாடப்பட்டுள்ளன. (வ)

## காஷ்மீர் சட்டசபைக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர்கள்

ஜம்மு- காஷ்மீர் மாநில சட்ட சபைக்குள் தொழில் இல்லாத இளைஞர்கள் சிலர், அத்துமீறி நுழைந்ததை அடுத்து அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா புதிய வேலை வாய்ப்பு கொள்கையை அறிவித்திருந்தார். இந்தக் கொள்கைகளால் அதிருப்தியில் இருந்த இளைஞர்கள் சிலர், நேற்றுக் காலை சட்ட சபைக் கூட்டம் ஆரம்பித்தவுடன் உள்ளே நுழைந்து முற்றுகை போராட்டம் நடத்தினர். அப்போது 3 இளைஞர்கள் பொலிஸ் பாதுகாப்பை மீறி சட்ட சபைக்குள் கோஷமிட்டனர். இது தொடர்பாக 3 இளைஞர்களை பொலிஸார் கைது செய்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட கொரியாவை தாக்க வசதியாக

# ஏவுகணைத் திறனை மும்மடங்கு அதிகரிக்கும் தென் கொரியா

சியோல்,ஒக்.9

அமெரிக்காவின் உதவியுடன் வட கொரியாவை முழுமையாகச் சென்று தாக்கும் வகையில் தென் கொரியா தனது ஏவுகணைத் திறனை மும்மடங்கு அதிகரிக்கவுள்ளதாக தென்கொரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுன் யுங்-வூ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவுடன் மேற்கொண்டுள்ள புதிய ஒப்பந்தத்தின்படி, 800 கிலோ மீற்றர் தொலைவு சென்று தாக்கும் வகையில் ஏவுகணைகளை தென் கொரியா தயாரிக்கவுள்ளது.

வட கொரியாவின் இராணுவ அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் விதத்தில் இந்த சீரமைப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

இருப்பினும் ஏவு கணையின் 500 கிலோ சுமை திறன் அதிகரிக்கப்படவில்லை. குறுகிய தூர ஏவுகணைகளின் சுமைதிறனை அதிகரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

800 கிலோ மீற்றர் தொலை தூரத்தைச் சென்று தாக்கும் வகையில் ஏவுகணையின் திறன் அதிகரிக்கப்படுவதன் மூலம், வட கொரியா முழுவதும், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் சில பகுதிகளையும் தாக்குதல் இலக்கில் கொண்டு வர முடியும்.

தென் கொரியாவும் அமெரிக்காவும் செய்து கொண்டுள்ள இராணுவ ஒப்பந்தத்தின்படி, தென் கொரியாவில் 28 ஆயிரம் அமெரிக்கப் படையினர் உள்ளனர். தென் கொரியா மீது வட கொரியா அணு ஆயுதத் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா, தென் கொரியாவுக்கு ஆதரவாகக் களமிறங்கும்- என்றார்.

கடந்த ஏப்ரல் மாதம் வட கொரியா அணு ஆயுத ஏவுகணைப் பரிசோதனையில் ஈடுபட்டதை அடுத்து, தென் கொரியாவும் ஏவுகணைத் திறனை அதிகரிக்க அனுமதி கோரியமை குறிப்பிடத்தக்கது. (வ)

## வெனிசுலாவில் மீண்டும் ஜனாதிபதி சார்வேஸ்



வெனிசுலாவின் ஜனாதிபதியாக ஹியுகோ சார்வேஸ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 54 வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற ஹியுகோ சார்வேஸ் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் வேட்பாளர் ஹென்றி கெப் ரில்ஸ்ஸை தோற்கடித்து இவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஹியுகோ சார்வேஸின் வெற்றியை அடுத்து வெனிசுலோவில் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

## செவ்வாய்க் கிரகத்தில் மண் துகள்களை ஆராயத் தயாராகும் ரோவர் விண்கலம்

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வு மேற்கொண்டுள்ள கியூரியாசிட்டி ரோவர் விண்கலம், அங்குள்ள மண் துகள்களைத் தோண்டி எடுப்பதற்குத் தயாராகி வருவதாக நாசா அறிவித்துள்ளது.

இதுகுறித்து நாசா ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவின் விண் வெளி ஆராய்ச்சி மையமான நாசா சார்பில் செவ்வாய்க் கிரகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக 'கியூரியாசிட்டி ரோவர்' என்ற விண்கலம் அனுப்பப்பட்டது. இது கடந்த ஓகஸ்ட் மாதத்தில் செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கியது.

இந்த விண்கலம் மேற் கொண்ட முதல் கட்ட ஆய்வில், செவ்வாய்க் கிரகத்தில் நீரோடை இருந்ததற்கு ஆதாரமாக சரளைக் கற்களாலான பாறைகள் காணப்படுவதைப் புகைப்படம் எடுத்து அனுப்பி இருந்தது. மண் குவியல்கள் காணப்படுவது போன்ற புகைப்படங்களையும், அந்த விண்கலம் அனுப்பியிருந்தது.

இந்தநிலையில் இன்னும் சில நாள்களில் அங்குள்ள மண் துகள்களைத் தோண்டி எடுத்து ஆய்வு மேற்கொள்ள உள்ளது. இதற்காக அந்த விண் கலத்தில் நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதுதவிர விண்கலத்தில் உள்ள கமராவிலும் இந்தக் காட்சிகள் படம்பிடிக்கப்பட்டு, உடனுக்குடன் நாசா தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

## ஒபாமாவின் தேர்தல் பிரசார நிதி அதிகரிப்பு

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரின் ஜனநாயகக் கட்சிக் கான தேர்தல் பிரசாரத்துக்கு வழங்கப்படும் நிதி அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்பிரகாரம் கடந்த மாதம் 181 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு பிரசாரங்களில் இதுவரை பெற்றுக் கொள்ளப்பட்ட அதிகூடிய நிதி உதவியாக இது அமைந்துள்ளது. நான்கு வருடங்களின் பின்னர் அமெரிக்காவில் வேலை வாய்ப்பற்றோர் வீதம் 7.8 ஆக வீழ்ச்சியடைந்துள்ளமை காரணமாக பராக் ஒபாமா மீது மக்களின் கவனம் திரும்பியுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட் ரோம்னியை எதிர்த்து பராக் ஒபாமா போட்டியிடவுள்ளார்.



அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் வர்ஜினியா மாகாணத்தின் அபிங்டன் நகரில் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரும், மசாசூசெட்ஸ் மாகாண முன்னாள் ஆணையாளருமான மிட் ரோம்னிக்கு, அவரது ஆதரவாளர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## அமெரிக்கா பெரு இடையே பாதுகாப்பு உறவைப் புதுப்பிக்க இணக்கம்

இரு தரப்பு பாதுகாப்பு உறவுகளைக் புதுப்பிப்பதற்கு அமெரிக்காவும் பெருவும் இணக்கம் தெரிவித்துள்ளன. அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லியோன் பனேட்டாவுக்கும் பெருவின் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான பயணத்தின் ஒரு கட்டமாக பெருவுக்குச் சென்றுள்ள லியோன் பனெட்டா அந்த நாட்டு ஜனாதிபதியையும் சந்தித்துள்ளார்.

வெளிநாட்டு நிலப்பரப்பில் தமது இராணுவத் தளங்களை உருவாக்க எதிர்பார்க்கவில்லை என்று குறிப்பிட்ட லியோன் பனேட்டா ஒரு நாட்டின் பிரஜைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான திறனை அதிகரிப்பதற்கு உதவி புரிவதே தங்களின் நோக்கம்- என்றார்.

இதேவேளை பெரு மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் செயற்படும் கிளர்ச்சிக் குழுக்கள் மற்றும் கொக்கெய்ன் உற்பத்தி குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது. (வ)

## பிலிப்பைன்ஸில் கிளர்ச்சியாளர்களுடன் சமாதான ஒப்பந்தத்துக்கு இணக்கம்

### அந்த நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

மணிலா,ஒக்.9

பிலிப்பைன்ஸ் அரசுக்கும் அந்த நாட்டு முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தத்துக்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக அந்தநாட்டு ஜனாதிபதி பெனிக்னோ அக்கியூனோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி என்ற ஆயுததாரிகளுடன் நீண்ட காலமாக நடத்தப்பட்ட பேச்சை அடுத்து இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது- என்றார்.

அரச படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 40 வருடங்களாக இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக ஒரு



இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் பட்சத்தில், தெற்கு பிலிப்பைன்ஸுக்கு சுயாட்சி அந்தஸ்து கிடைக்கும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.(வ)

## தமது இயக்கத்தில் இணைய மறுத்தவரின் பிள்ளைகள் தலிபான்களால் சுட்டுக் கொலை


காபூல்,ஒக்.9

தலிபான் இயக்கத்தில் சேர மறுத்த நபரின் இரண்டு குழந்தைகளையும் தலிபான்கள் சுட்டுக் கொன்றனர்.

ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தலைமையில், ஆப்கானிஸ்தானில் தற்போது ஜனநாயக ஆட்சி நடைபெற்றாலும் பல மாவட்டங்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் தான் உள்ளன.

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ளது கஸ்னி மாகாணம். இங்குள்ள ஈத்கா என்ற பகுதியைச் சேர்ந்தவர் ஜல்மாய். இவர் பொலிஸ் அதிகாரியாக உள்ளார். இவரைத் தங்கள் இயக்கத்தில் இணையுமாறு தலிபான்கள் வற்புறுத்தி வந்தனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்ததால் ஜல்மாயின் (வயது 16) மகனையும் ஒன்பது வயது



மகளையும் தலிபான்கள் நேற்று முன்தினம் சுட்டுக் கொன்றனர்.

பொலிஸ் வேலையை விடாததாலும், அவர்கள் இயக்கத்தில் இணையாத காரணத்தாலும் தலிபான்கள் இந்தப் படுகொலைகளை செய்துள்ளனர் என்று ஜல்மாய் தெரிவித்தார்.

## 10 லட்சம் வோல்ட் மின்சாரத்தை உடலில் பாய்ச்சி அமெரிக்கர் சாதனை

### மாயாஜால நிபுணரின் மெய் சிலிர்க்க வைத்த சாகஸம்

அமெரிக்காவைச் சேர்ந்த மாயா ஜால நிபுணர் ஒருவர், தனது உடலில் ஒரு மில்லியன் வோல்ட் (10 லட்சம்) மின்சாரத்தை பாய்ச்சி சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் டேவிட் பிளேன் (வயது 39). மாயா ஜால நிபுணரான இவர், பல்வேறு சாகச நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை வியப்பில் ஆழ்த்தி வருகிறார்.

இந்த நிலையில் 10 லட்சம் வோல்ற் மின்சாரத்தை தனது உடலில்



பாய்ச்சி சாதனை நிகழ்த்தப் போவதாக அறிவித்திருந்தார்.

இந்தச் சாதனை நிகழ்ச்சி நியூயோர்க் நகரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக மிகப் [illegible] அமைக்கப்பட்டது. அதன் நடுவில் 20 அடி உயரத்தில் மேடை உருவாக்கப்பட்டது.

அதில் ஏறியபடி நின்ற டேவிட்பிளேன் உடலில் 10 இலட்சம் வோல்ற் மின்சாரம் பாய்ச்சப்பட்டது. அது தனது உடலில் தாக்கி பாதிப்பு ஏற்படுத்தாமல் இருக்க அவர் விசேட உடை அணிந்திருந்தார்.

கடந்த 2 ஆம் திகதி அவர் தனது சாதனையை ஆரம்பித்து 4 ஆம் திகதி வெற்றிகரமாக முடித்தார். அவரது உடலில் 72 மணி நேரம் மின்சாரம் மின்னல் போன்று அலை அலையாகப் பாய்ந்து தாக்கியது.

சாதாரணமாக வீட்டு உபயோகத்துக்குப் பயன்படுத் தப்படும் 240 வோல்ற் மின்சாரம் உடலில் பாய்ந்தாலே உயிருக்கு ஆபத்து ஏற்படும். ஆனால் 10 லட்சம் வோல்ட் மின்சாரத்தை உடலில்பாய்ச்சி மெய்சிலிர்க்க வைத்த இந்த அரிய காட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் பிரமிப்புடன் கண்டு மிரட்சியுடன் ரசித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி கைது



மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் அந்தநாட்டுப் பொலிஸாரால் நேற்று திங்கட் கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரிலான நீதிமன்ற வழக்கு விசாரணைக்குச் சமுகமளிக்கத் தவறியதாலேயே இவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## நைஜீரியாவில் 30 ஆயுததாரிகள் சாவு

நைஜீரியாவின் வடகிழக்குப் பிராந்தியத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில், போகோ ஹராம் ஆயுதக் குழுவின் 30 இற்கும் அதிகமான ஆயுததாரிகள் கொல்லப் பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதல்களில் இவர்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் 10 பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போகோ ஹராம் ஆயுதக் குழுவின் சிரேஷ்ட கட்டளைத் தளபதி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# சூடானில் விமான விபத்து

## 13 பேர் சாவு



சூடானின் இராணுவ விமானமொன்று தலைநகர் ஹார்டோமுக்கு அப்பால் கடந்த ஞாயிற்றுக்கிழமை விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து அந்த நாட்டு இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:-

சூடான் தலைநகர் ஹார்டோமிலிருந்து தர்பூரின் பகுதியான பஸ்ஹர் நோக்கி குறித்த விமானம் பயணித்துக் கொண்டிருந்தது.

புறப்பட்ட 5 ஆவது நிமிடத்தில் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறால் அந்த விமானம் அவசரம் அவசரமாகத் தலைநகரிலேயே தரையிறக்கப்பட்டது. அப்போது சறுக்கிய அந்த விமானம் விபத்துக்குள் ளானது.

விபத்துக்குள்ளான பகுதியிலிருந்து 9 பேர் காப்பாற்றப்பட்டனர். அண்மைக் காலமாக சூடானில் பல விமானங்கள் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது

# தீவிரவாதத் தொடர்புடைய 11 பேருக்கு ஈராக்கில் தூக்கு

பக்தாத், ஒக்.9

ஈராக்கில் தீவிரவாத செயல்களில் தொடர்புடைய அல்ஜீரியாவைச் சேர்ந்தவர் உட்பட 11 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஈராக்கில் தீவிரவாதம் மற்றும் குற்றம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 68 பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்தநிலையில், கடந்த ஒகஸ்ட் 27 ஆம் திகதி ஒரே நாளில் 21 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதற்கு சர்வதேச ரீதியில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக, 10 ஈராக்கியர்கள் மற்றும் அல்ஜீரியாவைச் சேர்ந்த ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இவர்கள் மீதான வழக்கு பக்தாத் நீதிமன்றத்தில் நடைபெற்றது. விசாரணை முடிவில் 11 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு ஐ.நா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், சர்வதேச மனித உரிமை அமைப்புகள், சர்வதேச பொது மன்னிப்புச் சபை ஆகியவை கடும் கண்டனம் தெரிவித்தன.

ஈராக் நீதிமன்றங்களில் வெளிப்படையான விசாரணை நடப்பதில்லை. பலருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த நடைமுறையை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர் மனித உரிமை ஆர்வலர்கள். (வ)

### உக்ரேன் அரசின் கொள்கைகளுக்கு எதிராக

# முட்டை பொரித்த மாணவிக்குச் சிறை



உக்ரைனில் அரசு கொள்கைகளை எதிர்த்து, வீரர்களின் நினைவிடத்தில் உள்ள சுடரில்முட்டை பொரித்தமாணவிக்கு 3 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனில் இருந்து உக்ரைன் பிரிந்து தனி நாடானது. இங்குள்ள மக்கள், முதியவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அவர்களுக்கு போதிய ஓய்வூதியம் கிடைக்க வில்லை.

இந்தநிலையில், அரசின் கொள்கைகளைக் கண்டித்து ஹன்னா சின்கோவா என்ற 21 வயது மாணவி போராட்டம் நடத்தி வருகிறார். தலைநகர் கீவ்வில் உள்ள இரண்டாம் உலகப் போரில் உயிர்நீத்த வீரர்களின் நினைவிடத்துக்குச் சென்றார். அங்குள்ள சுடரில் முட்டை பொரித்துச் சாப்பிட்டார். இதையடுத்து அவர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதுதொடர்பான வழக்கை விசாரித்த கீவ் நீதிமன்றம், ஹன்னாவுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இதுகுறித்து ஹன்னா கூறுகையில், போரில் உயிர் நீத்த வீரர்களின் குடும்பத்தினர், போரில் பங்கேற்று முதுமையில் உள்ள வீரர்களின் நிலை பரிதாபமாக உள்ளது. அவர்களுக்கு சமைக்க எதுவும் இல்லை, சாப்பிட எதுவும் இல்லை. இந்த அவல நிலையை மக்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்லவே, நினைவுச் சுடரில் முட்டை பொரித்தேன். இதேபோல் மற்றவர்களும் விரைவில் செய்வார்கள். எனக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்வேன் - என்றார். (வ)

## சீன அரசுக்கு எதிராக திபெத்தில் இளைஞர் தீக்குளிப்பு

சீன அரசை எதிர்த்து திபெத்தில் 27 வயதுடைய இளைஞரொருவர் தீக்குளித் துள்ளார். கன்ஸு என்ற மாகாணத்தில் திபெத்தியர்கள் அதிகம் வாழும் பௌத்த மடம் உள்ளது. இந்த மடத் தில் வசித்து வந்த இளைஞரே தீக்குளித்துள்ளார்.

திபெத்தில் மத சுதந்திரமும், மொழிச் சுதந்திரமும் வேண்டும், தங்களது தலைவர் தலாய் லாமா திபெத்துக்கு திரும்ப அழைக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி குறித்த இளைஞர் தீக்குளித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று BMICH இல் HNDA பட்டம் பெறும் எமது நிறுவன ஊழியர்
S.பிரசன்னா அவர்களை வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
Manager & Staff
Capital alliance Securities (pvt) Ltd, Jaffna.
(23882)(2.7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு .திருமதி மோகன்ராஜ் - லிண்டா தம்பதியரின் செல்வப்புதல்வி
மோ .விதுஸ்சனா
(யா/மாதகல் சென் தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை மாணவி)
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து 167 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார் இவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். அத்துடன் இவர் கடந்த ஆண்டு நடைபெற்ற மறைக்கல்வித்தேர்விலும் 100 புள்ளிகள் பெற்று யாழ். மாவட்டத்தில் முதல் நிலை வகித்து யாழ். ஆயர் அவர்களால் தங்கப்பதக்கம் அணியப்பட்டு கௌரவிக்கப்பட்டவராவார்.
இவரது கல்வி வளர்ச்சிக்கு உதவிய அனைத்து ஆசிரியர்களுக்கும் அருட்சகோதரி லெற்றிசியாவுக்கும் பாராட்டுக்களையும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அம்மம்மா, உறவினர்கள்.
சென்தோமஸ் வீதி, மாதகல்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர் கே.கே.யோகநாதன்
இந்த ஆண்டுக்கான நல்லதிபராகத் தெரிவு செய்யப்பட்டு பிரதீபா பிரபா 2012 விருதினை இன்றைய தினம் கொழும்பில் ஜனாதிபதி தலைமையிலான நிகழ்வில் வைத்து பெற்றுக் கொள்ளும் எமது பாடசாலையின் அதிபர் திரு.கே.கே.யோகநாதன் அவர்களை மேன்மேலும் உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
(சி/4008)(2.7)

எம்மை வாழ வைத்தவர்கள்
நூல் வெளியீட்டு விழா அழைப்பு
யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
08.10.2012 அன்று உதயனின் 18 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் ஆய்வுரைகள் எனும் தலைப்பின் கீழ்
திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள்(முன்னாள் அதிபர் யா/இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி) எனவும்
நயப்புரை : எனும் தலைப்பின் கீழ்
திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் முன்னாள் அதிபர் யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை) எனவும் வாசிக்கவும்.
(சி/3825)(7.8)

கோழிக் குஞ்சு விநியோகம்
BAHIRA NO -1 புறொயிலர் குஞ்சுகள், 11.10.2012 விநியோகிக்கப்படும்.
விலை 70/=
★ றாஜின் நவாலி வீதி, ஆனைக்கோட்டை 0776090926
★ கதிர் வேலாண் கிளிநொச்சி 0772046803
★ தர்க்கா பாம் சுன்னாகம் 0779346599
★ ஜெல்லி பாம் பருத்தித்துறை 0773541771
★ P.ரவி சாவகச்சேரி 0775591366
(23889)(9.14)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பிரதி முதல்வரும் விஞ்ஞான பாட சிரேஷ்ட ஆசிரியருமான

திருமதி கமலவேணி தர்மகுலசூரியர்
அவர்கள் நல்லாசிரியருக்கான ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா விருது பெறுவதனையும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் Merit சித்தி பெற்று முதுமாணிப் பட்டம் பெறுவதனையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
திருமதி தனலட்சுமி செல்லையா.
அ. கேதீஸ்வரன் குடும்பத்தினர்.
செ. நிமலராங்கன் குடும்பத்தினர்.
செ. நிமலரூபன் குடும்பத்தினர்.
பெரியபளை, பளை. (23865)(7.8)

வ/ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, நெடுங்கேணி
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012

செல்வி சு.தனுஜா பெற்ற புள்ளி - 157 மாவட்ட நிலை - 110
சித்திப் புள்ளியை அண்மித்தோர்
எமது பாடசாலை மாணவர்களை வாழ்த்துவதோடு, இதற்கு அரும்பாடுபட்ட அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துவதோடும் எமக்குச் சகல வழிகளிலும் உதவிய வவுனியா வடக்கு வலயத்துக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
செல்வன் கா.றேனுகாந் பெற்ற புள்ளி - 152 மாவட்ட நிலை - 197
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு, அபிவிருத்திச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(5)

லிங்கன் ஜேம்ஸின் சவாலை ஏற்றுக் கொள்வாரா? இல்லையா? இருவருக்கும் சண்டை நடந்தால் யார் வெற்றி பெறுவார்கள்? லிங்கனுக்கு ஜேம்ஸைச் சந்திக்க துணிவு இல்லையா? இப்படிப் பேச்சுக்கள் அடிபட்டன.

இனியும் லிங்கன் தாமதிக்க முடியாதநிலை. யோசித்தார். ஜேம்ஸைவிட லிங்கனுக்கு நீண்ட கைகள். ஆகையால் கத்திச் சண்டைக்கு ஒப்புக் கொள்ளலாம் என்று முடிவுசெய்தார். இடத்தையும், தேதியையும் குறிப்பிட்டுவிட்டு தினமும் கத்திச் சண்டை பழகினார். எப்படியும் ஜேம்ஸைத் தோற்கடித்து, அவர் செய்த குற்றங்களை நிரூபிக்க வேண்டும்....




இருவரும் சந்தித்து மோதும் நாள் வந்தது. குறிப்பிட்ட நேரத்தில் இருவரும் வந்தார்கள். ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் பார்த்தார்கள். லிங்கனின் பார்வையில் ஒரு சக்தி இருந்தது. அவர் மனத்தில் இருந்த உறுதி வெளிப்பட்டது. அதே நேரத்தில், லிங்கனைத் தோற்கடித்து அவர் சொன்னவை பொய் என்று நிரூபிக்க வேண்டும் என்ற துடிப்பு ஜேம்ஸிடம் இருந்தது.

உண்மையிலேயே ஊழல் செய்தவர்கள், உண்மையிலேயே மக்களை ஏமாற்றியவர்கள், தம்மைப்பற்றி யாராவது தாக்கிப் பேசிவிட்டால் இந்த அளவுக்கு எதிர்த்துப் போராடமாட்டார்கள் என்பதை லிங்கன் உணர்ந்தார்.

தான் நினைத்த அளவுக்கு ஜேம்ஸ் ஹில்ட்ஸ் மோசமானவர் அல்லர் என்றும், தன் கருத்து தவறானது என்பதையும் உணர்ந்தார்.

"நாம் கத்திச் சண்டை தொடங்குமுன் கொஞ்சம் மனம் விட்டுப் பேசலாமே! சண்டைக்குப் பிறகு நம்மில் ஒருவர் இறப்பது உறுதி. பிறகு பேச முடியாது. ஆகவே இப்போது பேசுவோம்" என்றார் லிங்கன்.

ஜேம்ஸும் ஒப்புக்கொண்டார்.

இருவரும் உட்கார்ந்து மனம் விட்டுப் பேசினார்கள். தான் செய்த தவறுகளை லிங்கன் உணர்ந்தார். அதே நேரத்தில், தனக்குத் தெரியாமல் சில தவறுகள் நடந்துவிட்டன என்பதையும் ஜேம்ஸ் உணர்ந்தார்.

இருவரும் மனம் விட்டுப் பேசியதன் விளைவாக, இருவரும் சண்டை போடத் தேவையில்லை, நண்பர்களாகப் பிரிவோம் என்று முடிவு கட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு லிங்கன் தன் வாழ்க்கையில் ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக்கொண்டார்.

மற்றவர்களைப் பற்றித் தாக்கி இழிவாகப் பேசுவதோ எழுதுவதோ நன்மை பயக்காது என்பதை உணர்ந்தார். அதே நேரத்தில் அது தன் செல்வாக்கைக் குறைக்கும் என்பதைப் புரிந்துகொண்டார்.

''இனி நான் என் வாழ்க்கையில் யாரையும் இழிவாகப் பேசமாட்டேன்'' என்று சபதம் செய்தார். அதன்படி நடந்தார்.

லிங்கனின் வாழ்க்கையில் நடந்த இந்தச் சம்பவம் நமக்கு ஒரு நல்ல பாடம்.

தவறு செய்பவர்களை இழிவாகப் பேசுவதாலோ, தாக்கிப் பேசுவதாலோ, கண்டபடி கண்டிப்பதாலோ நாம் நமது நல்ல உறவைத் துண்டித்துக்கொள்வோம். அதே நேரத்தில் அவர்களைத் திருத்தவும் முடியாது. தவறு செய்தவர்களிடம் இதமாக அவர்கள் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி, மெல்ல, மெல்ல அவர்களைத் திருத்த வேண்டும். இந்தச் செயல் நம்மை அனைவரும் விரும்பும்படி செய்யும்.

**உயிருக்கே ஆபத்தா?**
**சும்மா விடலாமா?**

சில வேளைகளில், சிலர் செய்யும் தவறுகள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம். தெரியாமல் செய்த தவறுகளை அப்படிப்பட்ட நேரத்தில்கூட பக்குவமாக அவர்களிடம் சொல்லி அவர்களைத் திருத்த வேண்டும். உதாரணமாக:

ஒரு பைலட், திறமை மிக்கவர். தவறுகள் செய்யாதவர். இவர் ஒரு சிலருக்கு விமானம் ஓட்டக் கற்றுக்கொடுத்து வந்தார். ப்ளையிங் கிளப்பைச் சேர்ந்த சாதாரண விமானம். பெற்றோலில் ஓடக்கூடியது.

இவர் மூன்று பேர்களை அழைத்துக்கொண்டு உயரத்தில் விமானம் ஓட்டக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். திடீரென்று விமானத்தில் ஏதோ கோளாறு. இஞ்சினில் ஒரு சத்தமும் வரவில்லை. இஞ்சின் முழுக்க முழுக்க நின்றுவிட்டது.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# கல்வி விதையை சிறுவரிடம் விதைத்து நல்ல அறுவடையைப் பெறுங்கள்

## திருகோணமலை நகரசபைத் தலைவர் உரை

திருகோணமலை,ஒக்.9

சிறுவர் உள்ளத்தில் கல்வி விதைகளை விதைத்து சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆலயம் போன்றது சிறுவர்களின் உள்ளம். கடமையுடன் அறிவுக் கண்ணையும் திறப்பவர்கள் ஆசிரியர்கள். மனிதனை பூரணமாக மாற்றுவது வாசிப்பு. இந்த மூன்றும் கிடைத்தற்கு அரியவை.

ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதம். ஆசிரியர்களை கௌரவிப்பது ஆசிரியர் தினம். சிறுவர்களை மகிழ்விப்பது சிறுவர் தினம். இந்த மூன்று தினங்களையும் முப்பெரும் விழாவாக நடத்துவதைப் பார்க்கும் போது மனம் மகிழ்ச்சியடைகின்றது. இவ்வாறு குறிப்பிட்டார் திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா.

வெள்ளிக்கிழமை திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தேசிய வாசிப்பு மாதம், ஆசிரியர்தினம், சிறுவர்தினம் ஆகிய மூன்று நிகழ்வுகளையும் முப்பெரும் விழாவாக வித்தியாலய அதிபர் எம்.எம்.எம். முஹைஸ் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வின் முதன்மை அதிதியாக நகரசபைத் தலைவர் க.செல்வராஜா கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய போது தெரிவித்ததாவது:-

இந்து சமயத்தில் மூன்று தெய்வங்கள் செய்வது போன்று ஆசிரியர்களும் செய்கின்றார்கள். படைத்தல் தொழிலை செய்கின்றார்கள். பல ஆயிரக்கணக்கான வைத்தியர்களை, தொழில்நுட்பவியலாளர்களை, சட்டத்தரணிகளை என பல்வேறு துறைகளில் உருவாக்குகின்றார்கள். இதன் மூலம் அவர்கள் படைத்தல் தொழிலை செய்கின்றார்கள்.

காத்தல் தொழிலும் இவர்களிடம் காணப்படுகின்றது. மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியே செல்லும் வரை அவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறார்கள். சிறுவர்களிடம் அன்பாக இருந்து அவர்களிடம் இருக்கும் கெட்ட பழக்கங்களை இல்லாது அழித்து விடுகின்றார்கள்.

இதன் மூலம் ஆசிரியர்கள் தெய்வத்துக்கு நிகராக கணிக்கப்படுகின்றார்கள். அதேபோன்றுதான் தாய் தந்தையர்களும் திகழ்கின்றார்கள்.

இன்று வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து வருகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி வாசிப்பு வீதத்தைக் குறைத்துள்ளது. வாசிப்புத் தான் ஒரு மனிதனைப் பூரண மனிதனாக மாற்றுகின்றது. மாணவச் செல்வங்களே! நீங்கள் வாசிப்பில் கவனம் செலுத்தி அறிவை வளப்படுத்த வேண்டும்.-என்றார். (ம-40)




கொழும்பு றோயல் கல்லூரியால் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான நாடகத்திறன்காண் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் தவராசா சண்முகப்பிரியன் தேசிய ரீதியில் வெற்றி பெற்று வேதியல் விருதைப் பெற்றுக்கொண்டுள்ளார். சண்முகப்பிரியனுக்கான வழிப்படுத்தலை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி நாடக மன்றப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி. குமரன் மேற்கொண்டிருந்தார். பாடசாலை அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் மற்றும் நாடகமன்றப் பொறுப்பாசிரியருடன் மாணவன். (ம)


## ஆக்கத்திறன் போட்டியில் முதலிடம்



அச்சுவேலி,ஒக்.9


அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையின் மாணவன் முரளிதரன் நிதுஜன் 'டயலொக்' நிறுவனம் நடத்திய ஆக்கத்திறன் சித்திரப் போட்டியில் வடக்கு மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ம-11)

## கட்டுரைப் போட்டியில் முதலிடம்



முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலய உயர்தர கலைப்பிரிவு மாணவி சிவலிங்கம் சியாமினி கொழும்பு தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மாவட்டமட்டத்தில் முதலாம், இடத்தையும் அகில இலங்கை மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். (ம)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



நெல்லியடியைச் சேர்ந்த திருநாவுக்கரசு யோகேந்திரன் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளராக பணியாற்றும் இவர் சிறந்த சமூகசேவையாளருமாவார். (எ-253)

# சிறுவர்களை சரியாக வளர்த்தால் தேசப்பற்றுடன் செயற்படுவார்கள்

## வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

வவுனியா,ஒக்.9

சிறுவர்கள் நாளைய உலகின் தலைவர்கள். இன்று அவர்கள் சரியானமுறையில் வளர்த்தெடுக்கப்பட்டால் நாளைய உலகில் தேசப்பற்றுடன் செயற்படுவார்கள் என்று வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அதிபர் வேலுப்பிள்ளை இந்திரன் தெரிவித்தார்.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற சிறுவர் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன. சிறந்த கற்பித்தல் செயற்பாடு, உளம் மகிழும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் சிறுவர்களுடைய உளம் மகிழ்வடைகிறது. பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு சிறார்களையும் நாம் அன்புடன் வரவேற்க வேண்டும். அவர்களுடைய உளம் பாதிக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டும். எந்தவொரு பாடசாலைச் சிறுவர்களும் கல்வியை இடைநிறுத்த விடாது அவர்களுக்கு விளங்கும் வகையில் கற்பிக்க வேண்டும். பாடசாலையில் மாணவர்களுக்கு சிறந்த ஒழுக்கங்களை கற்றுக் கொடுக்க வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த பலரும் முன்வர வேண்டும். பாடசாலையில் எந்தவொரு துஷ்பிரயோகங்களும் இடம்பெறாத நிலையில் விழிப்புடன் செயற்பட வேண்டும். பாடசாலைக் கல்வியில் சிறுவர்களுக்கு இது சம்பந்தமாக தெளிவுபடுத்த வேண்டும். தொலைக் காட்சியில் வரும் வன்முறை விடயங்கள் சிறுவர்களை பாதிப்படையச் செய்கின்றன.

எனவே மாணவர்களை வன்முறைகளிலிருந்து விடுவித்து, அவர்களைப் பாடசாலைக் கல்வியின் மூலம் மேம்படுத்த ஆசிரியர்கள் முன்வரவேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் கலந்துகொண்டார். (எ-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# தொடர்தல் தேவை

கொஞ்ச நாள்களாக ஒளிந்திருந்த டெங்கு, கொக்குவில் இந்து மாணவனின் உயிர்குடிப்போடு மீண்டும் குடாநாட்டில் தன் பிரசன்னம் நிகழ்ந்து விட்டதை உறுதிப்படுத்தியிருக்கிறது. இது தவிர இன்னும் எட்டுப்பேர் டெங்கால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

டெங்கு நோய் தாக்கம் உணரப்பட்டவுடன் சுகாதாரத் துறையினர் விழுந்தடித்துக் கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கையில் இறங்குவார்கள். ஊரெங்கும் புகையடித்து, ஒளிந்திருக்கும் நுளம்புகளைக் கொல்லும் படலம் களைகட்டும். நீர் தேங்கி நிற்கக் கூடிய வகையில் கழிவுப் பொருள்களைக் கொண்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் பாயும். எல்லாம் கொஞ்சக் காலத்துக்குத் தான். பின்னர் கழுதை கட்டெறும்பாகிவிடும். சுகாதாரத்துறையினரும் டெங்கை மறந்தவர்களாகக் கொல் களத்துக்கு சீல் வைப்பதிலும், உணவகங்களை தரம் பிரிப்பதிலும், காலாவதியான பொருள்களை கண்டுபிடிப்பதிலும் தம் கவனத்தைத் திருப்பிவிடுவர்.

டெங்கு நுளம்புகளும் ஒரு கெரில்லா போராளி போல ஒளிந்திருந்துவிட்டு, சுகாதாரத்துறை சோர்ந்து போன தருணத்தில் தலையெடுத்து தன் கைவரிசையைக் காட்டிவிடும். அதன் பின்னரே சுகாதாரத்துறையின் தூக்கம் கலையும். மீண்டும் டெங்கு ஒழிப்பில் குதிப்பர். பழைய குருடி கதவைத் திறக்க மீண்டும் தூக்கம். இதுவே தொடர்கதை.

இத்தகைய தொடர்ச்சியின்மையே டெங்கை குடாநாட்டில் தொடர்ந்தும் நிலைகொள்ளச் செய்திருக்கிறது. அதேவேளை வருடம் முழுவதும் டெங்கு ஒழிப்பிலேயே சுகாதாரத்துறையினரும் கவனத்தைச் செலுத்துவது இயலாத விடயம் தான். ஆயினும் டெங்கு ஒழிப்பில் தொடர்ச்சியைப் பேணுவதற்கு நிரந்தரக் கட்டமைப்பு ஒன்று பொதுமக்களிடத்தே ஏற்படுத்தப்பட்டால் அதனூடாக எப்போதும் தலையெடுக்காதபடி டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்த முடியும். அதற்கு சுகாதாரத்துறையினர் மக்களோடு இணைந்து செயலாற்ற முன்வரவேண்டும்.

முட்டையில் மயிர் பிடுங்குவதைப் போல, தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைப்பதில் காட்டும் கவனத்தை தேவையான விடயங்களில் காட்ட சுகாதாரத்துறையினர் மறந்துவிடுகிறார்கள். அண்மையில் ஒரு கடையில் காலாவதியான பொருள்களை சுகாதாரத்துறையினர் கைப்பற்றி அழித்தனர். இது நல்ல செயல் தான். ஆனால் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பனங்கட்டிக் குட்டானுக்குக் கூட உற்பத்தித் திகதியும், முடிவுத் திகதியும் குறிப்பிட வேண்டும் என்று அழுங்குப் பிடியாக நின்று அவற்றையும் அழித்துவிட்டுத்தான் சுகாதாரப் பரிசோதகர்கள் ஓய்ந்தனர். அதற்குப் பின்னர் பனங்கட்டிகளை அவற்றின் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்ய கடைக்காரர்கள் பின்னடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். குடிசைத் தொழிலாக இருந்து இன்று அருகிவரும் பனங்கட்டி உற்பத்தியை இதுபோன்ற கெடுபிடிகள் முற்றாக இல்லாமல் செய்துவிடுமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அதன் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி, முடிவு திகதிகளை பொறிக்க வேண்டும் என்று அறிவுறுத்தவும் சுகாதாரத்துறையினர் முன்வரவில்லை.

இதுபோன்று, விழலுக்கு நீர் இறைக்கும் காரியங்களில் இறங்கும் நேரத்தை டெங்கு நோய் போன்ற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு மக்கள் கட்டமைப்பை நிரந்தரமாக உருவாக்க செலவிடலாமே?

# ராஜபக்ஷாக்கள் காட்டும் மாயை

*தமிழில் : கே.எஸ்.எம்*

*மூலம்: ராவய*

முதற் தடவையாக பராஒலிம்பிக் போட்டிகளில் பதக்கமொன்றை அண்மையில் இலங்கை வென்றெடுத்துள்ளது. விரைவிலோ அல்லது சற்றுத் தாமதமாகவோ அதற்கான கௌரவத்தையும் கூட ராஜபக்ஷாக்களே தட்டிக் கொள்ளக் கூடும். பயிற்சிக்குக் கூட எந்தவொரு அரச உதவியும் கிட்டாத நிலையில் தனது சுயமுயற்சியால் மாத்திரமே வெற்றிவாகை சூடிக் கொண்ட அந்த விளையாட்டு வீரருக்கு, விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு உட்பட அனைத்துத் தேவைகளையும் தனது சொந்தப் பணத்திலேயே மேற்கொள்ள நேர்ந்தது. அரசின் பிரசாரங்களுக்காக கோடிக் கணக்கில் செலவழிக்கும் நாடொன்றிலேயே இந்த அவல நிலை அந்த விளையாட்டு வீரருக்கு ஏற்பட்டது.

அந்தப் பிரசாரங்களுக்கு அமைய, நாட்டின் சுபீட்சத்துக்கும் மக்களின் சௌபாக்கியத்துக்கும் தம்மை அர்ப்பணம் செய்வோர் ராஜபக்ஷாக்கள் மாத்திரமே.

இத்தகைய புகழ் கொண்ட இந்த நாட்டில் பணவீக்கம், கல்வி முறைமையில் நலிவு நிலை, சிறுவர் துஷ்பிரயோகம், காணாமல் போகச் செய்தல் போன்ற சிற்சில பிரச்சினைகள் நிலவினாலும் கூட, அவை நாட்டின் சுற்றுலாத் துறைக்கும் முதலீடுகளுக்கும் சிறுஅளவு பாதிப்பை ஏற்படுத்துமாகையால் அவற்றைப் பெரிதுபடுத்தாதிருக்க வேண்டுமென்பது பாதுகாப்புச் செயலரின் நிலைப்பாடு.

அந்த வகையில் ராஜபக்ஷ சகோதரர்களின் உதவி கிட்டியிருப்பதன் காரணமாக எம்மால் சிறப்பாக வாழ முடிகிறது என நம்புவதே உண்மையான தேசப்பற்றின் இலட்சணமாகும். நாட்டின் பாதுகாப்புக்கும் சுபீட்சத்துக்கும் எதிராக மறைமுகமாகச் செயற்பட்டு வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சதிகாரர்களின் கையாட்களுக்கு இந்த தெளிவான சிந்தனை உதிக்கப் போவதில்லை. ஏகாதிபத்தியத்தின் புதிய உடையைப் போன்று இந்த அச்சுறுத்தலை தேசப்பற்றாளர்களால் மாத்திரமே கண்டறிந்து கொள்ள முடியும். தேசப்பற்றுள்ள ஒரே தலைமைத்துவம் என்ற ராஜபக்ஷ தரப்பினரால் மாத்திமே இதுசம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்றாகிறது.

ஆனாலும் நம்பத்தக்க காரணிகளுடன் அதை நிரூபிப்பதென்பது சாத்தியமற்ற ஒன்றே. அது நாட்டின் குடிமக்களை மனிதர்களாகக் கருதும் நிலைப்பாட்டையும் கெடுத்துவிடுவதாக அமையும். எனவே இந்த சுப்பர் மேன் மாயையை உச்சத்தில் நிறுத்த வேண்டுமானால் அவர்களைத் தவிர்ந்த நாட்டிலுள்ள ஏனையோர் மனிதர்கள் என்ற தரத்திலிருந்து கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டாக வேண்டும். சுப்பர் மேன் என்ற இந்த அதீத ஆற்றல்களைக் கொண்டுள்ள தலைவர்களை விமர்சிக்கத்தக்க ஆற்றல் படைத்த குடிமக்கள் நாட்டில் இருக்கக் கூடாது. புறக்கணிப்புக்களைத் தாங்கிக் கொள்ளத்தக்க அடிபணிந்து நிற்கும் முதிர்ச்சியுறாத பொதுமக்களே நாட்டில் இருக்க வேண்டும் என்பதே அந்த அதீத ஆற்றல் படைத்த தலைவர்களின் விருப்பமாகும். அந்த வகையில் அவர்களின் வழிகாட்டல்கள் போதனைகள் மற்றும் பாதுகாப்பு இன்றி வாழ இயலாத நலிவுற்ற தரப்பினரே இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை ஏற்கச் செய்யாது ராஜபக்ஷாக்கள் சுப்பர் மென்களாகி விட இயலாது. அதே போன்று சுதந்திரக் கட்சியின் தலைவர்களைத் தமக்குத் தலைவணங்கி நிற்கும் சிஷ்யகோடிகளாக்கிக் கொள்வது, சுதந்திரக் கட்சியை தமது ஆதிக்கத்துக்கு உள்ளாக்கிக் கொள்ள இயலாது போகலாம்.

மக்களின் அன்புக்குப் பாத்திரமாகியிருந்த வடகொரியாவின் தலைவர் கிம்ஜோன் நாட்டு மக்களை வழிநடத்திச் செல்லும் பணியில் மனத்தளவிலும் உடலளவிலும் கடுமையாக உழைத்ததன் காரணமாக ஏற்பட்ட இதயப்பாதிப்பினாலேயே மரணமடைந்ததாக அந்த நாட்டில் பேசப்பட்டது.

அந்த வகையில் "மக்களுக்காக கடுமையாக உழைக்கும் தலைவர்" என்ற சொற்பதமானது ஏகாதிபத்திய மாயை செல்லுபடியாவதற்கு இன்றியமையாத அம்சமொன்றாகும். தூக்கத்தை மறந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதென்ற தோற்றத்தை உருவாக்குவதும் ஏகாதிபத்திய வாதத்தை நிலைநாட்ட இன்றியமையாததொன்றே. கிம் ஜோனையொத்த தலைவரொருவரின் பாத்திரம் குறித்த விவரணத்துக்கு அமைய இந்த தேர்தல் காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிம் ஜோனின் பாத்திரமாக மாறிப்போயிருந்ததாகக் கொள்ள முடிகிறது. அந்த வகையில் தமது அன்றாடப் பொறுப்புக்களுக்கிடையிலும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுடன் அளவளாவுகிறார். எம்பிலிப்பிட்டிய வாரச் சந்தைக்குச் சென்று அதை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்குமாறு பணிப்புரை விடுக்கிறார். பஸ்தரிப்பு நிலையமொன்றில் காத்திருக்கும் பயணிகளுடன் அளவளாவுகிறார். உடவளவை தேசிய வனத்துக்குச் சென்று யானைகளைப் பார்த்து ரசிக்கிறார். சந்திரிகா குளத்துக்குச் சென்று அதைப் புனரமைப்புச் செய்யப் பணிக்கிறார். எம்பிலிப்பிட்டிய ஏற்று நீர்ப்பாசனத் தொகுதியைப் பரிசீலிக்கிறார். அதே வேளை இலங்கைக்கு வெண்கலப் பதக்கத்தை ஈட்டித் தந்த பிரதீப் சஞ்ஜயவை சந்திப்பதோடு அடுத்து இடம்பெறும் பரா ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொள்ள வேண்டுமென அவரை உற்சாகப்படுத்தி தட்டிக்கொடுக்கும் விதத்தையும், விண்வெளி ஆராய்ச்சி மையத்துக்குச் சென்று விண்வெளியை வெற்றி கொள்ளும் விதம் குறித்து அளவளாவும் ஒருவராக ஜனாதிபதியை நோக்க முடிகிறது.

எந்தவொரு தலைவராலும் இயலாது போயிருந்த இலங்கையின் நீண்ட கால யுத்தமொன்றை முடித்து வைத்த இந்த யுத்த வெற்றியானது ராஜபக்ஷ குடும்பத்துக்குப் பெரும் புகழையும் பலத்தையும் அவர்களது தலைமைத்துவம் குறித்து நம்பகத் தன்மையையும் ஈட்டித் தந்தது. ஆனாலும் கூட இன்று எதையும் அடிபட்டுப் போக செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்படும் வலுவான துருப்புச் சீட்டு என்றிருந்த அதன் பேராற்றல் நலிவுற்று வருவதைக் காணமுடிகிறது. அந்த போர் வெற்றிக்கு மக்கள் நன்றிக் கடன் செலுத்துவதைத் தொடர்ந்தும் எதிர்பார்க்க இயலாது என்பதையும் ராஜபக்ஷ சகோதரர்கள் நன்கறிவர். அபிவிருத்தி யுத்தத்தை மஹிந்த , பஸில், கோத்தபாய என்ற முத்தரப்பினால் மட்டுமே நடத்திச் செல்ல முடியுமென்ற மாயையையும் அவர்கள் மக்கள் மத்தியில் பரவலாக்க வேண்டியுள்ளது. ஆனாலும் அபிவிருத்தியை யுத்தமொன்றாகக் காட்ட இயலாது. அனைத்து சம்பவங்களையும் புறமொதுக்கி வைத்து அதுவே முக்கியமானதென்ற ரீதியில் முன்னெடுத்துச் செல்லும் கருமமொன்றும் அல்ல அது. அது சீர்தூக்கிப் பார்த்து மீளவும் மதிப்பீடுகளை மேற்கொண்டு இணக்கப்பாடுகளுடன் மேற்கொண்டு செல்லும் பயணமொன்றேயாகும்.

அபிவிருத்திக்கான ராஜபக்ஷாக்களின் முழுமையான இந்த முன்னெடுப்பின் மூலம் பலமான பொருளாதார அடித்தளமொன்றைக் கட்டியெழுப்பி சாதாரண பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை கட்டியெழுப்புவதே அதன் பெறுபேறாக அமைய வேண்டியுள்ளது. என்றாலும் கூட, அதற்குப் பதிலாக சந்தேகத்துக்கிடமான தரத்தினைக் கொண்டுள்ள கொங்கிறீட் காடுகளே அவர்களால் கட்டியெழுப்பப்படக் கூடும்.

அவற்றின் மூலம் பெரும் புகழீட்டிக் கொள்ளும் மாயைத் தோற்றமொன்றை ஏற்படுத்தி விட முடிந்தாலும் கூட அன்றாட வாழ்க்கைத் தேவைக்கு அவசியமான சிறு விடயமொன்றைக் கூட மிகச் சரியாக முகாமைத்துவப்படுத்திவிட அவர்களால் இயலாது. கலப்படமில்லாத எரிபொருள்களைத் தருவிப்பதற்கோ, தவறுகள் இல்லாத பரீட்சைகளை இடம்பெறச் செய்வதற்கோ அவர்களால் இயலாது. கடலளவுத் தேவைகள் என்பதன் மத்தியிலே சிறு தீவொன்றை மட்டுமே அவர்களால் நிறுவ இயலக் கூடும். இவற்றைக் காட்டியே இந்த சுப்பர்மேன் மாயையினுள் ஒளிந்து மறைந்து கொள்வதற்கு ராஜபக்ஷ முயற்சிக்கிறார். ராஜபக்ஷாக்கள் கூறுவதையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் நாட்டின் ஒட்டுமொத்த மக்களதும் மூளைகளைச் சலவை செய்வதே அவர்களின் தற்போதைய தேவையாகியுள்ளது. தமது புதல்வன் விண்வெளி வீரரொருவராகப் புகழடைவதற்கு பில்லியன் கணக்கில் செலவிடும் நிர்வாகத் தரப்புக்கு சவூதியில் மரண தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் ரிஸானா றபீக்குக்காக வழக்கில் ஆஜராகியுள்ள சட்டத்தரணிகளுக்குச் செலுத்துவதற்கு பணமில்லையென்ற நிலையை கண்டு கொள்ளாத இனமொன்றே அவர்களுக்குத் தேவைப்படுகிறது. தனது சிரமமான வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்கு வீரச் செயல்களைப் பற்றி பகல் கனவு காணும் ஜேம்ஸ் காபர் நாவலின் வோல்ட்டர் மிட்டி பாத்திரத்தைப் போன்று எம்மையும் கூட சிறுமையின் அடிமட்டத்துக்கே மூழ்கிச் செல்கையில் புகழ் என்ற மாயையில் கனவு காண வைப்பதே ராஜபக்ஷ சகோதரர்களின் தேவையாகியுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த சமூகங்களையே ராணுவமயமாக்கி விடுவதே இந்த உள்ளார்ந்த அரசியல் திட்டங்களின் இன்றியமையாத அம்சமொன்றாகும். ஏனெனில் ராணுவத்தினுள் ராஜபக்ஷமாரின் மனோராச்சியத்துக்குப் பொருந்தும் ஆயுதமுள்ளது.

விமர்சிப்பதற்கோ, சிந்திப்பதற்கோ அனுமதிக்கப்படாத கீழ்ப்படிதல் மட்டுமே என்ற கொள்கை நடைமுறையே அங்குள்ளது. ஒருவரது வாழ்க்கையின் உண்மையான பெறுமதிகள் கீழ்ப்படிதலின் மூலமே கிட்டுவதாக ராணுவச் சிந்தனைகள் குறிப்பிட்டுள்ளதாக 'த நியுயோக் ரிவியூ ஒப் புக்ஸ்' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக அனுமதிக்கு தகவல் தொழில்நுட்பத்தையும் ஆங்கில அறிவையும் விட ராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சியைப் பெறுவதே முக்கியமாகக் கருதப்படுவதற்கு இதுவே காரணமாகிறது. நாட்டில் பொருளாதாரம் சரிந்து வீழ்ந்திருந்தாலும், அரசியல் நலிவு நிலை தென்பட்டாலும் கூட அவற்றின் மத்தியில் கூட சுப்பர் மேன் குடும்பம் சம்பந்தப்பட்ட மாயையை மக்கள் மீது சுமத்திவிடுவதே ராஜபக்ஷாக்கள் குறிவைத்துள்ள இலக்காகியுள்ளது.

வடகொரியா மக்கள் தமது தலைவரின் புதல்வரை அவரது அரசியல் வாரிசாக மகிழ்ச்சியுடன் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது போன்று வைத்தியக்காரத்தனமான எதையும் தலைமேல் தூக்கி வைத்து அங்கீகரிக்கும் இனமொன்றே எமது இனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் அஞ்சல் சேவை

திருமதி. ச.கமலேஸ்வரி
தபாலகம், சங்கானை.

ஆதி மனிதன் இடம் பெயராமல் இருந்த தால் அவனுக்கு செய்திப் பரிமாற்றம் என்பது அவசியமான ஒன்றாக இருக்கவில்லை. அவன் தன் இனத்தவருடன் ஒரு மொழியில் உரையாடினான் ஆயினும் ஏனைய இனத்தவருடன் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அடையாளங்கள், குறியீடுகள் என்பவற்றைப் பயன்படுத்தினான்.

பழைய கற்காலம், புதிய கற்காலம், கடந்து மனிதன் வேட்டையாடக்கற்றுக்கொண்டான். அப்போது விவசாயத்துக்கேற்ற வகையிலான நீர் வசதி கொண்ட செழிப்புநிலம் அவனுக்குத் தேவைப் பட்டது. அந்தவகையான் இடத்தை நாடிச் சென்று விவசாயம் செய்ய முயற்சித்த வேளையில் அவன் தன் உறவினரிடமிருந்து பிரிவடைய வேண்டியதாயிற்று. தூர இடத்துக்குச் செய்தி அனுப்ப வேண்டிய தேவை அப்போதுதான் ஏற்பட்டது. அதற்காக அவன் புகையையும் பல வேறுபட்ட ஒலிகளையும் பயன்படுத்த ஆரம்பித்தான்.

அந்தக் காலங்களில் பிரபுக்கள் என்று சொல்லக் கூடியளவு சக்தி படைத்தோர் அடிமைகளைப் பயன்படுத்தித் தமது இரகசிய செய்திகளைப் பரிமாறினர். ஒரு அடிமையைத் தெரிவு செய்து அவன் தலையை மொட்டையடித்து அதில் தனது இரகசிய செய்திகளை ஏதாவது ஒரு நிறத்தைப் பயன்படுத்தி எழுதுவார்கள். பின்பு அவனை அடைத்து வைத்து உணவூட்டி தலைமயிர் வளர்ந்ததும் உரிய இடத்துக்கு அனுப்புவார்கள். அந்த அடிமையின் தலைமயிர் வளர்ந்து செய்தியை மறைத்துவிடும்.

அவன் செய்தியைப் பெறும் பிரபுவினிடத்தில் வரும்போது அவர் அவனுடைய தலைமயிரை மொட்டையடித்து அதில் எழுதப் பட்ட செய்தியை வாசித்து அறிந்து கொள்வார்.

ஒரு முகாமுக்கு அல்லது குறித்த இடத்துக்கு இரகசிய செய்தியை அனுப்புவதற்கு அந்தக் கால மனிதன் அம்புகளையும் பாவித்தான். ஒரு அம்பின் முனையில் கட்டி எய்யப்படும் செய்தி குறித்த இடத்தை அடைந்ததும் அங்கிருப்போர் அதனை எடுத்து வாசித்துவிட்டு அதற்கான பதிலை மீண்டும் அம்பின் முனையில் கட்டி எய்வதன் மூலம் உரியவருக்கு அனுப்பப்பட்டது. இந்த முறையால் கடல் கடந்த செய்திகளை அனுப்ப முடியவில்லை. இந்தத் தேவைகளுக்கு பல தடவைகளில் பயன்பட்டு வந்தவை பயிற்சியளிக்கப்பட்ட புறாக்களாகும்.

கிரேக்க சரித்திரம் இன்னொரு கதை கூறுகின்றது. மரதன் என்பவன் ஒரு செய்திப் பரிவர்த்தனை செய்யும் கூலியாள். அவன் 26 மைல் தூரத்தை இடைவிடாது ஓடிச் சென்று (மிகக் குறுகிய காலத்தில்) தன் இனத்தவர்கள் போரில் வெற்றியடைந்த செய்தியை அரசனுக்கு கூறிவிட்டு விழுந்து இறந்துவிட்டான். இன்று ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ஒரு நிகழ்ச்சியாக மேற்கூறப்பட்ட தூதுவனின் பெயரில் ஓட்டம் (மரதன் ஓட்டம்) சேர்க்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

அடுத்து நீண்ட ஈட்டி போன்ற உபகரணத்தை தற்பாதுகாப்புக்காக கையில் ஏந்திக் கொண்டு மறுகையில் செய்திப் பையையும் காவிக் கொண்டு ஓடிய தூதுவர் முறை அறிமுகமானது.



அவர்கள் காட்டுப்பாதையில் செல்லக் கூரான முனையும் நீண்ட தண்டும் கொண்ட ஈட்டி பயன்பட்டது. இவர்கள் மரதனைப் போன்று முழுத்தூரத்தையும் ஓடவில்லை. இடையிடையே உள்ளவர்களிடம் செய்திகளைக் கொண்டுபோய்க் கொடுத்தனர்.

அது இன்றைய அஞ்சல் ஓட்ட முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதுவே தபாலுக்கு அஞ்சல் என்ற பெயரைக் கொடுத்தது. இந்தத் தூதுவர்கள் இரவில் அரிக்கன் லாம்பு போன்ற வெளிச்சத்தைக் கொண்டு சென்றனர். சிலர் நாயையும் கூட்டிச் செல்வதுண்டாம். (ஏனெனில் நாய் மோப்ப சக்தி மூலம் விஷ ஜந்துக்களை இனம் காணுமல்லவா) இந்தச் செய்திப் பரிவர்த்தனை முறை மூலமே இன்றைய தபாலோடி (RUNNER) என்ற பெயர் உருவானது.

கிறிஸ்து வருடம் 1500 அளவில் கால்நடைத் தூதுவர்கள் பெருமளவில் செய்திப் பரிவர்த்தனைப் பணிகளில் ஈடுபட்டனர். இவர்கள் மலைகள், சமதரைகள், பள்ளத் தாக்குகள், ஆறுகள், அடர்ந்த காடுகள் ஆகியவற்றைக் கடந்து செய்திகளை எடுத்துச் செல்லும் மிகக் கடினமான தூதுவர் சேவையில் அரசகடமைகளை நிறைவேற்றினர். இந்தச் சேவைக்கு வலிமை பொருந்திய முரட்டுத்தனமான, ஓடக் கூடிய இளம் வயதினரே தெரிவு செய்யப்பட்டனர். பிற்காலத்தில் இவர்களுக்கு ஊதும் கருவி 'விசில்' ஒன்று வழங்கப்பட்டது. கழுத்தில் தொங்கும் இந்த விசிலை அவர்கள் நகரங்களை அண்மிக்கும் போது ஊதுவார்கள். இவ்வொலியில் இருந்து செய்தித் தூதுவர் வந்திருப்பதை நகரவாசிகள் அறிந்து கொள்வார்கள்.

1509 ஆம் ஆண்டில் நாளாந்தம் பொதுமக்களுக்கு தபால் பங்கிடும் முறை இருந்திருக்கின்றது. 1548 இல் லண்டனில் இருந்து ''கொலையின்'' என்று நகரத்துக்கு அனுப்பும் கடுகதிச் செய்திகள் 9 நாள்களில் சென்றடைந்தனவாம்.

இடையிடையே கள்வர்களின் தாக்குதல்கள், குதிரைகளுக்கு ஏற்படும் சுகவீனங்கள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டனவாம். லண்டன் - பிலிமத் பாதையில் (173 மைல்) 14 செய்திப் பங்கீட்டு நிலையங்கள் இருந்ததாக அறியப்படுகின்றது. இந்தச் சேவைக்காக செய்தித் தூதுவருக்கும் அவரின் குதிரைக்கும், தூர அடிப்படையில் பணம் வழங்கப் பட்டது. இந்த கால கட்டத்திலும் கூட இலங்கைத் தீவில் மக்களுக்கு செய்தி அனுப்பும் வசதிகள் கிடைக்கவில்லை எனலாம்.

## உலக அஞ்சல் தினம் ஒக்ரோபர் -09

**எமது நாட்டின் செய்திப் பரிவர்த்தனை அபிவிருத்தி**

ஆதிகாலத்தில் அரசர்களும் பிரதேச தலைவர்களும் மட்டுமே செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். இந்தச் சேவைக்காக அடிமைகள் ராஜதூதுவர்களாக அமர்த்தப்பட்டனர். இலங்கை நாடு 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர், 1648 இல் ஒல்லாந்தர், 1796 பிரித்தானியர் ஆட்சியின் கீழ் வந்தது. போர்த்துக்கேயர் செய்திப் பரிவர்த்தனையில் எதனையும் செய்யவில்லை. அவர்களுக்குப் பின்னர் ஆட்சி செய்த ஒல்லாந்தர்களும் மக்களின் செய்திப் பரிவர்த்தனையில் நாட்டம் செலுத்தவில்லை. 1796 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிரித்தானியர் எமது நாட்டில் மேற்கொண்ட அபிவிருத்திகளில் பிரதானமானது தபால்சேவையில் செய்த அபிவிருத்தியாகும். இலங்கையின் 1798 முதல் 1799 வரை கப்டன் ஏ. கென்னடி என்பவரும் 1800 முதல் 1804 வரை அந்தனி பேந்தொர்ச்சியும் அஞ்சல் அதிபதிகளாகத் பதவி வகித்துள்ளார். இருப்பினும் 1804 முதல் 1817 ஆண்டு வரை அஞ்சல் அதிபதியாக இருந்த ஈபிளாட்மன் என்பவர் நாட்டின் தபாற்சேவையின் அபிவிருத்திக்கு வித்திட்டவர் எனலாம்.

ஏனெனில் 1815 ஆம் ஆண்டில் இலங்கையில் முதல் 6 தபாலகங்கள் (கொழும்பு, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார்) நிறுவப்பட்டன. 1798 ல் இருந்து ஏதோவொரு வகையிலான தபால் சேவை இந்தத் தீவில் நடைபெற்று வந்தாலும் 1815 ஆம் ஆண்டிலே ஓர் ஒழுங்கமைந்த தபால் சேவைக்கு அத்திபாரமிட்டது.

1913 இல் இருந்து 1923 வரை எவ்-ஜே.சிமித் என்பவர் அஞ்சலதிபதியாக பதவி வகித்தார். இவருடைய காலப்பகுதியாகிய 1921 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் முதல் 6 உப அஞ்சல் அலுவலகங்கள் (திவுலபிட்டிய, அக்மீமன, ஆனமடுவ, கிரியெல்ல, மூதூர், சிலாவத்துறை) திறக்கப்பட்டன.

**முக்கிய ஆண்டுகள்:-**

*1857*- ஏப்ரல் 1ல் 6பென்ஸ் பெறுமதியான விக்டோரியா மகாராணியின் தலை உருவம் கொண்ட முத்திரை வெளியீடு.

(குறிப்பு:- உலகின் முதலாவது முத்திரை 1840 ல் ஒரு பென்ஸ் பெறுமதியுடன் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)

*1989:*- சர்வதேச விரைவுத் தபால் சேவை 'EMS'

*1992:*- பிராந்திய ரீதியில் அஞ்சல் அடையாள அட்டை, பக்ஸ் வசதி, தற்போது லைக்ரோனிக் காசுக்கட்டளை, மின்சாரப் பட்டியல், மோபிட்டல் கட்டணம் என்பன கணினியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

## சீரான கடித விநியோகம் மேற்கொள்ள சில குறிப்புக்கள்

✱சொந்த இடங்களில் மீளக்குடியேறியுள்ளவர்கள் தமது முகவரிகளை கடித விநியோக தபால் அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

✱தற்காலிகமாக வசித்த இடங்களில் இருந்து சொந்த இடத்திற்கு செல்பவர்கள் தற்காலிகமாக வசித்த இடங்களில் உள்ள கடித விநியோக தபாலதிபருக்கு 'தாம் சொந்த இடங்களுக்கு செல்வதாகவும் தமக்கு முகவரியிடப்பட்ட கடிதங்களை வழியனுப்புமாறும் அல்லது குறிக்கப்பட்ட காலத்திற்குள் வந்து பெற்றுக் கொள்வதாக' எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

✱முகவரிகள் தெளிவான எழுத்துக்களில் எழுதுதல் வேண்டும். நெளித்து வளைத்து தொடுத்து எழுதுதல் தவிர்த்தல் வேண்டும்.

*அனுப்புநர், முகவரி கட்டாயம் எழுதுதல் வேண்டும். ஏதாவது ஒரு காரணத்திற்காக கடிதம் விநியோகிக்க முடியாது போனால் அனுப்புகின்றவர் முகவரிக்கு கடிதம் திரும்பும்.

இல்லையேல் மீண்ட கடிதக் காரியாலயத்தால் (R I O-Return letter office) கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படும். கடிதங்களை உடைத்து உள்ளடக்கம் இருப்பதை பார்க்கும் அதிகாரம் இக் காரியாலயத்திற்கே வழங்கப்பட்டுள்ளது.

✱இந்தியா தவிர்ந்த ஏனைய அனைத்து வெளிநாட்டு முகவரிகளும் ஆங்கில மொழியிலேயே எழுதப்படல் வேண்டும்.

✱வெளிநாட்டுக் கடிதங்களில் அனுப்புநர் தமது முகவரியுடன் சிறிலங்கா என்பதையும் இணைத்தல் வேண்டும். ஏதாவது காரணத்திற்காக குறித்த கடிதம் விநியோகிக்க முடியாது போனால் இலங்கைக்கே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

✱பூரணமான முகவரி இடப்படுதல் வேண்டும். தந்தையின் பெயரையோ அல்லது கணவனின் பெயரையோ முழுப்பெயருடன் எழுதுதல் வேண்டும்.

✱பிறந்த குழந்தைகளுக்கு வங்கியில் பணம் வைப்பிடுதல் அல்லது காப்புறுதிப் பத்திரம் என்பன தந்தையின் முதல் எழுத்து மட்டும் குறிக்கப்பட்டு பிள்ளையின் பெயருடன் கடித விநியோகத்திற்கு வருகின்றது. தந்தையின் பெயர் முழுமையாக எழுத வேண்டும்.

✱வீட்டிலே இருக்காமல் வேலைக்குச் செல்பவர்கள் தமது கேற்றில் தாம் பூட்டித் திறக்கக் கூடியதாக சிறியளவிலான தபால் பெட்டி ஒன்றை இணைத்து வைத்தல் வேண்டும்.

✱கடித விநியோத்திற்கு என வரும் தபால்காரர்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தாத வண்ணம் தங்கள் வீட்டு கடி நாய்களை கட்டி வைக்கவும். இல்லையேல் 'நாய் கடிக்கும் கவனம்' என்ற விளம்பரப்பலகையைத் தொங்க விடவும் வேண்டும்.

✱பதிவுக் கடிதம் ஒன்றின் பற்றுச்சீட்டை தொலைத்தால் சான்றிதழ் படுத்தும் பிரதிக்கு ரூபா 25/= ஐ செலுத்தி பிரதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.


✱கடித விநியோகத்திற்கு என வரும் தபாற்காரர் முகவரிகளை விசாரிக்கும் போது இயன்றளவு விவரங்களைத் தெரிவிக்கவும்.

✱அயல் வீட்டுக்காரருடன் கோபம் , தாய் பிள்ளை, கணவன், மனைவி போன்றோருடன் கோபம் சண்டை போன்ற காரணங்களுக்காகக் கடித விநியோகத்தை சீர் குலைக்காதீர்கள்.

✱பொது மக்கள் தமக்கு வரும் கடிதங்கள் தொடர்பாக சந்தேகங்கள் ஏதும் ஏற்படின் அண்மையில் உள்ள கடித விநியோக அஞ்சலரிடம் சென்று இன்றே உங்கள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

''சீரான கடித விநியோகத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு தாரீர்''

உ+ம்-செல்வி.அனுசா சுப்பிரமணியம் (✓)
சு.அனுசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் ஒரு சுமை

பயணித்துக் கொண்டிருந்த ரயில் ஒன்று, குறித்த ரயில் நிலையத்தில் பயணிகளை ஏற்றுவதற்காக நின்றது. அப்போது அதிலே ஒருவர் பயணம் செய்வதற்காக ஏறினார். தலையில் ஒரு மூடையை வைத்திருந்தார். அந்த மூடையுடனேயே ரயிலுக்குள்ளே ஏறி அதனுடனேயே ஓர் இடத்திலே அமர்ந்தார். ரயில் புறப்பட்டது.

அந்த மனிதர் தனது தலையிலிருந்த மூடையைக் கீழே இறக்கி வைக்கவே இல்லை. சுமந்து கொண்டே வருகிறார். அவருக்கு எதிரிலே அமர்ந்திருந்தவர் கேட்டார்.

''ஏனப்பா... சுமையுடன் அமர்ந்திருக்கின் றீர்கள்... மூட்டையைக் கீழே இறக்கி வைக் கலாமே.. என்றார்.

''வேண்டாம் பாவம்... தலையில் இருக்கின்ற மூடையை இறக்கி ரயிலில் வைத்தால் ரயிலுக்குப் பாரம் அதிகமாய் இருக்கும்!'' என்றார் அந்த மனிதர்.

இப்படி ஒருவரைப் பார்த்தால் எமக்குச் சிரிப் புத்தான் வரும். ஏனென்றால் ரயில் அந்த மூடையையும் சேர்த்துச் சுமந்து கொண்டு போகின் றது.... அவர் அந்த மூடையைத் தலையிலே வைத்திருந்தாலும் ஒன்றுதான். அதனால் ரயிலுக்கு எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

அதேமாதிரித்தான் எமது மனமும்...! இதுவும் ஒரு தேவையில்லாத சுமை. அநாவசியமாக சுமந்து கொண்டே இருக்கின்றோம். இதைக் கீழே இறக்கி வைத்திட்டால் வாழ்க்கைப் பயணம் சுகமாக இருக்கும்!

ரயில் பயணம் செய்யும் அந்த நபர் மூடையைச் சுமக்கின்றான். வாழ்க்கைப் பிரயாணம் செய்யும் நாம் மனதைச் சுமக்கின்றோம்.

இவை இரண்டுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. மனதைக் கீழே இறக்கி வைத்தால் பாரமில்லாமல் பறவைகள் மாதிரிப் பறக்கலாம். குழந்தைகள் மாதிரி கள்ளங்கபடமில்லாமல் வாழலாம். இந்த வெளி உலகில் நாம் நிலை பெற்றிருக்க வேண்டும். வேரூன்றி இருக்க வேண்டும். அதேவேளை எம்முடைய உள் வெளியில் ஆன்மிக வாழ்வில் பாரமில்லாமல் இருக்க வேண்டும்.

அப்போது பறக்க வேண்டும்; நதியைப் போல ஓடவேண்டும்; மிதக்க வேண்டும்.... பயணம் சுகமாக இருக்கும்; களைப்புத் தெரியாது; கவலை தெரியாது.

சீடன் ஒருவன் போதி தர்மரை நாடி வந்தான்... ''குருவே நீங்கள் என்னை வெறுமையாக இருக்கச் சொன்னீர்கள். நான் இப்போது வெறுமையானவன் ஆகிவிட்டேன். இப்போது மறுபடியும் நான் என்ன செய்ய வேண்டும். சொல்லுங்கோ!'' ஏன்று கேட் டான்.

உடனே போதி தர்மர் அருகில் கிடந்த ஒரு குச்சியை எடுத்து அவன் தலையில் அடித்து ''போய் அந்த வெற்றுத் தன்மையையும் வீசி எறிந்து விட்டு வா!'' என்றார்.

''நான் இப்போது எந்த வேலையும் இல்லாமல் இருக்கின்றேன்'' என்று ஒருவன் சொல்கின்றான் என்று எடுத்துக் கொண்டால், அது உண்மை இல்லை. ஏனென்றால் இன்னமும் அந்த வார்த் தையில் 'நான்' என்னும் எண்ணம் இருக்கின்றது.



எந்தச் சிந்தனையும் இல்லாமல் இருப்பது கடினம் தான். ஆனாலும் மனிதன் அதிலே உள்ள நுட்பத்தைப் புரிந்து கொண் டான் என்றால் இவ்வளவு தூரம் தூக்கிச் சுமந்து வந்த அந்த மனத் தின் முட்டாள் தனத்தைக் கண்டு, அவனே சிரிப்பான் என்கிறார் ஓசோ...

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# சிறுகுடிலாகத் தோன்றி பெரிய திருத்தலமான தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலயம்



**எஸ்.யேசுதாஸ்**

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

சுண்ணாம்பு சூளைகள் நிறைந்த கோண்டாவில் பகுதியில் மாமர நிழலில் சிறுகுடிலாக ஆரம்பிக்கப் பட்டு படிப்படியாக வளர்ச்சி அடைந்து சுண்ணக்கல் கோயிலாகி இன்று பெரும் திருத்தலமாக விளங்கும் கோண்டாவில் தில்லையம் பதியில் இருந்து அன்னை பராசக்தி மக்களுக்கு கல்வி, தொழில் வளம், பாதுகாப்பை வாரி வழங்கி வழிநடத்தி வருகிறாள்.

பூசை வழிபாடு பொங்கலுடன் வழிபட்டு வந்த பேச்சி அம்மனுக்கு 1965 ஆம் ஆண்டு சிவகாமி அம்பாள் எனப் பெயரிடப்பட்டதைத் தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு முதன் முதலில் 10 தினங்கள் அலங்கார உற்சவத்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. அம்பாளைத் திருத்தேரில் வீதி வலம் கொண்டு செல்ல விரும்பிய மக்கள் 1971 இல் தேர்த்திருப்பணியை ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து ரிஷபம், பலிபீடம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், வைரவர், திருமஞ்சக்கிணறு முதலான பணிகள் நிறைவேற்றப்பட்டு 1976 ஆம் ஆண்டு ஆனி மாதம் 3 ஆம் திகதி முதலாவது மஹோற்சவ பெருவிழாவும் சித்திரத்தேர் வெள்ளோட்டமும் கோலாகலமாக நடைபெற்றது.

மஹோற்சவ காலத்தில் வேட்டைத் திருவிழா வன்று மாலை வேளையில் குதிரை வாகனத்தில் அம்பாள் ஞானவைரவர் ஆலயத்துக்குச் சென்று வேட்டையாடுவதும், இரவு சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும், வைகாசி பூரணையில் தீர்த்தத்திருவிழாவும் கண்கொள்ளாக்காட்சியாக இடம்பெறும். 1977 இல் அம்பாளின் திருவூஞ்சல் காப்பு சுட்டிபுரத்தின் இசைமணி சீர்காழி கோவிந்தராஜனால் பாடப்பட்ட சிறப்பும் இந்தக் கோயிலுக்கு உடையதாகும்.

பூசை வழிபாடு பொங்கலுடன் வழிபட்டு வந்த பேச்சி அம்மனுக்கு 1965 ஆம் ஆண்டு சிவகாமி அம்பாள் எனப் பெயரிடப்பட்டதைத் தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு முதன்முதலில் 10 தினங்கள் அலங்கார உற்சவத்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. அம்பாளைத் திருத்தேரில் வீதி வலம் கொண்டு செல்ல விரும்பிய மக்கள் 1971 இல் தேர்த்திருப்பணியை ஆரம்பித்தனர்.

திருக்கோயில் வாயிலில் தல விருட்சமாக ஆலமரமும் அரச மரமும் ஒன்றிணைத்து காணப் படுறது. இவற்றில் உள்ள அருள் மிகு பொந்தின் ஊடாக அம்பாளின் விமானத்தில் கலசத் தகைக் காணக்கூடியதாக உள்ளமை, அற்புதக்காட்சியாகும்.

அம்பாளின் மூர்த்திகரம் மேலும் பிரவாகிக்க 1982 இல் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகா சபையின் இலங்கை இணை பிரதித் தலைவராக இருந்த யோகேந்திரா துரைச்சாமியால் அழைத்துவரப்பட்ட வட இந்தியத் துறவியும் அரச அதிபருடன் இணைந்து தைப்பூசத் தினத்தன்று அடிக்கல் நட்டு திருப்பணிகளை ஆரம்பித்து வைத்தனர். இந்தியாவில் இருந்து வந்த சிற்பாச்சாரியர் களால் கலை அம்சம் பொருந்திய துவிதள கோபுரம் அமைக்கப்பட்டது. சிவகாமி அம்மாள் திருவுருவத்தை வடித்தவர் தென்னிந்திய சிற்ப வல்லுநர் பெரியசாமி ஆச்சாரியாராவார். இதுவே அவர் வடித்த கடைசி விக்கிரகமாகும். இத்தோடு அவர் இறையடி எய்தியமை குறிப்பிடத்தக்கது. மூல மூர்த்தியான சிவகாமி அம்பாள் வள்ளி தெய்வானை சமேதஸ்ரீமுருகப் பெருமான், ஸ்ரீவைரவப் பெருமான் என்பன 2.10.1987 இல் விஜய தசமி அன்று வந்து சேர்ந்தன. விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை, ஸ்ரீமுருகப் பெருமான், நாகதம்பிரான், சந்தான கோபாலர், நர்த்தன கணபதி, மகேஸ்வரி, வைஷ்ணவி, பிரமாகி, துர்க்கை, சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு தனித்தனிக் கோயில்களும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானுக்கு கனகசபையும் அமைக்கப்பட்டு அனைத்தும் ஸ்தாபனம் செய்யப் பட்டன. 1989 ஆம் ஆண்டு சிவஸ்ரீ குகதாசக் குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது.

அடியவர்கள் அ.சோமசுந்தரம் (தலைவர்), பொ.சிவானந்தம்(பொருளாளர்), த.தேவராசா(செயலாளர்) ஆகியோரின் அளப்பரிய முயற்சியும், மக்களின் நல் ஆதரவும் இந்தப் பணிகளுக்கு வலுச்சேர்த்தன. காஞ்சிப் பெரியாரின் ஆசியுடன் இந்தியாவின் கங்கை நதித் தீர்த்தம் மகா கும்பாபிஷேகத்துக்கு பயன்படுத்தப்பட்டமை சிறப்பாகும். அப்பகுதிக்கு பெரியசாமி ஆச்சாரியாரின் ஆசியுடன் தில்லையம்பதி என்னும் நாமம் சூட்டப்பட்டது. 1990 ஆம் ஆண்டு காசியில் இருந்து விஸ்வநாதர் லிங்கம் இங்கு கொண்டுவரப்பட்டது.

கவிமாமணி ந.வீரமணி ஐயர் , இரா.இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்ட தில்லையம்பதியாள் கீர்த்தனைகள் 4 பாகங்களாக தென்னிந்தியப் பாடகர்களான ரீ.எம் சௌந்தராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ரீ.எம்.எஸ். செல்வக்குமார், சீர்காழி சிவசிதம்பரம் ஆகியோரால் பாடப்பட்டு அவ்வப் போது வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட ஸ்ரீசக்கரம் 1998 இல் பிரதிட்டை செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு 25 ஆவது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் காணிக்கைகளினால் அம்பாளுக்கு தங்கக்குடை சூட்டு விழாவும் இராஜகோபுரம் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வும் நடைபெற்றன. 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சுற்றுப்புற மண்டபப் பணிகள் 2002 இல் நிறைவு பெற்றன.

2003 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு விநாயகர் , வள்ளி, தெய்வானை சமேத முருகன், விஸ்வநாதர் விசாலாட்சி புனருத்தாரணம் செய்யப்பட்டதோடு நவக்கிரகமும் புதிதாக அமைக்கப்பெற்று அம்பாளுக்கு செங்களநீர் தடாகமும் அமைக்கப்பட்டது. அத்துடன் வசந்த மண்டப தெற்கு வாயிலும் திறக்கப்பட்டு கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட நடராஜப் பெருமான், மாணிக்கவாசகர், நவக்கிரக மூர்த்திகள் என்பன பிரதிட்டை செய்யப்பட்டன. தமிழகத்தின் கும்பகோண நவதன்னிகை எனப்போற்றப்படும் மகா மாசிமக தீர்த்தங்கள் கொண்டு 2004 ஆம் ஆண்டு சதா மகாலிங்கக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

புண்ணிய காலங்கள், சுபவேளைகள், விசேட தினங்களில்அன்னைக்கு சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. கோண்டாவில் தில்லையம்பதியில் புதுப்பொலிவுடன் வீற்றிருந்து சிவகாமி அம்பாள் அடியவரின் குறைபோக்கி நிறைவளித்து வருகிறாள். இந்தப் புண்ணிய தலத்தை நாடி வருவோர் அனைவரும் வேண்டும் வரங்களைப் பெற்றுச் செல்கின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பணிகளுக்கு அரசு ஆனால் வாக்குகள் 'வீட்டுக்கே'

## இது என்ன நியாயம் என்கிறார் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர்

எருவில்,ஒக்.9

அரசு அதிக அபிவிருத்திப் பணிகளைச் செய்துவருகின்ற போதிலும், வீட்டுச் சின்னத்துக்கே மக்கள் வாக்களிக்கின்றனர். இவ்வாறான அபிவிருத்திப் பணிகளைச் செய்யும் அரசுக்கு வாக்களிக்கத் தவறுகின்றோம். எதிர்காலத்திலாவது இவற்றை உணர்ந்து மக்கள் செயற்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண கல்வி மற்றும் காணி போக்குவரத்து அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்டுள்ள தனியார் பஸ் தரிப்பு நிலையக் கட்டடத்தை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசால் இங்கு அதிக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் இந்த மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் 5 கிலோமீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. இன்று அவ்வாறான நிலைமையில்லை. மாணவர்கள் பாடசாலைகளுக்கு பஸ்களில் இலகுவாகச் செல்லக்கூடிய நிலைமையை நாம் உருவாக்கித் தந்துள்ளோம்.

> அரசால் இங்கு அதிக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் இந்த மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் 5 கிலோமீற்றர் தூரம் நடந்துசெல்ல வேண்டிய நிலை காணப்பட்டது.

இன்று அனைத்துத் துறைகளும் அபிவிருத்தியடைந்து வருகின்றன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அனைத்தையும் அரசு அபிவிருத்தி செய்கின்றது.

கடந்த காலங்களில் திருகோணமலைக்கு செல்வதாயின் ஒரு நாள் பயணம் செய்ய வேண்டியிருந்தது. இன்று நிலைமை அவ்வாறில்லை. இரண்டு மணித்தியாலங்களில் இங்கிருந்து நாம் திருகோணமலைக்குச் செல்கின்றோம். இங்கு தமிழர், முஸ்லிம், சிங்களவர் எனப் பார்த்து அபிவிருத்திகள் செய்யப்படவில்லை. இவ்வாறான அபிவிருத்திப் பணிகளைச் செய்யும் அரசுக்கு வாக்களிக்கத் தவறுகின்றோம். எதிர்காலத்திலாவது இவற்றை உணர்ந்து மக்கள் செயற்படவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் திருமதி ஆரிவதி கலபதி, பிரதித் தவிசாளரும் முன்னாள் மாகாண சுகாதார அமைச்சருமான எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எப்.சிப்லி, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் ஜோர்ஜ்பிள்ளை உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-31)

## ஆசிரிய ஆலோசகர் நியமனத்தில் ஊவா மாகாணத்தில் பலர் தவிர்ப்பு

### அரசின் அடிவருடிகளுக்கே முன்னுரிமை

பதுளை,ஒக்.9

ஊவா மாகாணத்தில் அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் ஆலேசகர் நியமனத்தில் சிரேஷ்ட ஆசிரியர் பலர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஆசிரிய ஆலோசகர் பதவிகள் ஊவா மாகாணத்தில் பல வருடகாலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் அரசின் அடிவருடிகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் சிரேஷ்ட ஆசிரியர்களை இவர்களால் வழி நடத்த முடியாத சந்தர்ப்பங்களும் நிகழ்வதுண்டு.

இந்த நிலையில் அண்மையில் ஊவா மாகாண ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு இலங்கை ஆசிரியர் தரம் I மற்றும் சேவை மூப் புடைய சிரேஷ்ட ஆசிரியர்பலர் விண்ணப்பித்தும் கூட தமக்கு குறித்த ஆசிரியர் ஆலோசகர் பதவி கிடைக்கவில்லை.

ஆசிரிய தரம் 3- I சேர்ந்த அண்மைக் கால நியமன ஆசிரியர்களுக்கு இப்பதவி வழங்கப்பட்டது குறித்து தாம், கவலையும் வேதனையும் அடைவதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர். இது குறித்து தகுந்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இன்றேல் அடிப்படை மனித உரிமை மீறல் போன்ற சட்ட நடவடிக்கைகளில் இறங்கவுள்ளதாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்திருக்கின்ளறனர். (ச)

## ஒல்லிக்குளம் மக்களுக்கு கூரைத் தகரங்கள்

மட்டக்களப்பு,ஒக்.9

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் கிராமத்தில் இடரினால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு கூரைத்தகரங்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை வழங்கப்பட்டன.

பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் ஏற்பாட்டில் இந்தக் குடும்பங்களுக்கு, கூரைத்தகரங்கள் வழங்கப்பட்டன என்று பிரதி அமைச்சரின் ஊடக இணைப்பாளர் முகம்மட் சஜி தெரிவித்தார். (ச)

## 'திவிநெகும' சட்ட வரைவில் பாதகமான சரத்து இல்லை

### சந்தேகம் வேண்டாம் என்கிறார் மு.கா. மாகாணசபை உறுப்பினர் ஜெமீல்

மட்டக்களப்பு,ஒக்.9

நான் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வாக்குறுதியளித்தபடி 'திவிநெகும', சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளேன். இதனால் நீங்கள் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மறுபுறத்தில் என்னையும், கட்சியையும் எதிர்க்கட்சிக்காரர்களும், எமது கட்சி உயர் பீட உறுப்பினர்களும் அதிகமாக விமர்ச்சிக்கின்றனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரும், கட்சியின் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.


சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 'திவிநெகும' சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினரும், குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீலுக்கு நன்றி தெரிவிக்கும் சந்திப்பொன்று மாகாணசபை உறுப்பினர் இல்லத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'திவிநெகும' சட்ட வரைவில் சமூகத்துக்குப் பாதகமான சரத்துகள் எதுவுமில்லை. இதில் மக்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. சமூகத்துக்கு எதிரான எந்தச் சட்ட வரைவையும் நான் அங்கீகரிக்கமாட்டேன்.

'திவிநெகும' சட்டவரைபை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக தொலைபேசியில் அதிகாரிகளுக்கு வழங்கிய ஆணையை தற்போது அவரின் பேனாவால் அதிகாரிகளுக்கு வழங்கும் சட்டவரைவாகவே நான் பார்க்கின்றேன்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மக்களுடன் நேரடி தொடர்புகளைக் கொண்டவர்கள். இந்தச் சட்டவரைவால் எமது சமூகத்துக்குப் பாதிப்பில்லை என்பதை மக்கள் மத்தியில்தெளிவுபடுத்தும்பொறுப்பு உங்களுக்குள்ளது. இதனை நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டும் - என் றார். (ச)



மட்டக்களப்பு மாவட்ட பிரதான தனியார் போக்குவரத்து பஸ் நிலையம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்து வைக்கின்றார். அருகில் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் ஆரியவதி கலபதி, பிரதி தவிசாளர் எம்.எஸ்.சுபைர் உட்பட பலர் காணப்படுகின்றனர்.

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் சாவு

திருகோணமலை,ஒக்.9

கிண்ணியா, குரங்குபாஞ்சான் பகுதியில் மின்னல் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

குரங்குபஞ்சான் குளக் கட்டுக்கு அண்மையில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போதே மின்னல் தாங்கி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் குரங்குபாஞ்சான் பகுதியைச் சேர்ந்த முஹம்மது தமீம் (வயது-23) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## முஸ்லிம்களின் இதழியல் வரலாறு ஆய்வரங்கு

மட்டக்களப்பு,ஒக்.9

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவையொட்டி, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் இதழியல் வரலாறு எனும் தொனிப் பொருளிலான ஆய்வரங்கு அக்கரைப்பற்று ஆயிஷா பெண்கள் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது என்று அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அக்கரைப்பற்று கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச)

## சர்வ சமய சமாதான மாநாடு அம்பாறையில்

### 21ஆம் திகதி நடத்த ஏற்பாடு

அம்பாறை,ஒக்.9

இலங்கை சமாதான கற்கைகளுக்கான நிலையம், நாடளாவிய ரீதியில் நடத்தி வரும் ''இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எனது ஆய்வு'' எனும் தலைப்பிலான கருத்தரங்கின் இறுதி நிகழ்வாக சர்வ சமய சமாதான மாநாடு ஒன்றை அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் நாட்டிலுள்ள சர்வ சமயங்களைச் சேர்ந்த சமயத் தலைவர்களும் கல்விமான்களும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

இதில் கலந்தகொள்ள விரும்பும் சமயத் தலைவர்கள், சமாதான நீதிவான்கள், தமது கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள், மற்றும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள விரும்பும் பிரமுகர்கள் தங்களது பதிவை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ச)

## கிழக்கைச் சிறந்த மாகாணமாக மாற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

### அமைச்சர் உதுமாலெப்பை அழைப்பு

மட்டக்களப்பு,ஒக்.9

இலங்கையில் உள்ள மாகாணங்களில் சிறந்த மாகாணமாக கிழக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்பும் புதிய சிந்தனையுடன் செயற்பட முன்வருமாறு கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவைப் பேச்சாளரும், வீதி அபிவிருத்தி அமைச்சரும் தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, கட்டடம், நீர்ப்பாசனம், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வள அமைச்சராக பதவிப் பொறுப் பேற்றுக்கொண்ட பின்னர் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

> ஏறக் குறைய 800 கிலோமீற்றர் கொங்றீட் பாதை போடப்பட்டுள்ளது. பல தூர்ந்துபோன நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கால் வாய்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மாகாணசபையில் வீதி அபிவிருத்தி அமைச்சராக இருந்து என்னால் முடிந்தளவில் பல அபிவி ருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏறக் குறைய 800 கிலோமீற்றர் கொங்றீட் பாதை போடப்பட்டுள்ளது. பல தூர்ந்துபோன நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கால் வாய்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதற்கு எனது அமைச்சின் அதிகாரிகள் மாத்திரமின்றி ஏனைய உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்கியதை மறக்க முடியாது. எதிர்காலத்திலும் எனது அமைச்சினூடான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் சிலரிடம் வேடிக்கையாகக் கேட்கிற உதவி எளிதில் கிடைக்கும். உற்சாகமுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம் வளர தேவையான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவீர்கள். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**இடபம்:** உங்களின் முக்கிய பணி ஒன்று தாமதமாகலாம். குடும்பத்தில் எவருடனும் சச்சரவு செய்யவேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு அவசியம். சுமாரான அளவில் பணவரவு இருக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வீர்கள்.

**மிதுனம்:** உங்களின் செயல்களில் திறமை பரிமளிக்கும். பணிகளில் கூடுதல் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும். குடும்பத் தேவைகளை தாராள பணச் செலவில் நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** குறுக்கிடும் சிரம சூழ்நிலையை எண்ணி மனம் தளரக்கூடாது. நியாய, தர்மம் அதிகம் பின்பற்றுவதால் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரம் சீராக இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும். பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

**சிங்கம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உங்கள் நண்பரின் ஆலோசனைப் பணி சிறக்க நல்வழி காட்டும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். சொத்துச் சேர்க்கை அதிகரிக்கும்.

**கன்னி:** பிறருக்கு உதவுகின்ற மனப்பாங்குடன் செயற்படுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை கிடைக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். கூடுதல் பணவரவில் குடும்பத்தின் முக்கிய தேவை நிறைவேறும். பண வரவைக் காட்டிலும் புதிய இனங்களில் செலவு ஏற்படும். பாதுகாப்பு குறைவான இடங்களில் பிரவேசிக்கக் கூடாது.

**நாளை**

புரட்டாதி - 24 புதன்கிழமை 10.10.2012
திதி: தசமி மு.இ 11.40 வரை
நட்சத்திரம்: பூசம் மு.ப 11.10
சுபநேரம்: 04.32 - 06.02 வரை
ராகுகாலம்: 12.02 - 01.32 வரை

**துலாம்:** உங்களின் செயல் நிலைப்பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழிலில் நிலுவைப்பணி நிறைவேற்றுவதால் நன்மை ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் எதிர்பார்த்த நண்பர் உங்களைச் சந்திக்க வாய்ப்பு வரும். நீண்ட நாள் சந்திக்க நினைத்த முக்கியஸ்தர் ஒருவரைத் தேடிச் சென்று பார்ப்பீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் நற்செயலைப் பிடிக்காத சிலர் பரிகாசம் செய்வர். மனதில் நம்பிக்கை வளர்ப்பது நல்லது. தொழில், வியாபார நடைமுறையில் பணிச்சுமை அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** நீங்கள் அன்பு நிறைந்த மனதுடன் செயற்படுவீர்கள். பணிகளில் வெற்றி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். குடும்ப உறுப்பினர்களின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** எதிரியால் இருந்த தொல்லை குறையும். சிலர் உங்களிடம் அனுகூலம் பெற விரும்புவர். தொழில், வியாபாரம் சிறக்க கூடுதல் பணிபுரிவீர்கள். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** நீங்கள் பொது விவகாரங்களில் கவனம் கொள்ள வேண்டாம். அவசரப்பணி உருவாகி மனதில் குழப்பத்தை ஏற்படுத்தும். தொழில், வியாபாரம் சீராக மாற்று உபாயம் பின்பற்றுவது அவசியம். பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும்.

**மீனம்:** கடினமான பணிகளில் கூடுதல் பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும். சகதொழில் சார்ந்தவர் எதிர்பார்ப்புடன் செயற்படுவர். அதிக உழைப்பால் தொழில், வியாபாரம் சீராகும். முக்கிய செலவுக்கு சிறு அளவில் பணக்கடன் பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 7 | | | 1 | 3 | |
| 3 | 4 | | | | | | 2 | |
| 1 | | | 6 | 5 | | 9 | | |
| 8 | 6 | 9 | 1 | 2 | | | 4 | 7 |
| | | | | | | | | |
| 4 | 7 | | | 3 | 6 | 2 | 8 | 5 |
| | | 4 | | 6 | 7 | | | 3 |
| | 5 | | | | | | 6 | 1 |
| | 8 | 3 | | | 4 | | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 6 | 1 | 2 | 8 | 4 | 9 | 7 |
| 2 | 8 | 7 | 9 | 4 | 3 | 5 | 6 | 1 |
| 1 | 4 | 9 | 5 | 7 | 6 | 2 | 3 | 8 |
| 3 | 1 | 8 | 2 | 6 | 4 | 7 | 5 | 9 |
| 4 | 7 | 2 | 3 | 9 | 5 | 1 | 8 | 6 |
| 6 | 9 | 5 | 7 | 8 | 1 | 3 | 2 | 4 |
| 7 | 6 | 4 | 8 | 5 | 2 | 9 | 1 | 3 |
| 8 | 5 | 1 | 4 | 3 | 9 | 6 | 7 | 2 |
| 9 | 2 | 3 | 6 | 1 | 7 | 8 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


கல்லூரி அன்னையின் தவப்புதல்வனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமாகாண கல்விப்பணிப்பாளராக உயர்ந்து நிற்கும்

உயர்திரு

வைரமுத்து செல்வராசா

(S.L.E.S - 1)



தமிழும், சைவமும் மிளிரும் எம் கல்லூரி அன்னையின் மாணவனாக, அதிபராக இருந்து ஆற்றிய அரும்பணியின் பேறாக உயர்ந்து உயர்ந்து சென்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்ற பெருந்தகையே! வடமாகாணம் கல்விப் புலத்தில் சாதனைகள் படைக்கவும் சீர்மிகு பணியாற்றவும், சீரும் சிறப்புமாக வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி உளமாரப் பாராட்டி மகிழ்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
கல்லூரி நலன்விரும்பிகள்.
யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.
T.P.021 226 3138

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளையும் பாடசாலையில் முதலாம் இடத்தினையும் பெற்ற

செல்வி

மேனகை இராஜராஜன்

வாழ்வில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்றுக்கொள்ள வாழ்த்துகின்றோம்.

அம்மப்பா, பெரியம்மா,
பெரியப்பா, அண்ணாமார்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

தேசிய பாடசாலை

அகமகிழ்வான வாழ்த்துக்கள்

பிரதீபா பிரபா விருது - 2012



அதிபர், திரு. செ. சேதுராஜா
B.A., PGDE, PGDEM, M.Sc (Ed.Mgt)
M.Phil (Ed), SLEAS - III



பகுதித்தலைவர்
திருமதி இரஞ்சினி சிவராசா
B.Sc, PGDE



திரு. வீ. சுதர்சன்
B. Ed

இன்று (09.10.2012) மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் 'ஆசிரியர் பிரதீபா பிரபா விருது' வழங்கும் தேசிய விழாவில் வடமராட்சி வலயத்தில் தொடர்ந்து இரண்டாவது தடவையாக சிறந்த அதிபர் விருது பெறும் எமது அதிபர் அவர்களையும், சிறந்த ஆசிரியர் விருதுபெறும் பகுதித்தலைவர் அவர்களையும், இவ்வருடம் சிறந்த ஆசிரியர் விருதுபெறும் திரு. வீ. சுதர்சன் அவர்களையும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

பணியாளர் பேரவை
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செக்குடியரசுக்கான இந்தியத் தூதர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடுகிறார்.

# நாணயத் தாள்களில் மோசடி; பொலிஸார் அவசர எச்சரிக்கை

**பொதுமக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்து**

கொழும்பு,ஒக்.9

நாணயத் தாள்களில் மோசடிகள் நடந்துவருவதால், கொடுக்கல், வாங்கல்களின்போது பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

500 ரூபா, 1000 ரூபா, 2000 ரூபா மற்றும் 5000 ரூபா நாணயத் தாள்கள் போலியாக அச்சிடுவது தொடர்பில் தொடர்ந்தும் கிடைக்கப்பெற்றுவரும் முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கந்தளாய்ப் பிரதேசத்தில் 1000 ரூபா போலி நாணயத் தாள்கள் 150 வைத்திருந்த மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டனர்.

இந்த நிலையிலேயே போலி நாணயத் தாள்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டால் அரசியல் தீர்வு முயற்சி பின்னடையும்

**அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு**



கொழும்பு,ஒக்.9

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் எதிர்க்கட்சிகள் பின்பற்றி வரும் நிலைப்பாடானது தீர்வுத் திட்ட முனைப்புக்களில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காமை பிழையானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பலவீனப்படுத்தும் வகையில் செயற்படக் கூடாது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கும் இந்தக் கட்சிகளுக்கு வேறு மாற்று வழிகளும் கிடையா என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடத்தப்படும் பேச்சுக்கள் மூலம் மட்டும் தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான இறுதித் தீர்வுத் திட்டத்தை எட்டிவிட முடியாது. தேசியப் பிரச்சினை தொடர்பில் ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் இணைந்தே தீர்வுத் திட்டங்களை எட்ட முடியும் என்று அவர் கூறினார்.

# மக்கள் சேவைக்குத் தடையான சட்டங்களில் திருத்தம் தேவை

**ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்**

கொழும்பு,ஒக்.9

மக்கள் சேவைக்கு தடையாக அமைந்துள்ள சகல சட்டங்களிலும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 2013 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துக் கோரும் நோக்கில் நடைபெற்ற சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சில சட்டங்களினால் இடையூறு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சட்டங்களைக் கண்டறிந்து அவற்றில் திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியமானது. மக்கள் ஆணைக்குப் புறம்பாகச் செயற்பட எவருக்கும் உரிமை இல்லை. நாட்டின் அபிவிருத்திக்காக அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார் ஜனாதிபதி. (ச)



மக்கள் நலனை கருத்தில் கொண்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபி விருத்தித் திட்டங்களுக்கு சில சட்டங்களினால் இடை யூறு ஏற்பட்டுள்ளது.

# குவைத் செல்கிறார் மஹிந்த

கொழும்பு,ஒக்.9

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 13 ஆம் திகதி குவைத் நாட்டுக்குச் செல்லவுள்ளார்.

குவைத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசிய கோப்ரேட் டயலொக் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே அவர்செல்லவுள்ளார். இந்தப் பயணத்தின் போது குவைத்தின் அரச தலைவர் களுடன் ஜனாதிபதி பேச்சில் ஈடுபடவுள் ளார். ஆசிய கோப்ரேட் டயலொக்கின் மாநாடு 2009 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்றது.

இந்த அமைப்பின் தலைவராக சுமார் ஒன்றரை வருடங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கையில் 10 வீதமானோர் உளவியல் தாக்கத்தால் பாதிப்பு

வளர்ச்சியடைந்த நாடுகளில் உளவியல் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைத்துள்ள சமூக அங்கீகாரம் இலங்கை போன்ற நாடுகளில் இல்லை.

கொழும்பு,ஒக்.9

இலங்கையின் மொத்த சனத்தொகையில் பத்து வீதமானவர்கள் உளவியல் தாக்கங்களினால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் புதிய ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலை மாணவர்களும் உளவியல் தாக்கங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பரீட்சை தோல்வி, தொழில் வாய்ப்பின்மை, குடும்பப் பிணக்குகள், சமூக ஒடுக்கு முறைகள், அதிக மது பாவனை போன்ற காரணிகளினால் இவ்வாறு பலர் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் உளவியல் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காணப்படும் சமூக அங்கீகாரம் இலங்கை போன்ற நாடுகளில் இல்லை. உளவியல் நோய்களினால் பாதிக்கப்படுவோர் ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணை வர்த்தமானியில் அறிவிக்கவும்

**ஜயலத் ஜெயவர்த்தன வலியுறுத்து**



கொழும்பு,ஒக்.9

வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் தொடர்பில் வர்த்தமானியில் அறிவிப்பதன் மூலம் உழைக்கும் வர்க்கத்தினர் நன்மை அடைவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு சுண்டெண்ணில் சம்பளங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வாழ்க்கைச் செலவு புள்ளி மாறும் தன்மையுடையது என்று அவர் கூறினார்.

எனவே வாழ்க்கைச் செலவு புள்ளி தொடர்பான தகவல்களை வெளியிடுவது மிகவும் அவசியமானது. எனினும் ஆளும் கட்சி அமைச்சர்கள் வாழ்க்கைச் செலவு புள்ளி தொடர்பில் தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்க முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த விரும்புவதாக 21 தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் ஜனாதிபதி அதற்குச் சாதக பதில்கள் எதனையும் அளிக்கவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# கோடரியால் தாக்கி முதியவர் கொலை

கொழும்பு,ஒக்.9

கோடரியால் தாக்கி ஒருவரைக் கொலை செய்த சம்பவம் கம்களை, குடமாணய பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தச் சம்பவத்தில் நெய்யா மொஹமட் (வயது-97)என்பரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் கம்பளை பொலிஸார் கூறினர். (ச)

# வன ஜீவராசிகள் அலுவலகத்தின் ஆவணங்களுக்குத் தீ

பொலநறுவை, மன்னம்பிட்டி வன ஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்தில் இருந்த ஆவணக் கோவைகளுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்தின் கண்ணாடியொன்றை உடைத்து உள்ளே பிரவேசித்த இனந்தெரியாத குழுவினர் ஆவணங்களுக்குத் தீ வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றபோது வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் எவரும் இருக்கவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச)

# பொன்சேகாவின் எதிர்க்கூட்டை நிராகரிக்கும் இடதுசாரி கட்சிகள்

கொழும்பு,ஒக்.9

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தலைமையில் செயற்படவுள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பை ஐக்கிய சோஷலிஸக் கட்சியும், நவ சமசமாஜக் கட்சியும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூட்டாக நிராகரித்துள்ளன.

பௌத்த மேலாதிக்கத்துக்கு முன்னுரிமை கொடுத்து, தமிழர்களின் பிரச்சினைகளை குறித்த கூட்டணி கண்டுகொள்ளத் தவறியுள்ளதன் காரணமாகவே அதை மேற்குறிப்பிட்ட கட்சிகள் நிராகரித்துள்ளன.

தமிழ் மக்களின் நலன்களுக்காகப் போராடத் தயாரில்லாத அந்தக் கூட்டணியில் தாம் ஒருபோதும் கலந்துகொள்ளப்போவதில்லை என்றும் அந்தக் கட்சிகள் உறுதியாக அறிவித்துள்ளன.

சரத் பொன்சேகாவின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் செயற்பாடுகள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன. இந்தக் கூட்டணியில் நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிஸக் கட்சி ஆகியனவும் இடம்பெறும் எனச் செய்திகள் வெளியாகின.

இது குறித்து தெளிவுபடுத்தும்போதே இந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களும் இவ்வாறு தெரிவித்தனர். (ச-சி)

# மன்னார் எண்ணெய் ஆய்வில் மலேசிய அரசு நிறுவனமும்

மலேசிய அரசின் எரிபொருள் நிறுவனமான பெற்றோனஸ் இலங்கையில் எண்ணெய் ஆய்வுகளில் ஈடுபடவுள்ளது.

பாக்கு நீரிணையின் மன்னார் கடற்பகுதியில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மலேசிய அரசின் உதவியுடன் இதற்கான நடவடிக் கைகளை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய மலேசிய அரசும் இலங்கை அரசும் இணைந்து எண்ணெய் ஆய்வுப்பணி மற்றும் அகழ்வுகளில் ஈடுபடவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆய்வுப் பணியில் ஈடுபட இந்தியாவும் இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

ரயர்க் கடைக்கு அனுபவமுள்ளவரும் வேலை பழக விரும்பு பவர்களும் தேவை.

தொடர்பு: 0716543433, சாவகச்சேரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை ஆசிரியர்
திருமதி
இராசகுமாரி கனகசூரியன்
அவர்கள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் இன்று (2012.10.09) செவ்வாய்க்கிழமை "ஆசிரியர் பிரதீப பிரபா" விருது பெறுவதை முன்னிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
மு/முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை, ஒட்டுசுட்டான்.

(23860)(2.7)

## காணி விற்பனைக்கு

A-9 வீதிக்கும் கொடிகாமம் சந்தைக்கும் அருகில் 12½ (பன்னிரண்டரை) பரப்பு உறுதிக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
024 222 1178, 021 321 8220

## வீடு வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள், உயர் அதிகாரிகளின் விடுதியாக உபயோகிக்க உகந்தது. தொடர்புகளுக்கு: 0773897266

## கனவு இல்லங்களை நனவாக்க...





உங்கள் கனவு இல்லங்களை நனவாக்கிக் கொள்ள உங்கள் காணியில் உங்கள் தேவைக்கேற்ப அழகிய அதிநவீன இல்லங்களை கட்டிக் கொள்ள வீடமைப்புத்துறையில் மிகத் தேர்ச்சி பெற்ற எம்மை நாடுங்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட திகதியில் உங்கள் கனவு இல்லத்தில் நீங்கள் குடியேறலாம் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல நூற்றுக்கணக்கான வீடுகளை கட்டி வாடிக்கையாளர்கள் அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளதுமான ஒரே நம்பகரமானது



கே.வி சபா இஞ்சினியரிங்
T.P : 077 4473752, 077 8801126, கைதடி
(21549)(8-7)

## காணி விற்பனைக்கு

பிரதான வீதி, தெல்லிப்பழையில், பழைய பிரதேச செயலகத்துக்கு அண்மையில் 2½ (இரண்டரை) பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0776660250

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி தயானந்தன்
லக்சனா
(மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்)
அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012 இல் 160 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் கல்வியில் மேன்மேலும் உயர்வடைய தச்சை ஐங்கரனை வேண்டுகின்றோம்.
அத்துடன் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: Best Wishes
சித்தப்பா தயாரூபன் குடும்பத்தினர்,
தாத்தா தருமராசா குடும்பத்தினர்,
மாமா கோடீஸ்வரன் குடும்பத்தினர்,
பெரியப்பா தயாபரன் குடும்பத்தினர்,
சித்தப்பா தயாகரன் குடும்பத்தினர்.

## சர்வதேச சான்றிதழ்களுக்கான தொழில்சார் பயிற்சி

| | |
|---|---|
| DiCA (Duration 3 Months) | Diploma in Computer Application |
| DiT (Duration 3 Months) | Diploma in Information Technology |
| AdOA (Duration 4 Months) | Advanced Diploma in Office Administration |
| AdDP (Duration 3 Months) | Advanced Diploma in Digital Pre-Press |

புதிய பிரிவுகள் 11-10-2012, 13-10-2012 மற்றும் 16-10-2012 காலை 9.30 ஆரம்பம்.

CSC ASIAN COMPUTERS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 021-2225677 |
| நல்லூர் | 021-2229191 |
| நெல்லியடி | 021-2262399 |
| சாவகச்சேரி | 021-2270267 |
| கிளிநொச்சி | 021-2283925 |

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று கொழும்பில் ஜனாதிபதி அவர்களின் தலைமையிலான நிகழ்வில் "ஆசிரியர் பிரதீபா பிரபா - 2012" விருது பெறும் எமது பாடசாலை ஆசிரியர் திரு.பரராஜசிங்கம் சசிரதன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எம் குழாத்தில் ஒருவராய் நல்லாசிரியராய் நம் தேசம் மகிழ
நன்றே ஆசிரியர் "பிரதீபா பிரபா" எனும் பெரு விருது பெறும்
பரராஜசிங்கம் சசிரதன்
தம் பணிதனில் ஆழ நிலைத்திட
நன்றே வாழ்த்துகின்றோம்.

Best Wishes

பாடசாலைச் சமூகம்,
கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிமேதகு கௌரவ ஜனாதிபதி அவர்களால் 2012.10.09 இன்று வழங்கிக் கௌரவிக்கப்படும் ஆசிரியர் பிரதீபாபிரபா விருதினை பெறும் முல்லைக்கல்வி வலய புதுக்குடியிருப்பு கோட்ட அதிபர், ஆசிரியர்களின் சேவைதனை மீட்டுகின்றோம் பாராட்டுகின்றோம்.



திரு. நா. அக்கினேஸ்வரன்
அதிபர். மு/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்.



திருமதி.ச.திருஞானம்
ஆசிரியர்.
மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை.



திருமதி.சி.ரஞ்சித்குமார்
ஆசிரியர்.
மு/இரணைப்பாலை - றோ.க.ம.வி.




திருமதி.வ.அழகநாயகம்
ஆசிரியர்.
மு/மன்னார்கண்டல் அ.த.க.பா.

"எச்சத்திலும் எழுந்து அச்சமின்றி அவை கூட்டி
பச்சைப் பாலகர்க்கு பாடம் செய்த விச்சை வீரர்காள்
துச்சமென சுயநலம் போக்கி மிச்சமென கல்வி சேர்த்து
இச்சையுடன் விதைத்தெழுத்து மச்சமின்றி விளைந்தது காண்
வாழ்க! வளர்க! விழித்தடங்கள் பதியும்"

மு/ புதுக்குடியிருப்பு
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்.
(தி/1423(45.7)

## ஆறாம் மாத நினைவலைகள்



மலர்வு
18.12.1946

உதிர்வு
09.04.2012

திதி : திருதியை

அமரர் தம்பிராசா விக்கினேஸ்வரன்
(ஓய்வு நிலை ஆசிரியர்: யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், பிரதேச சபை வீதி, கொல்லங்கலட்டியை நிரந்தர வதிவிடமாகவும், ஊரெழுவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அமரர் தம்பிராசா விக்கினேஸ்வரன் அவர்களின் ஆறாம் மாத நினைவலைகள்.

ஆறுமாதம் கழிந்தும் ஆறாத்துயரில் நான்
ஈரவிழிகள் இன்னும் உலரவில்லை உங்கள் நினைப்பில்
ஆறாயிரம் ஆண்டுகள் கழிந்தும் என் அன்பு
என்றும் ஆண்டவனடி சார்ந்த தங்களைச்சாரும்

ஊரெழு.
(23837)(7.8)

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலைநிலவும்.

## நல்லெண்ணெய் விலையேற்றம்

நவாலி, ஒக்.9

நல்லெண்ணெய் விலை கடந்த வாரத்திலிருந்து 440 ரூபாவாக அதிகரித்துள்ளது.

எள்ளின் விலையேற்றம் கூலியாள்களுக்கான தட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணங்களினால் இதுவரை 420 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த எண்ணெய் 20 ரூபாவினால் அதிகரித்துள்ளது. மழை காலம் ஆரம்பித்துள்ளதால் எள்ளை காயவிடமுடியாது. செக்குகளை இயக்கமுடியாதுள்ளன. இப்படியான நிலைப்பாட்டால் மேலும் விலை அதி கரிக்கும் என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-100)

## நவாலியில் இன்று பரிசில் வழங்கும் நிகழ்வு

நவாலி, ஒக்.9

நவாலி கிழக்கு, முதியோர் சங்கத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் சி.பவுலின் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளிதரனும், சிறப்பு விருந்தினராக நவாலி கிழக்கு கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தனும் கலந்து கொள்வார்கள்.

இதம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த நிகழ்வில் பரிசில் வழங்கலைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரிப் பயிலுநர்களின் ''விடியலைத் தேடி'' பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு நாடகமும் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (3)

## சிறுவர், முதியோர்தின நிகழ்வு வதிரியில்



வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் சிறுவர், முதியோர் தினம் வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த சனிக்கிழமை வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது முதியவர்களுக்கு உடைகளும், சிறுவர்களுக்கு உணவுப் பொருள்களும் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் உரையாற்றுகையில்; ''முதியவர்கள் சிறுவர்களை எந்த வகையிலும் இம்சைப் படுத்தக்கூடாது எனவும் அவர்களுக்கு சுதந்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவேண்டும் எனவும் அதேபோல் சிறுவர்களுக்கு கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்களை நாட்டின் வருங்கால சந்ததியின் தலைவர்களாக வருவதற்கு அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்'' எனவும் கூறினார். (3-253)

## 'எம்மை வாழ வைத்தவர்கள்' நூல் வெளியீடு நாளை

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதியின் 'எம்மை வாழ வைத்தவர்கள்' நூல் வெளியீட்டு விழா கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமியின் ஆசியுரையும், யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் சு.சயந்தன் வரவேற்புரையையும், யாழ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் கு.வேல் சிவானந்தனின் தலைமையுரையும், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், எழுத்தாளருமான சி.சிவசரவணபவன் (சிற்பி) வாழ்த்துரைகளையும் வழங்க வுள்ளனர்.

மேலும் யாழ். பல்கலைக் கழகபேராசிரியர்களான மா.சின்னத்தம்பி, கலாநிதி க.சிவபாலன் மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கம் நூலை வெளியிட்டு வைக்க வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் முதற்பிரதியை பெறவுள்ளார். (எ)

## ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.9

அண்மையில் வெளியான ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் வருமாறு:-

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

ஜெராட்ஜெயந்தன் ஜெவ்றிஜானுஜன்-164, தவராஜா உசந்தினி-155, இராசேஸ்வரன் இராணுஜா- 152, கிறிஸ்ரிஜெயந்தன் ஜீன்ஜென்சியா- 151, செல்லத்துரை சஜிந்தன்-148. (3)

## நினைவுப் பேருரை வெள்ளியன்று

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரையின் நினைவுப் பேருரை நிகழ்வு யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ''எம்மை நாமே செதுக்குவோம்'' என்ற தலைப்பில் நினைவுப் பேருரையை சொல்லின் செல்வர் இரா.செல்வ வடிவேல் நிகழ்த்தவுள்ளார். (எ)

## ஐயாத்துரை ஞாபகார்த்த விருது

யாழ். இலக்கிய வட்டம் வழங்கும் கவிஞர் அரியாலையூர் வே.ஐயாத்துரை ஞாபகார்த்த விருது- 2011 முல்லைத்தீவைச் சேர்ந்த கி.பி.நிதுன் எழுதிய ''துயரக்கடல்'' நூலுக்கு வழங்கப் படுகிறது. இந்த நூலுக்கான பணப்பரிசையும், விருதையும் ஐயாத்துரையின் மகனும் யாழ் இலக்கிய வட்ட உறுப்பினரு மான கவிஞர் ஐ. வரதராசா வழங்கவுள்ளார். எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இலங்கை இலக்கியப் பேரவையின் விருது வழங்கும் நிகழ்வில் இவருக்கான விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ)

**TV கள் மலிவு விற்பனை**

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில்
SONY Wega Flat TVகள் 21"-12500/=,
29"-15000/= புதிய Lcd 22"-17000/= DVD(L.S)
4000/= Box, குளிர்சாதனப்பெட்டிகள்,
கசெற் றேடியோக்கள்
தொடர்புகளுக்கு: 077 044 0570 (அப்பளம்)
சோனி றேட்றசென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.
(23885) (6.45)

**வேலையாள் தேவை**

டொபாஸ் புடைவையகத்துக்கு கணக்காளர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
டொபாஸ்,
இல.70, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 4743
(23830)(5-6-7)

**அறிவித்தல்**

28.09.2012 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் 19 ஆம் பக்கத்தில் என் னால் வெளியிடப்பட்ட வலி. கிழக்கு பிரதேச சபையின் உப அலுவலகம் உரும்பிராய் முதலாம் வட்டாரம் கற்புலம் வீதி, 9/3, 9 /4, 9/5, 11 ஆதன இலக்கம் தொடர்பாக பிரதேசசபையின் அனுமதியின்றி என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம் பரம் தவறு என்பதை இத்தால் வெளிப் படுத்துகிறேன்.

ச. சோதிமணி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
23883) (45.7)

**இன்று**
**சிவக்கொழுந்து**
**நினைவுதினம்**
**09.10.2012**



அமரர்
**சுவாமிநாதர் சிவக்கொழுந்து**

நாவலடி - ஊரிக்காட்டைச் சேர்ந்த
அமரர்
சு. சிவக்கொழுந்து அவர்களின்
31 ஆம் நாள் நினைவு தினம்
இன்று செவ்வாய்க்கிழமை
அனுஷ்டிக்கப்படுகிறது.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
குடும்பத்தினர்.
(தி/4005) (45.6)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

வலிகாமம் கல்வி வலயத்தினால்
2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த
அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட
எமது பாடசாலை அதிபர்



**திரு.நாகலிங்கம் சிவநேசன்**
அவர்களையும்
வலிகாமம் கல்வி வலயத்தினால்
2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த
ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்ட
எமது பாடசாலை ஆசிரியர்



**திருமதி சகுந்தலா ஜெயசீலன்**
அவர்களையும்
அதிமேதகு ஜனாதிபதி அவர்களின்
அதிஉயர் விருதான "ஆசிரியர்
பிரதீபா பிரபா" விருதினை 09.10.
2012 இன்று 10.00 மணிக்கு மீபே
கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி
நிலையத்தில் பெறுவதையிட்டு
மனதார ப் பாராட்டி வாழ்த்துகின்
றோம்.

**- பாடசாலைச் சமூகம்.**
யா/தாவடி இந்துத்தமிழ்க் கலவன் பாடசாலை,
(23861)(2-7) கொக்குவில்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பெருமதிப்புக்குரிய அதிபர்
**திரு.வ.நடராசா SLPS 2-I**
அவர்கள் சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா"
விருதினை இந்த வருடமும் பெறுகின்றார். இன்றைய
தினம் மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி
நிலையத்தில் விருது பெறும் எமது அதிபரைப்
பாராட்டி வாழ்த்தி அகமகிழ்கின்றோம்.
**பாடசாலைச் சமூகம்.**
**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.**
(23090) (2-7)

**அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்**



**கே.கே.விக்னேஸ்வரன்**
(இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி)
தீவகத்தின் தலைத்தீவாம் மண்டைதீவின் மைந்தனும்
தீவகப் பெரியார் கைலாசபிள்ளை (சேமன்) யின்
புத்திரனும் யாழ்.இந்துவின் புகழ் பூத்த பழைய
மாணவனும் வாடிக்கையாளரது நன்மதிப்பையும்
வங்கியினது தங்கப்பதக்கத்தையும் பெற்ற
விக்கி அண்ணா பதவி உயர்வு பெற்றதனையிட்டு
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.
**எஸ்.குகதாசன்**
(ஒப்பந்தகாரர்)
(23892) (2-7)

**மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.கிட்டிணன் சிறீகாந்தராசா**
கிளி/கறுக்காய்த்தீவு
மகா வித்தியாலய ஆசிரியர்
இன்று (09.10.2012)
"பிரதீபா பிரபா" விருது
பெறுவதையிட்டு மனதாரப்
பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும்
பல விருதுகள் பெற வாழ்த்தி
நிற்கின்றோம்.

அறிவாலயம்,
இமையாணன், உடுப்பிட்டி.
(தி/3890)(2.7)
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாண்புமிகு ஜனாதிபதியிடமிருந்து 09.10.2012 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு மீப்பேயில் உள்ள தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் விருதினைப் பெறும் எமது பாடசாலையின்



அதிபர் திருமதி லூடேவிக்கா மகேஸ்வரன்



ஆசிரியை திருமதி றாஜினி தயாபரன்

Best Wishes

ஆகியோரை மனப்பூர்வமாக வாழ்த்துவதோடு மேலும் பல விருதுகள் பெற்று சேவையில் சிறந்து உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சமூகம், சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

(23843)(7.8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் (ஊரதீவு) மண்ணின் மைந்தனும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான பொதுப்பிரதிநிதியும் சமூக சேவையாளரும் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபருமான

உயர் திரு S.K. சண்முகலிங்கம் J.P

அவர்களை தீவக வலயத்தின் சிறந்த அதிபராக தெரிவு செய்யப்பட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் இன்று (09.10.2012) புதன்கிழமை ஆசிரிய பிரதீபா பிரபா விருது பெறுவதை முன்னிட்டு அவரைப் பாராட்டி வாழத்துகின்றோம்.

Best Wishes

நடராசா கோணேஸ்வரன் (சிவா),
7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

(23845)(7.8)

ALUMNI ASSOCIATION
JATI
JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (09.10
பண்டாரநாய
மண்டபத்தில் ந
பட்டம்ங்கள் பெ
நிறுவன பழைய ம
பட்டம் பெறு
பல பட்டங்கள்

### HNDA

திரு. அமிர்தநாதன் சுகந்தன் | திருமதி. அனிற்றா தேவதாஸ் | செல்வி. ஆன் நிலுஜா ஸ்ரனிஸ்லஸ் செல்வநாயகம் | செல்வி. அனுஷா நவரத்தினம் | திரு. அருளானந்தம் விமல்ராஜ் | திரு. அருஞ்செல்வம் அகிந்தன் | திரு. அருந்தவநேசன் நவஜீவன் | செல்வி. பகீரதி பஞ்சலிங்கம் | திரு. பாலசுப்பிரமணியம் பார்த்தீபன் | திரு. ... பொன...

செல்வி. ஜெயகிருஷ்ணா பாலச்சந்திரன் | திரு. ஜெயவிக்கிரமன் ஜெயரட்ணம் | செல்வி. கஜந்தினி வல்லிபுரம் | செல்வி. கஜேந்தினி பாலச்சந்திரன் | திரு. கந்தப்பசேகரம் பாலரமேஸ் | செல்வி. கபிதா தியாகராஜா | திரு. கதிரவேலு புஸ்பகரன் | திரு. கதிரவேலு மதுசாந்தன் | செல்வி. கோசலா குணநேசன் | திருமதி. கிருஷ்ணரயனி பார்த்தீபன் | செல்... க...

திருமதி. நிஷா ரமணன் | செல்வி. நிதர்ஷா சத்தியதாஸன் | செல்வி. நித்தியா கணேசானந்தராசா | திரு. பேரம்பலம் பேரின்பமதன் | திரு. பொன்னப்பு நிரஞ்சன் | செல்வி. பிறேமலா சிவம் | செல்வி. பிரியதர்சினி பரம்சோதி | செல்வி. பிரியதர்சினி நித்தியகுமார் | திரு. இராசதுரை தர்சன் | திரு. இராசையா சுகந்தன் | திரு. ...

செல்வி. சோபிதா சிவலோகநாதன் | திரு. சொர்ணலிங்கம் யோகீஸ்குமார் | திரு. சிறீரவீந்திரன் பிரசன்னா | செல்வி. சுபாஜினி முருகையா | திரு. தங்கவேல் சுஜேஸ்மன் | திரு. தங்கவேல் கரிகாலன் | செல்வி. தர்மிளா புவனேந்திரன் | செல்வி. தர்சிகா செல்வராஜா | திரு. தவயோகராசா தீபன் | திரு. தவராசா சுதாகர் | திரு. ...

செல்வி. கேதுஷா மயூரகிரிநாதன் | செல்வி. மோகனாந்தி பாலேந்திரன் | செல்வி. பிரதீஷா ஜெயநாதன் | திருமதி. ரதிவதனா இலட்சுமணன் | செல்வி. ரேகா சிவபாலன் | திருமதி. ஸாருஜா சிவசுதன் | செல்வி. சிந்துஜா அமிர்தலிங்கம் | செல்வி. ஸ்ரீவித்தியா தியாகரட்ணம் | திரு. தேவதாஸ் சுஜந்தன் | செல்வி. யாழினி பாலேந்திரா

### HNDIT

செல்வி. சயனுதா யோகராசா | செல்வி. சுகன்யா யசோகரன் | செல்வி. சுகிர்தா சிவராசா | செல்வி. சுதர்சினி தம்பாபிள்ளை | செல்வி. வைஷ்ணவி ஜெயராஜா | செல்வி. வாசுகி சதாசிவம் | திரு. வாசுதேவசர்மா துளசீதரன்

### HNDE

செல்வி. ஆரணி பரராஜசிங்கம் | செல்வி. கீதபாலினி சபாரத்தினம் | செல்வி. ...

செல்வி. தேவநாயகி விஸ்வலிங்கம் | திருமதி. விசாகினி காண்டீபன்

### HNDBS

திரு. [illegible] | செல்வி. [illegible] தனையசிங்கம் | திருமதி. [illegible] ரெனார் | செல்வி. கம்சனா கருணாநிதி | செல்வி. நிலோஜினி சூசைபேணார்ட் | செல்வி. நிரோஜிகா மகேந்திரா | செல்வி. பிரதீபா சச்சிதானந்தம் | செல்... செல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் பிரதீபா பிரபா விருதுபெறும் நல்லாசிரியரே வாழ்க!

(2012.10.09) இன்று செவ்வாய்க்கிழமைமுற்பகல் 10 மணிக்கு மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெறும் "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது வழங்கும் விழாவிலே நல்லாசிரியர் விருதுபெறும் எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி செல்வநாயகி எட் வின் பீரிஸ் அவர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் உளமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று நீடுழி வாழ்ந்து நற்சேவை ஆற்ற இறை ஆசிர் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யா / பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை.

(23333)(2-7)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் இன்று சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெறும் எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி **சசிகலா சின்னராசா** அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெறவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யா / தம்பாட்டி அ.த.க.வித்தியாலயம், ஊர்காவற்றுறை.

(சி/4015)(2-7)

## அக மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



எமது அதிபர்

**உயர்திரு. தனபாலசிங்கம் ரவீந்திரன்**

அவர்கள் இன்று (09.10.2012) மீப்பேயில் ஜனாதிபதி முன்னிலையில் சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருது பெறுவதையிட்டுப் பூரிப்படைகின்றோம்.

வேதாரணியேஸ்வரரின் வேந்தெனத் திகழ்ந்து
திண்ணிய சிந்தையொடு திறமையான முகாமையால்
நிறைவாய் அனைத்தையும் நிவர்த்தி செய்து
நல்லதிபர் என்ற நற் கணிப்புடனே
பிரதீபா பிரபா விருதினைப் பெறும் வேளை
அகவை ஐம்பதில் அக மகிழ்வுடனே
அன்பாய் அனைவரும் வாழ்த்துகின்றோம்
மேன்மேலும் புகழ்பெற்று நீடுழி வாழ்ந்திடவே
இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.



Best Wishes

**ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யா/சுரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்.

(25635)(2-6-7)

...2012) செவ்வாய்க்கிழமை கொழும்பு
...ா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு
...பெறும் HNDA, HNDM, HNDIT, HNDBS
... யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல்
...வர் சங்க அங்கத்துவ மாணவர்களையும்,
...ஏனைய மாணவர்களையும், மேலும்
...ற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

# ALUMNI ASSOCIATION

**JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE**

**No.665/2, BEACH ROAD, JAFFNA.**

Tele.:- 021 3206542 E-mail:- jatialumni@gmail.com

Web site:- www.jatialumni.org

SLIATE



...சுந்தரம் ...பெருமாள் | திரு. கணேசலிங்கம் நஷாந் | திரு. குணரத்தினம் ரகுநாதன் | திருமதி. இந்திரவதனா செல்வரதன் | திரு. ஐயாத்துரை ஜெயசந்திரன் | செல்வி. ஜனந்தினி சொர்ணலிங்கம் | செல்வி. ஜயந்தினி குணரத்தினம் | செல்வி. ஜீவகி தவராஜலிங்கம் | செல்வி. ஜீவந்தினி அமிர்தானந்தராஜா | செல்வி. ஜீவராணி கிருஸ்ணமூர்த்தி | செல்வி. ஜெறின் ஸ்ரீபன்



...சுப்பிரியா ...ங்கம் | திரு. குமாரசாமி சுஜீவன் | திரு. லீனஸ் றஞ்சன் மரியதர்சன் | திரு. லட்சுமிதாசன் கஜானன் | செல்வி. மாலினி புண்ணியமணியம் | செல்வி. மைதிலி கனகசபை | செல்வி. மைவிழி முத்துராஜா | திரு. நீலப்பிள்ளை மயில்வாகனம் | செல்வி. நிலானி கனகரத்தினம் | செல்வி. நிலேஸ்கா நேசதுரை | செல்வி. நிரோசினி கதிர்காமசிங்கம்



...ந்திரன் ...தன் | செல்வி. சஜீபா சிவஞானம் | செல்வி. சங்கீதா முத்துக்குமாரசாமி | திரு. செல்லத்துரை தயாதரன் | திரு. சண்முகவேல் உதயணன் | திரு. சின்னத்துரை றஜீத் | திரு. சிவலிங்கம் அம்சுமால் | செல்வி. சிவரதி சிவராசா | திரு. சிவசண்முகநாதன் மயூரன் | செல்வி. சிவதர்சினி நாகேந்திரன் | திருமதி.சோபனஅம்பிகை பகீரதன்




...வந்திரம் ...ன் | செல்வி. வைதேகி கருணாகரன் | செல்வி. வாமலோஜினி அம்பலவாணர் | திரு. வீரசிங்கம் தயாளன் | திரு. வேலழகன் விமலன் | திரு. விஜியரட்ணம் பாலசுப்பிரமணியம் | திரு. வில்சன் பியந்தன் | செல்வி. அபிராமி தவேஸ்வரன் | செல்வி. ஜதூஷா ஸ்ரீதரன் | செல்வி. கார்த்திகா ராதாகிருஷ்ணன்



செல்வி. கோபிகா இரத்தினசிகாமணி | திரு. குகதாசன் டர்சன் | செல்வி. கஸ்தூரி புவனேந்திரன் | செல்வி. கவிதா செல்வரத்தினம் | செல்வி. கீர்த்தனா சேயானந்தம் | செல்வி. கௌசிகா இரத்தினசிங்கம் | செல்வி. மேரி சாளினி கனியூட் | செல்வி. மேகலா ஜெகதீசன் | செல்வி. மேகலா சிவஞானம் | திரு. நகுலேஸ்வரன் சஞ்ஜீவன்



...களசல்யா ...ராஜா | செல்வி. ஜெயப்பிரியா ஜெயரட்ணம் | திரு. பத்மநாதன் பாஸ்கரன் | திருமதி. வைதேகி இராகுலன் | செல்வி. துளசினி இராசநாயகம் | திரு. சலமன் நெல்சன் | திருமதி. சுலக்சனா சசிகுமார் | செல்வி. சிந்துஜா பத்மநாதன் | செல்வி. சிவராகினி சிவலிங்கம் | செல்வி. தர்சிகா தர்மலிங்கம் | செல்வி. தர்ஷிகா நவரட்ணராஜா

(7,10)



...பிரதீபா ...த்தினம் | செல்வி. புவனேஸ்வரி வைத்திலிங்கம் | திரு. சிவசுப்பிரமணியம் வாமதீபன் | செல்வி. சுபாஜினி ஆறுமுகம் | செல்வி. குஜிதா [illegible] | செல்வி. தனுஸாந்தினி [illegible] | செல்வி. தயாரூபி [illegible] | திரு. தெய்வேந்திரம் கோபிநாத் | திரு. வேலாயுதன் ராஜாராம் | செல்வி. விதுஸ்ரா றெனுசியா மரியதாஸ் | செல்வி. யசோதினி திருவரசுராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOGIS
(Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)



## EXHIBITION
**Cakes and Sugar Craft**
**Sponsored By : Pettah Essence Suppliers**
19, Dam street, Colombo 12,
104, Hospital Road, Jaffna





**கேக் கண்காட்சி 11.10.2012**
**யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்**
**PROF வசந்தி அரசரட்ணம்**
அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது



திருமண கேக் அலங்காரங்கள்
பிறந்தநாள் கேக் அலங்காரங்கள்
ஐசிங் பூக்களின் அலங்காரங்கள்
இன்னும் வித்தியாசமான கேக்களின் அலங்கார கண்காட்சி 11 ஆம் திகதி வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகி 12ஆம், 13 ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிவரை மு.ப. 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடை பெறும்.

நடைபெறும் இடம்:
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் முன்பாக) (சி/3869)(6-7-8)


## தவறிவிட்டது
அழகேந்திரராசா ஜோண் வெஸ்லி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (811574813V) 05.10.2012 அன்று யாழ்.நகருக்கும் குருநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:0778035579

## மரண அறிவித்தல்
08.10.2012 உதயனின் 6A பக்கத்தில் பிரசுரமான கிருஷ்ணர் செல்லம்மா எனும் பெயரை உடைய மரண அறிவித்தல் தவறுதலாக பெயர் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. இறந்தவர் பெயர் கிருஷ்ணர் இராசம்மா என்பதாகும். எனவே இந்த அறிவித்தலை கிருஷ்ணர் இராசம்மா எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்

பன்னாலை, தெல்லிப்பழை. தகவல்: த.கருணாகரன் (பெறாமகன்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று மீப்பேயில் அமைந்துள்ள தலைமைத்துவ கல்வி அபிவிருத்தி நிலையத்தில் அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடமிருந்து ஆசிரிய பிரதீபா பிரபா விருதினைப் பெறுகின்ற எமது வித்தியாலய ஆசிரியை திருமதி. ஜெ.ஹு.கமலராணி கிறிஸ்ரிரஞ்சன் அவர்கள் மேன்மேலும் உயர் விருதுகள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம் யா/மட்டுவில் தெற்கு
சரஸ்வதி வித்தியாலயம் சாவகச்சேரி.
(21551)(3.7)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24* 02*1929
மறைவு 26* 09 *1997
அமரர்
**வேலுப்பிள்ளை நற்குணராசா**

ஆண்டுகள் பதினைந்து நீங்கள்
அவனி நீத்துச் சென்று
அரன் பத அணியானீர்
வீற்று எம் அருகிருந்து
விதித்த நற் சிந்தையெல்லாம்
போற்றி எம் பொலிவிற்கு
பொக்கிசங்கள் ஆக்கினோம் நாம்
பாக்கியமே எங்கள் கோனே
படர் நிதம் பரனடி நீங்கள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,

## மரண அறிவித்தல்
### திருமதி மாலதி சிவகுமார் (சூட்டி)



கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் 65/144, CROW ISLAND Colombo- 15 மற்றும் நாவலடிலேன் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டமாலதி சிவகுமார் (சூட்டி) நேற்று முன்தினம் (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.


அன்னார்காலஞ்சென்றவர்களான மார்கண்டேசகர் தேவமனோகரி தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவகுமாரின் அன்பு மனைவியும், மாதுளன், சகானா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், மகாதேவன், மோகனதாஸ், ஜெயமோகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌரி, புவனாம்பிகை, வதனாம்பிகை, யோகாம்பிகை, மல்லிகா, காலஞ்சென்ற அம்பிகா, ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.10.2012 இன்று முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி லேன்,திருநெல்வேலி. மேற்கு. (23889) (45.7)

தகவல்:
கணவர், குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்
## செல்லையா அன்பழகன்

புத்தூர் வடக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அன்பழகன் கடந்த 03.10.2012 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொன்னுத்துரை தம்பதியரின் மருமகனும், யசோதாவின் அன்புக் கணவரும், அமிலாஸ், அனுபாயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, காலஞ்சென்ற சுப்ரமணியம் மற்றும் தவராணி, காலஞ்சென்ற வானதி, காண்டீபன் (கனடா), குமுதினி (ஜேர்மனி), பன்னீர்செல்வன் (ஆசிரியர் இடைக்காடு ம.வி.) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), ஸ்ரீரதம், சௌந்தரராஜன் (ஜேர்மனி), மகிந்தினி (கனடா), உமயாள் (நி.தி.உ. யாழ். பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அரிகரன், அஜிதா, கோகிலன், தீசன் (ஆசிரியர்), சேந்தன் (கனடா), பூங்குன்றன் (S.I), மிர்தா (ஆசிரியர்) மயூரன் (ஜேர்மனி), நவீனா (ஜேர்மனி), தனுஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், கபீரா (கனடா), கஸ்வீனா (கனடா), பருசியா, பருசயன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (10.10.2012) புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 3001 341/2252

வைரவர் [illegible] புத்தூர். (23888) (45.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில்
தரம் ஐந்து புலமைப்பரிசில்
பரீட்சையில் 150 புள்ளிகள் பெற்ற
அருளானந்தம் மதுமிதன்
அவர்களை பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல
பட்டங்கள் பெற்று பல்லாண்டு
காலம் சிறப்புற வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
அப்பப்பா, அப்பம்மா



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### ந.பரமேஸ்வரன்



இந்து அன்னையின் மைந்தனும்
கணித ஆசானுமாகிய
திரு.ந.பரமேஸ்வரன்
அவர்களின் விசேட
ஆற்றலுக்காக
"ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது
பெற்று யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரிக்கு பெருமை
சேர்த்துள்ளார். இவர் இன்று
அதிமேதகு ஜனாதிபதி
அவர்களால் விருது
வழங்கப்படுவதை அகமிக
மகிழ்ந்து பாராட்டுகின்றோம்

ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(23901)(15.14)



மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்.

## MC Leod Hospital, Inuvil.

### செயல் ஆர்வம்

வடமாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு
JOHANNITER நிதி உதவியுடன் MOTIVATION
நிறுவனத்தினால் WHEELCHAIR இலவசமாக
வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

| | |
|---|---|
| வவுனியாவில் | ORHAN |
| மன்னாரில் | CFD |
| யாழ்ப்பாணத்தில் | JAIPUR CENTRE |

மேலதிக விபரங்களுக்கு:-
Mr.S. MURALI,
MOTIVATION.
Telephone Number:- 0778281136

(23903)(3.7) நிர்வாகம்



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் காசிலிங்கம் கதிர்வேல்

திங்கள் ஒன்று சென்றதுவோ
திருமுகம் மறைந்ததன் பின்,
அனவரதம் வாடுகின்றோம்
ஆறுதல் அடையாமல்
மனிதத்தின் மாண்புருவே
மகிழ்க, அரன் அடியின் கீழ்

எமது குலதெய்வம் அமரர் காசிலிங்கம் கதிர்வேல் அவர்கள் காலமான செய்தி கேட்டு, உடனிருந்து ஆறுதல் அளித்தோர், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், மலர்வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர், தொலைபேசி, தொலைநகல் மூலம் துயர் பகிர்ந்தோர் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம். இன்று (09.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 67/21,
பிஸ்கால் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

(23841) (45.6)


## குருதிக் கொடை

ஹற்றன் நஷனல் வங்கியின் அச்சுவேலிக் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு நாளை காலை 8 மணி தொடக்கம் அச்சுவேலி வாடிக்கையாளர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வங்கி வாடிக்கையாளர்களும் வங்கி ஊழியர்களும் குருதிக்கொடை வழங்கவுள்ளனர். குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணியைச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(10)

## சடலம் மீட்பு

சுழிபுரம் பகுதியில் நேற்று பிற்பகல் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தொல்புரம் மத்தி சுழிபுரத்தைச் சேர்ந்த வேதநாதன் (வயது-65) என்பவரது என தெரிவிக்கப்படுகின்றது.

மகன் மற்றும் மருமகளுடன் வசித்து வந்த இந்த முதியவர் நேற்று மாலை வீட்டின் பின்புறமாக தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் பதில் நீதிவான் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

தானும் மனைவியும் பாடசாலை முடித்து வீடு திரும்பிய போது தந்தையால் முழங்கால் நிலத்தில் முட்டும்படியாக தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாகவும் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தாம் தகவல் கொடுத்ததாகவும் அவரது மகன் தெரிவித்தார்.

(10-4)

## தவறிவிட்டது

இல.93, வன்னேரிக் குளம், கிளிநொச்சி என்ற முகவரியைக் கொண்ட முத்தையா - சசிகுமார் ஆகிய எனது வங்கி ஏ.ரி.எம். காட்டுகள் (COM. BANK,NSB,BOC), தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டைகள் என்பன கொழும்பில் இருந்து யாழ். வந்த வேளை (நேற்று) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0778448704 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்து உதவ


## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (09.10.2012) அலரிமாளிகையில் ஜனாதிபதியிடம் "பிரதீபா பிரபா" விருது பெற்று எமது கல்லூரிக்கு புகழைச் சேர்த்த அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்.



முதல்வர் திரு.
அருணாசலம் கயிலாயபிள்ளை
(சிறந்த அதிபருக்கான விருது)



திரு.குணம் சசிதரன்
(சிறந்த இடைநிலை பிரிவு
கணித பாட ஆசிரியர்)



திரு. இராசையா நித்தியானந்தன்
(சிறந்த உயர்தரப்
பிரிவு புவியியல் பாட ஆசிரியர்)

இவர்களை மேலும் பற்பல விருதுகளைப் பெற்று அதிபர், ஆசிரியப் பணியில் உயர்ச்சி அடைய வாழ்த்துகின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி. (23850)(9.14)
Best Wishes
ஆசிரிய சகோதரத்துவம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

"உயர்வு கண்டீர் உவகை கொண்டோம்"



வண பிதா.ம.ஜேம்ஸ்சிங்கராயர்.
அதிபர்.



திரு.பே.வி. நடராஜா
ஆசிரியர்

இவ்வாண்டுக்கான ஆசிரியர் பிரதீபா பிரபா விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள எமது அதிபர் வண பிதா. க. ஜேம்ஸ்சிங்கராஜா அவர்களும் ஆசிரியர் பே.வி. நவராஜா அவர்களும் 09.10.2012 இன்று கௌரவ ஜனாதிபதி தலைமையிலான நிகழ்வில் இவ்விருதினை பெற்றுக் கொள்கின்றார்கள் இவர்களை அக மகிழ்ந்து வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்துறை.

(F/4018)(5.14)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி
### சௌமியாதேவி விசுவலிங்கம்



ஆசிரியர் பிரதீபா பிரபா விருது வழங்கும் விழா - 2012 ஜனாதிபதியால் 09.10.2012 இன்று ஜனாதிபதி விருது பெறும் யா/ தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி ஆசிரியை
**திருமதி சௌமியாதேவி விசுவலிங்கம்**
அவர்களை அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
அத்துடன் எங்கள் கல்லூரியில் விருது பெறும் ஆசிரியர்கள் திருவாளர் சுப்பிரமணியம் சயந்தன் திருமதி சரஸ்வதி ஜெயக்குமார் ஆகியோரையும் அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
ச.லக்ஸ்மன், ச.லக்ஸ்சன், ச.கம்சிகா
யா/ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிமேதகுரு ஜனாதிபதி அவர்களால்
பிரதீபா பிரபா. விருதைப் பெறும்



யா/மீசாலை வீரசிங்கம்
மத்திய கல்லூரியின் அதிபர்
திரு வே. விநாயகமூர்த்தி
B.A (Hons) Dip. in. Ed, M.Ed, SLPS 2. I)



யா/ மீசாலை வீரசிங்கம்
ஆரம்பப்பாடசாலை அதிபர்
திரு. க. கந்தசாமி
( SLPS 2. II)

ஆகிய இருவரையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குரு பிரதீபா விருதைப் பெறும் எமது
கல்லூரியின் ஆசிரியர்களான



திருமதி ரோ. பரம்சோதி
( B.A , Dip. in. Ed, SLPS I)



Best Wishes
திருமதி பே. சிவசுப்பிரமணியம்
(S.L.T.S.I)

ஆகிய இருவரையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

ஆகியோர் யாழ்.பல்கலைக்கழகத்தில் M.Ed (merit)
பட்டம் பெற்றமையையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.



திருமதி இ.விஜயரத்தினம்
( B.A (hons) Dip in. Ed,(merit) , SLTS . I)



திருமதி சா. ஸ்ரீவத்சன்
( B.A (hons) Dip in. Ed, (merit)
, SLTS 2 . I)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, யாழ். மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AVIVA NDB யை கையேற்கிறது AIA குழுமம்





AIA குழுமம் AVIVANDB காப்புறுதி நிறுவனத்தின் 92.3 வீத பங்குகளை கையேற்றுள்ளது.

AVIVA NDB காப்புறுதி நிறுவனத்தின் கையேற்கப் படாத எஞ்சிய 7.7 வீதப் பங்கு ஏனைய தனிப்பட்ட பங்குதாரர்களின் பங்கைப் பிரதிபலிப்பதுடன் கொழும்பு பங்குச்சந்தையில் அட்ட வணைப்படுத்தப்படுகிறது.

NDBயுடனான பிரத்தியேக bancassurance உடன் படிக்கை உள்ளிட்ட NAWM பங்கினை விற்கும் கொடுக்கல், வாங்கல்களுக்காக AIA வினால் செலுத்தப்பட வேண்டிய நிகர மொத்த விலை 109 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இந்த கையேற்பு இலங்கை வர்த்தகம், செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் என்பனவற்றின் தரத்தையும், இலங்கை சந்தையில் அதனுடைய வலுவான நிலைமையையும் பிரதிபலிக்கின்றது.

சந்தை மூலதனப்படுத்தலின் அடிப்படையில் AIA உலகின் ஐந்தாவது பாரிய காப்புறுதி நிறுவனமாகத் திகழ்கிறது. இக்குழுமத்தில் ஓர் அங்கத்தினராக வருவதன் மூலம் வாடிக்கையாளர்கள் அந்நிறுவனத்திலிருந்து அதிகூடிய வலு, பாதுகாப்பு மற்றும் நிச்சயத்தன்மை என்பவற்றை அனுபவிக்கக்கூடியவர்களாக இருப்பர்.

இக்கையேற்பு மூலம் உடனடியாக AIA இலங்கையின் இரண்டாவது பாரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமாக தன்னுடைய செயற்பாட்டை ஆரம்பிக்கும்.

AVIVA NDB அதன் அனுபவமுள்ள முகாமைத்துவக் குழு உயர்தரத்தைக் கொண்ட ஊழியர்கள், முகவர்கள் மற்றும் கவர்ச்சிகரமான நீண்டகால bancassurance உறவு என்பவற்றின் மூலம் AVIVA NDB காப்புறுதி நிறுவனம் தொலைநோக்கை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சந்தையில் வலுவான பங்களிப்பை மேற்கொள்வதற்கு அடித்தளம் ஒன்றை அமைத்துக் கொண்டுள்ளது என்று AIA குழுமத்தின் தலைவர் மார்க் டக்கர் கூறினார்.

AVIVA NDB யின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஷா ரூவ்ப், ''எமது நிறுவனம் படிப்படியாக வலிமை பெற்று இலங்கையில் ஆயுள் காப்புறுதியில் இரண்டாவது இடத்தைப் பெருமளவுக்கு வளர்த்துள்ளது.

AIA குழுமத்தில் அங்கத்தினராக வரக்கிடைத்தமை மூலம் இலங்கையில் முதன்மை காப்புறுதி நிறுவனமாக வரவேண்டும் என்ற எமது இலக்கைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது'' என அவர் மேலும் தெரிவித்தார்.

# CDB நிறுவனம் தொடக்கி வைத்துள்ள வங்கிகளுக்கிடையிலான நிதிப் பரிமாற்றம்



கொமர்ஷல் வங்கி ஊடாக வங்கிகளுக்கு இடையிலானகொடுப்பனவு முறைமை (SLIPS) வசதியை பெற்றுக் கொள்ள CDB நிறுவனம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது

இலங்கையில் வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறைமையின் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினராக வங்கியல்லா நிதி நிறுவனங்களின் பிரிவில் இவ்வசதியை பெறும் முதலாவது நிறுவனம் CDB நிறுவனம் ஆகும்.

SLIPS என்ற இந்த முறையை இணையத்தை அடிப்படையாகக் கொண்டு வங்கிகளுக்கு இடையிலான இலத்திர னியல் நிதிமாற்றத்தைச் செய்கிறது. (EFT)

எவ்வித தாள்களினதும் தேவைப்பாடின்றி ஒரு கணக்கில் இருந்து இன்னுமொரு கணக்கிற்கு நிதி பரிமாற்றங்களை இம்முறைமையால் மேற்கொள்ள முடியும்.

கணக்குகளில் வரவு, செலவு வைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காசோலைகள், கொடுப்பனவு கட்டளைகள், வவுச்சர்கள் மூலம் எழுதும் அவசியமின்றி இலத்திரனியல் பதிவுகளால் மேற்கொள்ள முடியும்.

CDB நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம தொழிற்பாட்டு அதிகாரியுமான ரொஷான் அபேகுணவர்தன கூறுகையில், அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினராகியதன் மூலம் ஒரு கணக்கில் இருந்து இன்னுமொரு கணக்கிற்கு நிதியை மிகவும் நம்பகரமான மற்றும் பாதுகாப்பான முறையில் மாற்றுவதற்கு எமக்கு வாய்ப்பளிக்கின்றது.

சாதாரணமாக நிதி மாற்றல் ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு கிளை மட்டத்தில் காணப்படும் நீண்ட வரிசையினை குறைப்பதற்கு SLIPS ஆனது CDB நிறுவனத்திற்கு வசதியளிக்கின்றது.

# ஈ–சுவாபிமானி விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்

ஆக்கபூர்வ டிஜிட்டல் பிரயோகங்களை அடையாளங் காண்பதும் பாராட்டுவதும் இதன் நோக்கமாகும் என்று இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரித்துள்ளது.

விருது வழங்கும் நிகழ்வை நான்காவது தடவையாகவும் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் ஒழுங்கு செய்துள்ளது. ஈ-அரசாங்கம் மற்றும் நிறுவனங்கள், ஈ-சுகாதாரம் மற்றும் சுற்றாடல், ஈ-கற்றல் மற்றும் கல்வி, ஈ-பொழுது போக்கு மற்றும் விளையாட்டு, ஈ-பண்பாடு மற்றும் மரபுரிமை, ஈ-விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், ஈ-வர்த்தகம் மற்றும் வாணிபம், ஈ- உட்சேர்க்கை மற்றும் பங்குபற்றல், எம்- உள்ளடக்கம் (கையடக்கத் தொலைபேசி உள்ளடக்கம்) ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

www.eswabhimani.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக மேலதிக விவரங்களையும் விண்ணப்பப்பத்திரத்தையும் பெறமுடியும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினம் 2012 ஒக்டோபர் 15 ஆம் திகதியாகும். 011 2 369 099, என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் esociety-@icta.lk என்ற மின் அஞ்சல் முகவரியோடு தொடர்பு கொள்வதன் மூலமும் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டு நிறைவுப் போட்டி

வவுனியா, ஒக்.9

தேசிய சேமிப்பு வங்கியின் 12ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாணத்தில் உள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றன.

தேசிய சேமிப்பு வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் எஸ்.கருணாகரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வட வலய வங்கிகளின் பொதுமுகாமையாளர் எஸ்.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு-

**கிரிக்கெட்**

முதலாமிடம் - அநுராதபுரம் தேசிய சேமிப்பு வங்கி, 2 ஆம் இடம்- பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி.

**உதைபந்தாட்டம்**

முதலாமிடம்- மன்னார் தேசிய சேமிப்பு வங்கி, இரண்டாமிடம்- கெக்கிராவ தேசிய சேமிப்பு வங்கி.

**கரப்பந்தாட்டம்**

முதலாம் இடம்- கெக்கிராவ தேசிய சேமிப்பு வங்கி, இரண்டாமிடம்- மன்னார் தேசிய சேமிப்பு வங்கி.

**வலைப்பந்தாட்டம்**

முதலாமிடம்- யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி, 2 ஆம் இடம் அனுராதபுரம் தேசிய சேமிப்பு வங்கி. (ம-400)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசைப் வென்ற பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவி செல்வி இராசத்தினம் டிசாந்தினிக்கு சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவகுமார் வழங்குகிறார். (த-29)

# சக்திவள பாதுகாப்பு திட்டம் ஆரம்பம்

மின்சக்தி எரிபொருள் மற்றும் கல்வி அமைச்சுக்கள் ஸ்ரீ லங்கா ரெலிகொம் மொபிடெலுடன் இணைந்து கிறீன் டேர்பைன் பாடசாலை சக்திவள பாதுகாப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, இலங்கை ரெலிகொம் மொபி டெலின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா ஆகியோர் ஆரம்ப நிகழ்ச்சியின் போது சமுகமளித்திருந்தனர். இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரணவக்க, நாம் இவ்வேலைத்திட்டத்தினை கடந்த மார்ச் மாதம் ஆரம்பித்தோம். 40 லட்சம் மின்பாவனையாளர்களில் 20 லட்சம் வாடிக்கையாளர்கள் இத்திட்டத்தில் எம்முடன் இணைந்துக் கொண்டார்கள்.

இவர்கள் இதனை தங்கள் சுயலாபத்திற்காக செய்யவில்லை. 3 மாதங்களில் 95 வாட் மின்சாரம் சேமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இன்னும் ஒரு வருடத்திற்கு செயற்படுத்தபடுமேயாயின் விக்டோரியா அணையின் கொள்ளளவு பெறுமதிக்கு நிகரான 400 வாட் மின்னலகுகளை எம்மால் சேமிக்க முடியும் என அமைச்சர் கூறினார்.



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையில் முதியோர்கள், வங்கியின் மூத்த பிரஜைகள் கடந்த முதலாம் திகதி நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் கிளை முகாமையாளர் க.றமேஷ்நேசன், மக்கள் வங்கியின் வட மாகாண உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.சுசிந்திரன் ஆகியோர் நினைவுப் பரிசில்களை வழங்கினார். (த-14)

# கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் கிளைகள் நாடு முழுவதும் விஸ்தரிப்பு



கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் நாடு முழுவதிலும் பல புதிய கிளைகள் மற்றும் சேவை நிலையங்களை அண்மையில் திறந்து வைத்தது.

அம்பாறை, குளியாப்பிட்டிய, மஹரகம, மாத்தறை, புத்தளம் மற்றும் வென்னப்புவ போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய சேவை நிலையங்களின் மூலம் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் நாடு முழுவதிற்குமான சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

அதன்மூலம் நாடெங்கிலும் உறுதியாக அதிகரித்து வரும் தனது வாடிக்கையாளர் தளத்துக்கு உயர்ந்த மட்டத்திலான சேவை மற்றும் நிபுணத்துவம் என்பவற்றை இலகுவான முறையில் பெற்றுக் கொள்வதற்கான வசதியை நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புதிய கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்டதன் மூலம் நாடெங்கிலும் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் பிரசன்னம் 27 இடங்களைக் கொண்டதாக அதிகரிக்கின்றது.

புதியதொரு கூட்டாண்மை திசையில் கால்பதித்த மூன்று வருடங்களுக்குள்ளேயே பெற்றுக்கொண்ட குறிப்பிடத்தக்க சாதனையாகவும், அதேநேரம் நிறுவனத்தின் வெற்றிக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் இது காணப்படுகின்றது.

நிலையான வைப்புகள், குத்தகை வசதி, வாடகைக் கொள்வனவு, தனிநபர் கடன்கள், தங்கக் கடன்கள், கல்விசார் கடன்கள், வீடு, காணி தொடர்பான சேவை மற்றும் நுண்நிதியியல் வசதி போன்றவை இந்த நிறுவனம் வழங்கும் சேவைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் பெரும்போக செய்கையில் கட்டாக்காலிகளின் அச்சம் தீரவில்லை

*யாழ்ப்பாணம், ஒக்.9*

***யாழ். குடாநாட்டில் அண்மையில் பெய்த மழையை அடுத்து பெரும்போகச் செய்கைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.***



**காரைநகரில்**

காரைநகரில் இந்த முறை சுமார் ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெற்று வருகிறன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வயல் நிலங்கள் பண்படுத்தப்பட்டு வரம்புகள் அமைக்கப்பட்டு வரும் நிலையில் கட்டாக்காலிகள் வயல் நிலங்களைச் சேதப்படுத்தி வருகின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வடமராட்சியில்**

வயல் காணிகள் அனைத்தும் நெல் விதைப்புக்கு ஏற்ற வகையில் பண்படுத்தப்பட்டு வருகின்றன.

அடுத்து வரும் மழையை தொடர்ந்து இந்தப் பகுதிகளில் விதைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அம்பன் விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

**செம்மணி, அரியாலை**

இந்தப் பகுதிகளில் வயல் நிலங்களைப் பண்படுத்துவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

செம்மணி, நெடுங்குளம், கொட்டுக்கிணற்றடி, நாவலடி, கட்டடி, பூம்புகார், பனையடி, கிழக்கு அரியாலை பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அரியாலை கிழக்குப் பகுதியில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் இன்னும் தீர்க்க முடியாத பிரச்சினையாக உள்ளது என்றும் விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில்விதைப்பை மேற்கொள்ள தயக்கம் காட்டுவதாகவும் கூறினர்.

கடந்த காலம் பெரும்போகத்தில் கட்டாக்காலிகளின் அச்சத்தால் இந்தப் பகுதியில் பெரும்போகம் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**நவாலி**

இந்தப் பகுதிகளில் பெரும்போகச் செய்கைக்கான ஆரம்ப கட்டப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றது.

இந்த விடயத்தில் கவனம் எடுக்காதவிடத்து கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்படும் என்றும் விவசாய சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகளுக்கு பராமரிப்புச் செலவைச் செலுத்தி மீள உரியவர்கள் பெறாதவிடத்து குறித்த கால்நடைகள் ஏலத்தில் விடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**தென்மராட்சி**

விவசாயிகள் பெரும்போகம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் கட்டாக்காலிகள் பெரும் இடையூறாக உள்ளன என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தில் யார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.(ம-8-9-100-135-250)

4 மாதங்களுக்குப் பதிலாக

# ஒரு மாதக் கொடுப்பனவு மட்டுமே முதியோருக்கு வந்து சேர்ந்துள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.9

நான்கு மாதங்களுக்குரிய கொடுப்பனவு கிடைக்கும் என்று எதிர்பார்த்த 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஒரு மாதத்துக்குரிய கொடுப்பனவு மட்டும் வந்துள்ளது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரில் 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கடந்த ஜூலை மாதம் தொடக்கம் மாதாந்தக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் ஜூன் மாதத்துடன் நிறுத்தப்பட்டு ஜூலை மாதம் தொடக்கம் ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கிராம அலுவலர்களால் வழங்கப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகத்தில் ஒரு மாதத்துக்கு உரிய கொடுப்பனவுத் தொகையே பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய நான்கு மாதங்களுக்குரிய கொடுப்பனவுத் தொகையாக 4 ஆயிரம் ரூபா கிடைக்குமென எதிர்பார்த்து அஞ்சல் அலுவலகங்களுக்குச் சென்ற முதியோருக்கு ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டதால் நிலுவைத்தொகை கிடைக்குமா என வினா எழுப்பியுள்ளனர்.

இதே வேளை, இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எழுந்து நடமாட முடியாத நிலையில் உள்ள சில வயோதிபர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு வாகனச் செலவாக கொடுப்பனவுத் தொகையை விட மேலதிகமாக செலவழிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவ்வாறான நிலையில் உள்ளோர் வங்கியில் கூட்டுக் கணக்கு ஆரம்பிக்க விண்ணப்பப் படிவம் வழங்கிய போதிலும் பயனாளிகளின் பெயருக்கு கணக்குப் புத்தகம் கிடைத்ததால் பயனாளி தவிர்ந்த வேறொருவர் இந்தக் கொடுப்பனவைப் பெற முடியாத நிலைமை உள்ளது.

இதனால் பயனாளியை வாகனத்தில் அழைத்து வந்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# இந்தியாவில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.9

குடும்பமாக இந்தியா சென்றபோது அங்கு பிறந்த குழந்தைகளுக்கு இலங்கையில் பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து திரும்பிச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கு இலங்கைப் பிறப்புச் சான்றிதழ் பெற வேண்டுமாயின் தத்தமது பிரதேச செயலகங்கள் அல்லது மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணபத்துடன் தாய், தந்தையரின் பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் ஆகியவற்றின் மூலப் பிரதிகள், குழந்தை பிறந்த வேளையில் பெற்றோர் இலங்கைப் பிரஜைகள் என்பதை உறுதிப்படுத்தும் பிரகடனப் படிவம், பிள்ளையின் இந்திய பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி, இந்தியாவிலிருந்து சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்துள்ளதை உறுதிப்படுத்தும் பிரிவு கிராம அலுவலரின் கடிதம், இந்தியாவில் வழங்கப்பட்ட அகதி அடையாள அட்டையின் பிரதி, இந்தியா சென்று திரும்பியதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தால் வழங்கப்பட்ட அட்டை, இலங்கைக்கு வந்த பிரயாண ஆவணங்கள், இலங்கை குடும்ப அட்டை போன்றவற்றின் மூலப் பிரதியும் இணைப் பிரதியும் இணைத்து மாவட்ட மேலதிக பதிவாளரிடம் கையளிக்க வேண்டும்.

இவை அங்குள்ள அதிகாரிகளால் சரி பார்க்கப்பட்ட பின்னர் மூலப் பிரதிகளை மீளப் பெற பிள்ளையின் தந்தை அல்லது தாய் உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து சமாதான நீதிவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளரின் கையொப்பம் பெறவேண்டும்.

வழங்கப்படும் ஆவணங்களை மாவட்ட மேலதிக பதிவாளர் நாயகத்தின் ஊடாக இலங்கைக்கான பிரதி தூதரக ஆணையாளருக்கு அனுப்பிவைப்பார். பிரதித் தூதரக அதிகாரிகள் விண்ணப்பத்தை பரிசீலனை செய்த பின்னர் பிள்ளைக்கு இலங்கைப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

இந்த விவரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவன உதவியுடன் இலங்கை அரசால் வெளியிடப்பட்டுள்ளது. (ம-9)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, தாளையடி, நாகர்கோவில் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களை நேரில் சந்தித்து அவர்களுடைய குறைநிறைகளை கேட்டறிந்தனர். (ம)



சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நடவடிக்கையின் போது சகல போக்குவரத்து வாகனங்களிலும் விழிப்புணர்வு சம்பந்தமான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் ஸ்ரிக்கரை வாகனம் ஒன்றுக்கு ஒட்டி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். (ம-17)

# ஜனநாயகத் தொழிற்கட்சியின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில்

ஜனநாயக தொழிற்கட்சி தனது செயல்பாடுகளை யாழ். மாவட்டத்தில் ஆரம்பிப்பது சம்பந்தமாக யாழ். மானிப்பாயில் ஞாயிற்றுக்கிழமை தலைவர் எஸ். சத்தியேந்திரா தலைமையில் கூடி தீர்மானித்துள்ளனர்.

தற்போது வட மாகாணத்தில் உள்ள மக்களிடையே சென்று புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்ற மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கான தீர்வை எட்டுவதற்கான செயற்பாடுகளை மக்களுடன் இணைந்து மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் தற்போது கடும் பிரச்சினைகளுக்கு யாழ். மாவட்டத்திலும் சரி வட மாகாண மட்டத்திலும் சரி முகம் கொடுத்து வருகின்றனர். இந்த விவசாயிகளுடைய பிரச்சினைகள் இனம் காணப்பட்டு அவர்களின் பிரச்சினைகளுக்கு விவசாயிகளுடன் கலந்துரையாடி தீர்வை எட்ட நடவடிக்கைளை மேற்கொள்வது என்றும் மகளிர் அமைப்புக்களை கிராம மட்டங்களில் உருவாக்கி தற்போது பரவலாக நடைபெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார் கட்சியின் செயலாளர் கே.ஸ்ரீரங்கநாதன். (ம-...)

# சமாதானத்துக்கு வந்த பகையாளர்கள் ஆலயத்துக்கு காணிக்கை செலுத்தினர்

## உறவுகளிடையே இடம்பெற்ற சண்டையில் திருப்பம்

வடமராட்சி, ஒக்.9

உறவினர்கள் மூவருக்கு இடையே ஏற்பட்ட மோதல் விவகாரம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்துக்கு வந்தபோது சமாதானமான முடிவுக்கு வந்துள்ளது. இந்தச் சமாதானத்தின் வெளிப்பாடாக நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள அம்மன் கோயிலுக்கு தலா ஆயிரம் ரூபா செலுத்தினர்.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் உறவினர்களான இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட கசப்பு அடிதடி சண்டையாக மாறி பொலிஸ் மூலம் பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு வந்திருந்தது.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது வாதியாக ஒரு குடும்பத் தலைவரும் பிரதிவாதிகளாக தந்தையும் மகனும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தனர். உறவினர்களான அவர்கள் ஏன் பிரிந்து நிற்க வேண்டும். இரு தரப்பினரும் சமாதானமாக சேருங்கள் என இரு தரப்புச் சட்டத்தரணிகளும் நீதிபதியும் புத்திமதி கூறினர். இதனை அடுத்து இரு தரப்பினரும் சமாதானமாகச் செல்ல விருப்பம் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் மாறிமாறி கைகளைப்பிடித்து செய்த தவறை மன்னித்துக் கொள்ளுங்கள். நாம் எப்போதும் ஆளுக்கு ஆள் உதவியாக இருப்போம். சமாதானமாக ஒற்றுமையாக வாழ்வோம் என்று மன்றில் பிரமாணம் செய்து கொண்டனர்.

சமாதானம் ஏற்பட்டதால் இரு தரப்பினரும் நீதிமன்ற வாசலில் உள்ள பரமேஸ்வரி அம்மன் கோவிலுக்கு தலா ஆயிரம் ரூபா செலுத்துமாறும் நீதிபதி பணித்தார். அவர்கள் அத்தொகையை கோயிலுக்குச் செலுத்தி பற்றுச்சீட்டை மன்றில் சமர்ப்பித்துச் சென்றனர். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றஜீவ்குமார் அதிரடிச் சதம் அரையிறுதிக்கு சென்றல்

யாழ்ப்பாணம்,ஒக்.9

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்துக்கான '20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்தக் காலிறுதி ஆட்டத்தில் ரஜீவ்குமார் பெற்ற சதத்தின் மூலம் யாழ். சென்றல் அணி, கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 35 ஓட்டங்களால் வீழ்த்திக்கு முன்னேறியுள்ளது.

இந்தக் காலிறுதி ஆட்டத்தில் சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணியின் றஜீவ் குமார் அதிரடியில் இறங்க, பந்துகள் பவுண்டரிக்கும், சிக்ஸருக்கும் பறக்கத் தொடங்கின. தன்னுடைய துடுப்பாட்ட விளாசலின் மூலம் இந்தச் சுற்றுத் தொடரின் முதலாவது சதத்தை றஜீவ்குமார் பதிவு செய்தார். அவரது சதத்தின் உதவியுடன் சென்றல் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 189 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் றஜீவ்குமார் 19 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களையும், கலிஸ்ரன் 22 ஓட்டங்களையும், பாலேந் திரா 19 ஓட்டங்களையும், அன்றூ 13 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிறாஸ் கொப்பர்ஸ் அணி சார்பில் பிரதீபன்,ஜனார்த்தனன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், கஜதீபன், கோகுலன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.



ஆட்டநாயகன் றஜீவ்குமார்

190 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

இதில் கஜதீபன் 55 ஓட்டங்களையும், காந்தசீலன் 29 ஓட்டங்களையும், பிரதீபன் 22 ஓட்டங்களையும் தனது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பில் றொகான் 2 இலக்குகளையும், விமலகாந்தன், சலிஸ்ரன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கி னையும் வீழ்த்தினர்.

சதம் அடித்து தனது அணியின் வெற்றிக்கு வழிகோலிய றஜீவ்குமார் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (ந-23-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு

பி.ப.3 மணி

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்

பி.ப.4 மணி

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் இமையாணன் விளையாட்டுக்கழகம்

★ ★ ★ (ந-23)

## சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

இலங்கைச் சதுரங்கச் சம்மேளனமும், யாழ்.மாவட்ட சதுரங்கச் சம்மேளனமும் இணைந்து நடத்திய கழகங்களுக்கு இடையிலான சதுரங்கத் தெரிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விவரங்கள் வருமாறு-

திறந்த போட்டி

முதலாமிடம்-ஜொலிஸ்ரார் 'நைட்ஸ்'அணி

இரண்டாமிடம்-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

மூன்றாமிடம் -உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி

பெண்களுக்கான திறந்த போட்டி

முதலாமிடம்-அளவெட்டி அருணோதயாக் கல்லூரி

இரண்டாமிடம்-தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி

மூன்றாமிடம் -உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

(ந-23)

## யாழ்ப்பாணக்கல்லூரி, உடுவில் மகளிர் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் சம்பியன்

யாழ்மாவட்ட பாடசாலைக் ஹொக்கிச் சங்கம் நடத்திய 14 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலாருக்குமான ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

முதலாவதாக இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனாகியது.**

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப் வாய்ப்புகள் வழங்கப் பட்டன. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

(ந-23)

## விண்மீன் வெற்றிக்கிண்ண உதைபந்து வீழ்ந்தது வீனஸ்: சம்பியன் கொக்கோகோலா



யாழ்ப்பாணம், ஒக்.9

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுமதியுடன் பாஷையூர் விண்மீன் அணியினர் உள்ளூர் அணிகளுக்கிடையே நடத்திய 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கொக்கோ கோலா அணி வெற்றியீட்டி சம்பியனாகியது. இந்த இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கொக்கோகோலா அணியை எதிர்த்து வீனஸ் அணி மோதிக்கொண்டது.

முதல் பாதி ஆட்டத்தில் கொக்கோகோலா அணி வீரன் கிசோ(மணியம்) தனது அணிக்கான முதலாவது கோலினைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் தமது அணிக்கான கோலினைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு வீனஸ் அணியினர் எதிர் அணியினரின் கோல் பரப்பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆயினும் இந்த முயற்சிகளை முறியடித்தது கொக்கோ கோலா அணி. அதேவேளை எதிர்அணியின் பலவீனமான பகுதிகள் ஊடாக உள்நுழைந்த கொக்கக்கோலா வீரர் சார்லஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை வீணாக்காது அபாரமான கோல் ஒன்றை அடித்தார். இதன் மூலம் கொக்கோகோலா அணியின் கோல்களின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்தது.

முதல்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது 2:0 என்ற கோல் கணக்கில் கொக்கோ கோலா அணி முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது , வீனஸ் அணி புதிய வியூகங்களோடு களமிறங்கியது. ஒரு புறம் தடுத்தாடிக் கொண்டு இடை இடையே முன்னேறித் தாக்கும் முயற்சிகளிலும் வீனஸ் அணியினர் இறங்கினர். ஆயினும் அந்த முயற்சிகளை என்ன விலை கொடுத்தேனும் தடுத்து நிறுத்துவது என்ற ஓர்மத்துடன் கொக்கோ கோலா அணி வீரர்கள் பதிலடி கொடுத்தனர். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

இரு அணியினரும் கோல்கள் அடிக்க பலமுறை முயற்சிகள் மேற்கொண்ட போதும் அனைத்து முயற்சிகளும் கைகூடாமல் போயின.

எனவே ஆட்ட நேர முடிவில் கொக்கோகோலா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியன் ஆனது. இறுதியாட்டத்தின் சிறந்த வீரர்களாக கொக்கோகோல அணி வீரன் சயந்தன் , வீனஸ் அணி வீரன் றைசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்த இறுதிப் போட்டியின் சிறப்பு நிகழ்வாக பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கு கரப் பந்தாட்டத்தை (செற்-அப் முறை ) அறிமுகப்படுத்திய தியாகு, மற்றும் வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட அணிகளின் முன்னாள் வீர, வீராங்கனைகள் ஆகியோர் கௌர[illegible] (ந-23)

## கயிறிழுத்தல் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.9

திருகோணமலை கயிறிழுத்தல் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தும் கயிறிழுத்தல் சுற்றுப் போட்டி எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் திருகோணமலையில் இடம் பெறவுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.(ந-23)

## உதைபந்தாட்டத் தொடர் 19ஆம் திகதி ஆரம்பம்

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தவிருக்கும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் என லீக்கின் செயலாளர் தெரிவித்துள்ளார்.





இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக போட்டிகளை நடத்தி வருகின்றன.

இந்த வகையில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான வவுனியா மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவுக்கு [illegible] தெரிவு அணியினர். (ந-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகளிர் '20/20' உலகக்கிண்ணம்

## ஆஸி. மீண்டும் சம்பியன்




மகளிர் '20/20' உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று ஆஸ்திரேலியா மகளிர் அணி மீண்டும் கிண்ணத்தை கைப்பற்றியது.

இலங்கையில் நடைபெற்று வந்த மகளிர் '20/20' உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிச்சுற்றில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின. கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடியது. தொடக்க வீராங்கனைகளாகக் களமிறங்கிய லான்னிங் 25 ஓட்டங்களும், ஹீலி 26 ஓட்டங்களும் எடுத்தனர்.

அதன்பின்னர் வந்த கேமரூன் நேர்த்தியாகவும், அதிரடியாகவும் ஆடினார். 34 பந்துகளை சந்தித்த கேமரூன் 5 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 45 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஆஸ்திரேலிய மகளிர் அணி 4 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்தலேகர் 23 ஓட்டங்களுடனும், பிளாக்வெல் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

**இதனையடுத்து 143 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 9 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களை எடுத்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பரிதாபமாகத் தோல்வியடைந்தது.**

இதனையடுத்து 143 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 9 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்கள் எடுத்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பரிதாபமாகத் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக அதிகபட்சமாக எட்வர்ட்ஸ் 28 ஓட்டங்களும், ஸ்டென்னிகன், சாரா டெய்லர் ஆகியோர் தலா 19 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் ஜெஸ் ஜொனாசன் 3 இலக்குகளையும் , ஜூலி ஹன்டர், லிசா ஸ்டெதலகேர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இங்கிலாந்தை 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய மகளிர் அணி மீண்டும் உலகக் கிண்ணத்தை கைப்பற்றி நடப்பு சம்பியன் பட்டத்தை தக்க வைத்தது.(ங)




Karbonn SMART CHAMPIONS LEAGUE TWENTY 20

## சம்பியன் லீக் திருவிழா இன்று கோலாகல ஆரம்பம்

சம்பியன் லீக்'20/20' கிரிக்கெட் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை தென்னாபிரிக்காவில்ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிஇன்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரைநடைபெறவுள்ளது. இந்தச் சுற்றுப் போட்டியின் முதன்மை சுற்றில் 10 அணிகள் விளையாடுகின்றன. ஐ.பி.எல். போட்டியில் முதல் 4 இடங்களை பிடித்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகிய 4 அணிகள் இடம் பெறுகின்றன.

இவை தவிர சிட்னி சிக்ஷர்ஸ், பெர்த் ஸ்கோர் செர்ஸ் (ஆஸ்திரேலியா), டைடான்ஸ், ஐவெல்ட் லயன்ஸ் (தென்னாபிரிக்கா) ஆகிய 4 அணிகளோடு தகுதிச் சுற்றில் வெல்லும் 2 அணி என்று மொத்தம் 10 அணிகள் விளையாடவுள்ளன. இந்தப் 10 அணிகளும் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவு:

கொல்கத்தா நைட்ரைடர்ஸ், டெல்லி டேர் டெவில்ஸ், பெர்த் ஸ்கோர் செர்ஸ், டைடான்ஸ், தகுதிச் சுற்றில் வெல்லும் அணி (இரண்டாம் பிரிவு)

'பி' பிரிவு:

சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், லயன்ஸ், சிட்னி சிக்ஷர்ஸ், தகுதி சுற்றில் வெல்லும் அணி (முதல் பிரிவு).

லீக் முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும்.13ம் திகதி முதன்மை சுற்று போட்டி தொடங்குகிறது. சாம்பியன் லீக் போட்டியின் தகுதிச் சுற்று நாளை முதல் 11ஆம் திகதி வரை நடைபெறும். தகுதிச் சுற்றில் 6 அணிகள் விளையாடுகின்றன. அவையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவில் ஹேம் சையர் றோயல்ஸ் (இங்கிலாந்து), ஆக்லாந்து ஆசஸ் (நியூசிலாந்து), சியால்கோட் (பாகிஸ்தான்) ஆகிய அணிகளும், 2வது பிரிவில் யார்க்ஷயர் கரனேஜ் (இங்கிலாந்து), ஊவாநெக்ஸ்ட் (இலங்கை), டிரினிடாட் மற்றும் டொபாக்கோ (மேற்கிந்தியத் தீவுகள்) ஆகிய அணிகளும் இடம் பெற்றுள்ளன. இரு பிரிவுகளிலும் முதல் இடத்தை பிடிக்கும் அணிகள் முதன்மை சுற்றுக்கு தகுதி பெறவுள்ளன.

(ங)

## ?விலகினார் மஹேல

### புதிய தலைவர் மத்தியூஸ்

'20/20' உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியுடனான படுதோல்வியை அடுத்து இலங்கை '20/20' அணியின் தலைவர் பொறுப்பிலிருந்து மஹேல ஜெயவர்த்தன விலகியுள்ளார். நேற்றுமுன்தினம் இறுதி போட்டி முடிந்தவுடன் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

''இலங்கை'20/20' அணியின் தலைவர் பதவியை இளைஞர் ஒருவருக்கு வழங்க வேண்டும்'' என்றும் தெரிவுக் குழுவை ஜெயவர்த்தன கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், '' இலங்கை '20/20' அணிக்கு இளம் தலைமையே தேவைப்படுகிறது. இந்த ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாட உள்ள இலங்கை அணியின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமை ஏற்பேன். அந்தத்தொடருக்கு பின்பு அணித்தலைவர் பதவியில் தொடருவதா இல்லையா என்பது பற்றி முடிவு எடுப்பேன். '20/20' அணியில் நான் விளையாட வேண்டும் என்று புதிய அணித்தலைவர் விரும்பினால் மட்டுமே விளையாடுவேன்'' என்று தெரிவித்தார்.

இதேவேளை மஹேல பதவி விலகியதை அடுத்து இலங்கை'20/20' அணியின் புதிய தலைவராக அஞ்சலோ மத்தியூஸ் பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ங)



Angelo Mathews



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோகோவிச் 'ஹட்ரிக்' சம்பியன்



சீன பகிரங்க ரென்னிஸ்போட்டியில் ஆடவர் பிரிவில் சம்பியன் பட்டத்தை மூன்றாவது முறையாக வென்று செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாதனை படைத்துள்ளார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் சீன பகிரங்க ரென்னிஸ் போட்டிகள் நடைபெற்றன. இந்தத்தொடரின் இறுதிப்போட்டியில் உலகின் இரண்டாம்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 7ம் நிலை வீரரான பிரான்சின் வில்பிரெட் சோங்காவை எதிர்கொண்டார். இந்தப்போட்டியின் முதல் செற்றில் இரு வீரர்களும் அபாரமாக ஆடினர். எனினும் டை-பிரேக்கரில் சிறப்பாக செயற்பட்ட ஜோகோவிச் 7-6 (7-4) என முதல் செற்றைக் கைப்பற்றினார். அதிரடியாக விளையாடி இரண்டாவது செற்றையும் ஜோகோவிச் எளிதாகக் கைப்பற்றினார். இதனால் 7-6, 6-2 என்ற செற் கணக்கில் சோங்காவை வீழ்த்தி ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

மூன்றாவது முறையாக சீன பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஆடிய ஜோகோவிச் மூன்று முறையும் பட்டத்தை வென்றுள்ளார். இதற்கு முன்னதாக கடந்த 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளில் ஜோகோவிச் சீன பகிரங்க ரென்னிஸ் பட்டத்தைக் கைப்பற்றியிருந்தார். மேலும் சீன பகிரங்க ரென்னிஸ் தொடரில் இதுவரை தான் ஆடிய 14 ஆட்டங்களிலும் ஜோகோவிச் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 6வது முறையாக சோங்காவுடன் மோதிய ஜோகோவிச், இதுவரை சோங்காவிடம் தோற்றதில்லை என்ற பெருமையையும் தக்கவைத்துள்ளார்.(ந)


## விற்பனைக்கு

கருங்கல் சல்லி விற்பனைக்குண்டு ½", ¾", 1", 1½", 4x4" தரமான கருங்கல் சல்லிகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0771467561.

## உடனடி வேலை வாய்ப்பு

KORD மிசின் அனுபவம் உள்ள இயக்குநர் தேவை. அனுபவம் திறமைக்கு எற்ற சம்பளம் 20,000/= ரூபாவுக்கு மேல் வழங்கப்படும்.

(சி/4034)(3.14) 0718474358

## போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள்

வெளிவந்து விற்பனையாகின்றன

தொகுப்பு: த.தவசேகர்

- கிராம சேவையாளர், முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி நூல் விலை 300/=
- கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் 300/=
- புதிய பொது அறிவு பொது உளச்சார்பு 400/=

பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா (வவுனியா) புத்தகசாலைகளில்

(சி/4019)(3.14)

## பஸ் விற்பனைக்கு

NA-xxxx தொடரிலக்கமுடைய, 54 ஆசனங்கள், டபிள்டோர் அரைச் சொகுசு கொண்ட நல்ல நிலையில் உள்ள அசோக் லேடிண்ட் (றூட்டுடன்) பஸ் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0778175822

(23834)(3.14)


## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி சின்னத்தம்பி



கரணவாய் சோளங்கனை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இளையதம்பி சின்னத்தம்பி நேற்றுமுன்தினம் (07.10. 2012) ஞாயிற்றுக் கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், மகேந்திரா (நோர்வே), இராகவன் (சுவிஸ்), பாலசரஸ்வதி ஆகி யோரின் பாசமிகு தகப்பனாரும், பரமசிவம், கலாரஞ்சனா தேவி, தாயாளினி ஆகியோரின் மாமனும், அங்கதன், நிலாங்கதன், நிலோஜினி, ஜீவகதன், கசிகதன், மாருளன், மிதுரா, ஜீவன், பிரதீபன் ஆகியோரின் பேரனும், இரத்தினம், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், நவீனா, பவின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவரசந்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோளங்கன்
மண்டான் ஏற்றம்
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

(சி/4036)(3.14)

தகவல்: குடும்பத்தினர்.

### ஜோகராசா இரத்தினம் (குட்டி)



வண்ணார் பண்ணை காரைக்காட்டு லேன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மன்னார் வீதி நெளுக்குளம் பாளாமைக் கள் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோகராசா இரத்தினம் (குட்டி) கடந்த (06.10.2012) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோகராசாவின் அன்பு மனைவியும், ஜோகதாஸ் (ஜோகன்), பற்ம தாஸ் (அப்பன்), சர்மிலா (காஜத்திரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2012) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெளுக்குளம்,
பாளாமைக்கள்,
வவுனியா.

(23919)(3.14)

தகவல்:
க. நாதன்
(அத்தான் / பிள்ளைகள்)


## விற்பனைக்கு

புதிய CD 200 XP- xxxx தொடரிலக்க Japan மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0771043006 (23842)(3.14)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு:-
00474794944
mathusena@yahoo.com

(23608)(15-6)

## கடை வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் இல.381(Railway குவாட்டஸ் முன்பாக) கீழ் மாடி, மேல் மாடியுடன் நான்கு கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0776786230
0041764116123
0774928096

(23888)(3.14)

## பொருளியற் கல்லூரி
### கிளை நிறுவனம்
### K.K.S. றோட், இணுவில்

A/L - 2013, 2014

இந்துநாகரிகம்

ஆசிரியர்- N.T. தரன்

புதன், வெள்ளி

நாளை ஆரம்பம்- 10.10.2012 (புதன்)

உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

Note- சித்தன்கேணி BARATHY கல்வி நிறுவனத்திலும் A/L 2014, 2013 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

## SUN BRITISH BUSINESS MANAGEMENT COLLEGE

FRENCH CLASSES

வவுனியா மண்ணில் முதன் முதலாக French வகுப்புக்கள்

France, Canada, Swiss, Belgium போன்ற நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்லவுள்ளோர், மாணவர்கள் கற்றுக் கொள்ளலாம்.

நீண்டகால அனுபவமும், திறமையும் வாய்ந்த பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.

வகுப்புக்கள் ஆரம்பம் 11.10.2012 வியாழன் பி.ப 3 மணி

No.26, APPALO HOSPITAL UPSTAIR, STATION Rd. VAVUNIYA

T.P : 077 9789456 / 024 2226649


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் செல்லம்மா



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.60 தட்டையன் மலை முத்தையன் கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்லம்மா (07.10. 2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (09.10.2012) செவ்வாய்க் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்டையன் மனல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.60,
முத்தையன் கட்டு.

தகவல்:
கானதாசன் (மருமகன்)
0243248793

(சி/4024)(3.14)


## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் முதல்வரும் அன்னையின் பழைய மாணவருமாகிய

திரு.வீ.கணேசராஜா

அவர்கள்

ஆசிரியத்துவதீதுக்கான தேசிய விருதான "பிரதீபா பிரபா" விருதினைப் பெறுவதனை அகமகிழ்ந்து பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்றுப் பாரினில் புகழ்பெற வாழ்த்துகிறோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்

- பழைய மாணவர் சங்கம் -

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் என்றும் மதிப்புமிக்க எங்கள் அதிபர்

திரு.வீ.கணேசராஜா

அவர்களுக்கு 'பிரதீபா பிரபா' விருது இன்று 09.10.2012 அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பெறுவதை நினைந்து வியந்து மகிழ்ந்து பாராட்டுவதுடன் மென்மேலும் ஒப்பற்ற புகழ்பெற வாழ்த்துகிறோம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்

வாழ்த்துவோர் :
கல்வி சாரா ஆளணியினர்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org